Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
11/00
දිනමුරසු වාරමලර්
நவ.16–22,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 231

## கப்பலோட்டும் புலிகள்

## மாரிகாலப் போர்மேகம்



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## மறுக்கிறார் மீனா

## கொழும்புக்கு வந்த புலிகள்

# முரசம்

## இரட்டைக் குழந்தைகள்

**அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.**

*அரசியல் தீர்வும்
காலக்கெடுவும்
ஒட்டிப் பிறந்த
இரட்டைக் குழந்தைகள்!*

*வெற்றிகரமாக
வெட்டிப்பிரிக்க
சத்திரசிகிச்சை தேவை!*

*சத்திரசிகிச்சைக்கு
தகுதியான மருத்துவர்கள்
இங்கே இருப்பதாகத் தெரியவில்லை!*

*வெட்டிப் பிரிக்காமலேயே
இரட்டைக் குழந்தைகளை வைத்து
வேடிக்கை காட்டும்
மருத்துவர்களே இங்குள்ளனர்!*

*தகுந்த மருத்துவர்-
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்!
அவரை அழைப்பது தவிர
வேறு வழியில்லை!*

*ஆனால், அதற்கும்
இங்குள்ள மருத்துவர்கள்தான்
குறுக்கே நிற்கிறார்கள்!*

*நீதியமைச்சரால் சொல்லப்பட்ட
காலக்கெடு:
"பட்ஜெட்டுக்கு முன்னர்
தீர்வுத் திட்டம்
பாராளுமன்றம் வரும் என்பது!"*

*ஆனால் தீர்வு வரவில்லை;
உலகை திருப்திப்படுத்தும்
அறிக்கைதான் வந்தது!*

*"அடுத்த ஆண்டின்
ஆரம்பத்தில் தீர்வு வரும்!"
என்றார் அம்மையார்!*

*அண்மையில் ஒரு பேட்டியில்
"அடுத்த ஆண்டின் இறுதிக்குள்..."
என்று காலக்கெடுவை
மேலும் நீடித்திருக்கிறார் அம்மையார்!*

*எத்தனை சுலபமாக
காலக்கெடுவை
உருட்டிக்கொண்டு போகிறார்கள்!*

*அரசியல் தீர்வு யோசனை
தொடர்பாக ஆராய
ஆறுமாத கால அவகாசம்
கேட்டது எதிர்க்கட்சி!*

*"ஆறுமாதம் கேட்பது
அநியாயம்" என்றார்
மாண்புமிகு நீதியமைச்சர்!*

*நீதியமைச்சர் கூறியது
நியாயம்தான் என்றே
நாமும் நினைத்தோம்!*

*வீடு பற்றி எரியும்போது
பீடி பற்றவைக்க
நெருப்புக் கேட்பதுபோல,
பற்றி எரியும் பிரச்சனையில்
ஆறுமாத அவகாசம் கேட்பதா,
என்று கோபப்பட்டோம்!*

*ஆனால்- இப்போது-
மேதகு ஜனாதிபதி அவர்கள்
பன்னிரண்டு மாத
அவகாசம் கேட்டுவிட்டாரே!*

*அப்படியானால் ஐ.தே.கட்சிமீது
குற்றம் சாட்டியதிலும்
கோபப்பட்டதிலும்
அர்த்தமே இல்லாமல் போனதே!*

*நாட்டு மக்கள்
அரசியல் தீர்வு யோசனையை
ஆதரிக்கின்றனர் என்கிறார்கள்.
"சர்வசன வாக்கெடுப்பு
நாடெங்கும் நடத்தினாலும்
மக்கள் எம் பக்கம்!"
என்றும் கூறுகின்றனர்!*

*பின்னர் எதற்கு கணக்கம்?
யார் தடுக்கிறார்கள்?
வழங்கக்கூடிய
இறுதித் தீர்வை
எடுத்து வைக்க வேண்டியதுதானே!*

*இந்த ஆண்டின்
இறுதியில் எதிர்பார்க்கும்
மாற்றம் என்ன?*

*அப்போது மட்டும் என்ன
எதிர்க்கட்சி
ஒத்துழைக்கவாபோகிறது?*

*போரில் புலிகளை
வெற்றி கொள்வது மட்டும்தான்
கால நீடிப்பின் நோக்கம்
என்பது தெளிவு!*

*வென்ற பின்னர்
தரநினைக்கும் தீர்வு
எத்தகையதாக இருக்கும்?*

*கால நீடிப்புகளுக்கு
ஒத்து ஊதிவரும்
தமிழ் பேசும் கட்சிகளுக்கு
பதில் தெரிந்தால்.....
அறிய ஆவல்!*

■ ■

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்*

# ஆன்மீகம்

## "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான்"



இன்று நம் சமுகத்தில் தம்மைப்பற்றி மிகப் பெருமையாக பேசிக் கொள்பவர்களையே அதிகமாகக் காண்கின்றோம். சிறு விஷயமாகயிருந்தாலும் பெரிது படுத்திப் பேசுவார்கள். ஆனால்-

"தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."(லூக்கா 14:11)

இதன் மூலம் நாம் அறிவது என்ன? மனிதர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொண்டு ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்தல் வேண்டும். ஏனெனில் இறைவன் என்னும் வல்லமைபடைத்தோன் பெருமையுள்ளவர்களை எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

இன்றைய சமுகத்தில் மக்களை வழிநடத்த முன்வருபவர்களுக்கு இருக்கவேண்டிய பிரதான குணம் இது. ஆம். செய்யாதவைகள் பற்றி மட்டுமல்ல, செய்தவைகளைப் பற்றிக்கூட நாம் பெருமையாகப் பேசக்கூடாது.

"ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்"- (1 பேதுரு 5:6)

எனவே நாம் உயர்வு பெற வேண்டுமானால் தெளிந்த புத்தியுடன், தூய்மையான மனத்துடன், உயர்ந்த சிந்தனையுடன் உலகில் வாழ்வோமாக.

ஏ.பி.வி. கோமஸ்.

## பாவங்கள் உதிர்கின்ற வணக்கம்!

ஹஜ்ரத் அபூ உஸ்மான் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஸல்மான் (ரலி) அவர்களுடன் ஒரு மரத்தின் கீழிருந்தேன். அப்பொழுது அவர்கள் அம்மரத்தின் காய்ந்த கிளை ஒன்றைப் பிடித்து குலுக்கினார்கள் அதன் இலைகள் உதிர ஆரம்பித்தன. பிறகு என்னை நோக்கி "அபூ உஸ்மானே! நான் ஏன் இவ்வாறு செய்தேன் என்று என்னிடம் நீர் கேட்கவில்லையே?" என்றார்கள். "ஏன் செய்தீர்?" என்று நான் வினவியதற்கு அவர்கள் கூறியதாவது:

ஒரு தடவை நான் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஒரு மரத்தடியில் இருந்தேன். அப்பொழுது நபியவர்கள் இவ்வாறே ஒரு காய்ந்த மரக்கிளையைப் பிடித்துக் குலுக்கினார்கள். நான் உங்களிடம் கேட்டது போன்றே என்னிடமும் கேட்டார்கள். அதற்கு நான் "ஏன் இவ்வாறு செய்தீர்கள்?" என்று வினவியபோது,

"ஒரு முஸ்லிம் உளூச் செய்து, அதனை அழகிய முறையில் செய்து ஐந்து நேரத் தொழுகைகளையும் நிறைவேற்றினால், இந்த இலைகள் உதிர்வது போன்று அவருடைய பாவங்கள் உதிர்ந்து விடும்." என்று கூறிய நபி (ஸல்) அவர்கள், "பகலின் இரு ஓரங்களிலும் இரவின் ஒருபகுதியிலும் தொழுகையை நிலைநிறுத்துவீராக! நிச்சயமாக நன்மைகள் பாவங்களைப் போக்கி வருகின்றன. உபதேசங்களை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இது ஓர் உபதேசமாகும்." என்ற திருக்குர் ஆனின் ஆயத்தை ஓதிக் காட்டினார்கள். **நூல்:- தர்கீப்**

இஷுபா மஹ்மூட், அட்டாளைச்சேனை-09.

## கவிதைப் போட்டி இல.228



### மலர்

தேசத்தின்
விதைகள் சூழ-ஒரு
மலர்!

சுதா- கெங்கல்ல, கண்டி.

### பரிசுக்குரிய கவிதை

### நாளை...?!

கைச்சிறையில் களிப்புற்று...;
இதழ் விரிக்கும்... சிட்டுக்களே.!!
நாளை-
மெய்சிறைச் சிறையில்....
இருப்பதற்கு..;
இது-
மெதுவான ஒத்திகையோ...?!

எம்.எப்.பாத்திமா றுவைசா- அநுராதபுரம்.

### அனாதை எமக்கு அதுபோதும்

உறவிழந்தோம், ஊணிழந்தோம்,
உறக்கமதும் தானிழந்தோம்;
அநாதரவாய் ஆகாமல்.
அணைத்த கரம் தொடர்ந்தெமக்கு
ஆதரவாய் இருப்பதற்கு,
கொடுத்து வை இறைவா,
கொடும் போரை தணியவைத்து!

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி, மட்டக்களப்பு.

**இடம்உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### எமக்கு வேண்டியது...!

போரில்லாப் பூமி வேண்டும்!
புலம்பெயரா வாழ்வு வேண்டும்!
ஆயுதங்கள் பேசா
அமைதி வேண்டும்!
அங்கே எம்மிளந்தளிர்கள்
அச்சமின்றி வாழ வேண்டும்!

பஷீரா முஹைடீன்- பாலையூற்று, திருகோணமலை.

### யார் தாய்

இது போர்த்தாய் தத்தெடுத்த
அகதிக் குஞ்சுகளா?
இல்லை,
பாசத் தாய் ஈன்றெடுத்த
அன்புப் பிஞ்சுகளா??

செல்வி ப்ரியநேசி- களுத்துறை (தெற்கு)

### கறுப்பு- சிவப்பு.

அன்பிற்கு நிறம்
இல்லை!
கருணைக்கு வயசு
இல்லை!

சுபா வரன்-கண்டி

### இழப்பு யாரால்?

அள்ளிக் கொஞ்சும் பிஞ்சுகளே
அணைத்து மகிழும் பிஞ்சுகளே
ஷெல்லும் குண்டும் இங்கே வெடித்தால்,
இத்தனை இன்பமும் இழப்போம் நாங்கள்!

கா.பூபாலபிள்ளை-கொழும்பு-06.

### பாதுகாப்புச் சட்டம்!

அம்மா...!
ஐந்து பேருக்கும்
ஐடென்டி உண்டோ....?


தர்மகுலசிங்கம் பிருந்தா-வின்சன் மகளிர் உ/த பாடசாலை- மட்டக்களப்பு.

### நம்பிக்கைகள்

தொடர்கதையாய் துயரங்கள்
தொலைந்து போயின செல்வங்கள்
எஞ்சின என் உயிர்ச் செல்வங்கள்
என்றும் உண்டு நம்பிக்கைகள்!

தயாளினி பரமசாமி- நு/பரிசுத்த திரித்துவக் கல்லூரி, நுவரெலியா.

## கவிதைப் போட்டி இல.231



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 22.11.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.231
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' மனதை உருகவைக்கிறது.

காதிலபூ கந்தசாமியரின் 'தீபாவளி பட்டாசுகள்' கற்பனை கற்கண்டாய் இனித்தது. சிந்தியா கேள்விகளைத் தெரிவு செய்வதிலும் வல்லவர் போலும். தொடரும் உனது அசத்தலான சேவைக்கு கை குலுக்கல் கலந்த பாராட்டுக்கள். வாழ்க எங்கள் முரசு! வளர்க உனது சேவை!!

செல்வன் சி.ஸ்ரீரவி, மெல்புர, சிலாபம்.

முரசே!

நீ தங்கப் பேழை தாங்கி வரும் ஜெற் விமானம். உன்னைக் காண ஒரு நிமிடம் தாமதித்தால், எங்கள் இதயம் பரிதவிக்கிறது. பட்டுக்கோட்டை பிரபாகரின் ஆரம்பமே படுஜோர், பூலான் அல்ல அவள், அதிரடி பூலான் தேவி.

கே.நௌஸாட், நிந்தவூர்-19.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

- ★ த.சலோமி, மட்டக்களப்பு.
- ★ எம்.அவுப், மாத்தளை
- ★ மா.மகேஸ்வரன், ஆறுமுகத்தான் குடியிருப்பு.
- ★ முஹம்மது ஹஸனி, கல்முனை-07.
- ★ ஏ.சி.எம்.மஹ்ஹரூர், பலாங்கொடை.
- ★ ஏ.நிஷாந்தன், பெரியநீலாவணை.
- ★ பாலகிருஷ்ணன், புத்தளம்.
- ★ ஆர்.நித்தி, வாழைச்சேனை.
- ★ எம்.மூஆஸ், ஹெம்மாத்தகம.
- ★ வடிவேல் சுலோச்சனா, நுகேகொட.
- ★ அ.அச்சுதன், மூதூர்.
- ★ ஏ.சி.பிராஸ், அக்கரைப்பற்று.
- ★ பி.ரி.அப்துல்மனஃப், அட்டாளைச்சேனை.
- ★ கி.ரங்கன், அமெரிக்கா.
- ★ முத்துச்சாமி விமல், பூண்டுலோயா
- ★ ரவிக்குமார் விஜயகுமாரி, கல்முனை.
- ★ கே.உதயநந்தன், மிருசுவில்.
- ★ த.தீபா, ஆரையம்பதி.
- ★ பிரியா மூர்த்தி, கேகாலை.
- ★ ஏ.எல்.நிப்ஹாஸ், அக்கரைப்பற்று-03.
- ★ வி.விமலநாதன், கரவெட்டி.
- ★ க.இரத்தினேஸ்வரன், டோகா, கட்டார்.
- ★ ஏ. றினோஸியா, சென்றல் பிளேஸ்,திஹாரிய.
- ★ எம்.எஸ்.ஏ.சாஹ்ஜஹான், காத்தான்குடி-06.
- ★ பா.மணிவாசகம், கனடா.
- ★ இ.ரவீந்திரகுமார், ஃபிரான்ஸ்.
- ★ மு.துங்கராஜ், ஃபிரான்ஸ்.
- ★ எஸ்.சத்தியேந்திரன், இலண்டன்.
- ★ கா.உதயபாலன், அவுஸ்திரேலியா.
- ★ மு.தினேஷ், சவுதி அரேபியா.
- ★ வி.எட்வேட், சிங்கப்பூர்.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**





இனிய மலரே!

நானோ ஆண்டு இரண்டு படிக்கும் சின்னஞ் சிறு மாணவி. இந்த முரசை என்னால் மறக்க முடியாது. வாசகர்சாலையில் என்னையும் சேர்த்துக் கொள்வீர்களா?

இம்மலரில் என்னைக் கவர்ந்தது பாப்பா முரசு. படித்ததும் தூக்கிப் போட மனமில்லாது, பாதுகாத்து வைத்துக் கொள்கிறேன். என்னால் தபால் அட்டையில் ஒழுங்காக எழுத இயலாது. என் அம்மாவைக் கொண்டு எழுதி அனுப்புகிறேன்.

ஆர்.ரம்யா (ஆஷா), நிந்தவூர்-20.

அன்பின் முரசே!

நீ வாரா வாரம் சுமந்துகொண்டு வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. சுவைக்கச் சுவைக்க திகட்டாதவை. அதிலும் குறிப்பாக ரசிகன் தரும் 'கொள்ளை ராணி பூலான்தேவி' தொடர் என் இதயத்தை கொள்ளை கொண்டுவிட்டது. கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் 'உடைந்த இரவு' அருமையிலும் அருமை. மற்றும் சிந்தியாவின் பதில்கள் சிரிக்கவும்,சிந்திக்கவும் வைக்கின்றன.

திருமதி எட்வேட் பொன்னம்மா, பெரிய நீலாவணை-01.

அரசியல் என்றாலே எனக்கு அலர்ஜி. ஆனால் முரசை வாசித்த பின்னர்தான் அரசியலைப் பற்றியும் ஆராய வேண்டுமென்ற ஆர்வம் பிறக்கின்றது. இன்றைய அரசியல்வாதிகளின் வண்டவாளங்களை துணிச்சலாகக் கூறும் பத்திரிகை முரசு என்று அடித்துக் கூறலாம்.

பாத்திமா அஸ்மியா, புத்தளம்.

**அறிவித்தல்**

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

## அறிக்கையும் புரளியும்

அரசியல் தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் வந்தது என்ற செய்திகள் கண்டதும் ஒரே குழப்பமாக இருந்தது. 'நாடாளுமன்றத்தில் நடந்த நாடகம்' மூலம் இராஜதந்திரி உண்மையை எடுத்துரைத்தார். அறிக்கை சமர்ப்பித்ததைக் கண்டிக்க பாராளுமன்ற தமிழ்க் கட்சிகள் தவறியதும், அதனை மறைக்க ஐ.தே.கட்சியை கண்டித்துப் பேசியதும் மற்றொரு நாடகம். பாராளுமன்றம் சென்று வாதிட படித்தவர்கள், சட்டம் அறிந்தவர்கள் தேவை என்று கூறிய கூட்டணியினர், அறிக்கை நாடகத்தில் பங்கு பற்றியது ஏன்? அறிக்கையை தீர்வு யோசனை என்று இரா.சம்பந்தனும் கூறியிருந்தார். இவர்கள்தானா அரசியல் வல்லுநர்கள்?

எம்.இதயராசா, திருக்கோணமலை.

## மறந்த கட்சிகள்

அரசியல் தீர்வு தரமாட்டோம் என்று சொல்வதைவிட, தருவோம்,தருவோம் என்று தம்பட்டம் அடித்தபடி,ஏமாந்தோர் என்ற பட்டத்தை தரப்போவதுதான் கொடுமை. எங்கள் தமிழ்க்கட்சிகள் தங்கள் மௌனங்கள் மூலம் தமிழர்களையும் ஏமாற்றி, தங்களையும் ஏமாற்றுகின்றன. நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள் தன் கடமையைச் செய்கிறார். தமிழ்க்கட்சிகள் தங்கள் கடமையை மறந்துவிட்டன.

உ.சிவயோகன், பட்டிருப்பு.

## தோல்விகண்ட தெரிவுக்குழு

உலக அரங்கில் தமிழ் பேசும் மக்களின் குரல் சுருதி குறைந்து ஒலிக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தமிழ்க்கட்சிகள் தங்கள் தனித்துவத்தைத் தொலைத்து நிற்கின்றன. அரசாங்கம் தமிழ்க் கட்சிகளின் வாயை அடைக்க சலுகைகளை வழங்கிக்கொண்டு, உலக அரங்கில் உரத்துப் பேசுகிறது. அதற்கு எதிர்க்குரல் கொடுத்தால் சலுகைகள் பாழாகுமோ என்று ஊமைகளாய் உள்ளன தமிழ்க் கட்சிகள். பாராளுமன்றத் தெரிவுக்குழு தோல்வி கண்டுவிட்டதைக்கூட வெளிப்படுத்த சக்தியற்ற கட்சிகள் தேர்தல் மேடைகளில் கத்துவதற்கே இலாய்க்கானவை.

இ.பாக்கியநாதன், மட்டக்களப்பு.

## பொய் அறிக்கை வெளுத்தது

'முரசு' வெளியிடும் விமர்சனங்கள் மற்றும் செய்திகள் விரைவாக உறுதிசெய்யப்படுவதுதான் 'முரசின்' நேர்மைக்கு உரம் சேர்க்கின்றன. கூட்டணியினரின் முகமூடியையும், அரசியல் நேர்மையீனத்தையும் வெகு தெளிவாக 'முரசு' இனம் காட்டி வருகிறது. "முரசு விஷமமாகக் கூறுகிறது, அவதூறு செய்கிறது" என்றெல்லாம் மறைமுகமாக குற்றம் சாட்டினார்கள். 'கிழக்கை மூன்றாகப் பிரிக்க கூட்டணித் தலைமை இணக்கம். கிழக்கு கூட்டணி எம்.பி.கள் பிணக்கு' என்று முரசு எப்போதோ செய்தி தந்து படித்தோம். கூட்டணிக்குள் பிரச்சனை என்று தீயசக்திகள் பொய்ப்பிரசாரம் என்று கூட்டணி அறிக்கைவிட்டது. அந்த அறிக்கையின் சாயம் போய்விட்டது. சமீபத்தில் மட்டக்களப்பு கூட்டணிக் கிளையினர் கிழக்கை மூன்றாக பிரிக்க எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கைவிட்டனர். அக் கூட்டத்தில் கிழக்கு எம்.பி.களும் பிரசன்னமாகி இருந்தனர் என்ற செய்தியை ஏனைய பத்திரிகைகளில் கண்ணுற்றோம். எங்கள் 'முரசு' பொய் சொல்லாது என்று பூரித்தோம். தூற்றுவோர் தூற்றட்டும். உண்மையை உரைக்கவும்!

ஆ.பூவராகன், காரைதீவு.

# மரபுப் படைபோல காணப்படும் புலிகளின் அணிகள்
# படையெடுப்புக்கு தயாராகும் பாதுகாப்பு படைகள்!
# வன்னியில் சூழ்ந்துள்ள போர் மேகம்

**வ**ன்னியில் மாரிக்கால மேகமும், போர் மேகமும் சூழ்ந்து கொண்டுள்ளன. கடும் மழை கொட்டி வருகிறது. அதனால் குளங்கள் பல நிரம்பி வழிகின்றன. இடம்பெயர்ந்த மக்களின் தங்குமிடங்களும் சேதமாகி வருகின்றன.

இதேவேளையில் வவுனியா-யாழ் சாலையில் தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில், அச் சாலையில் இருந்து கிழக்குப் புறமாக பத்துக் கிலோமீட்டர் தள்ளி இருக்கும் பழைய கண்டி வீதியூடாக முன்னேறிச் செல்ல படையினர் திட்டமிடுவதாகத் தெரிகிறது.

அப்பாதை காட்டு வழியாக இருப்பதால் டாங்கிகள், கவச வாகனங்கள், புல்டோசர்கள் சகிதம் முன்னேறக்கூடியதாக இருக்கும் என்று படைத்தரப்பு நினைக்கிறதாம்.

### இரு முனைகள்

அப்பாதையில் கடும் எதிர்ப்பைக் காட்ட நினைத்து, வவுனியா யாழ் சாலையில் இருந்து தமது அணிகளை புலிகள் நகர்த்தினால், புளியங்குளத்தில் உள்ள படைகள் அந்தச் சாலைவழியாக முன்னேறக் கூடியதாக இருக்கும் என்றும் படையினர் நினைக்கக்கூடும்.

இரண்டு பாரிய முனைகளால் முன்னேறும்போது, புலிகளின் ஆட் பலம் அதற்கு ஈடுகொடுக்க இயலாது என்ற கணிப்பின் அடிப்படையிலேயே முயற்சிகள் நடக்கின்றன.

ஆனால் வன்னியில் இருந்து எமது நிருபர் அனுப்பிய செய்தியின்படியும், கிடைத்த தகவல்களின்படியும், இரு முனைகளிலும் படையினரை எதிர்கொள்ளத் தயார் நிலையில் புலிகள் உள்ளனர் என்றே தெரிகிறது.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியைப் பொதுமக்கள் பாவனைக்கு புலிகள் தடை செய்துள்ளனர். கரிப்பட்டமுறிப்பில் உள்ள படையினருடன் அவ் வீதியை ஒட்டியதாகவே மோதல்கள் நடந்து வருகின்றன.

### மரபுப் படையணிகள்

மாங்குளம் பகுதியில் புலிகள் முழுமையான மரபுப்படைகள் போலவே காட்சி அளிக்கின்றனராம்.

பிக்கப் மற்றும் கனரக வாகனங்களில் பொருத்தப்பட்ட 82 எம்.எம் மோட்டார்கள், டாங்கிகள் கவச வாகனங்கள், புல்டோசர்கள் போன்றவை சகிதம் சீருடைகளுடன் பெருந்தொகையான புலிகள் காணப்படுகின்றனராம்.

கொழும்பில்,இருந்து வன்னிக்குச் செல்லும் ஒருவருக்கு, பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் நிற்கிறோமா, அல்லது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நிற்கிறோமா என்று சந்தேகம் வந்துவிடும். பாதுகாப்புப் படையினர் போலவே புலிகளின் அணிகளும் மரபுப் படையணிகளாக காட்சியளிப்பதால் வித்தியாசம் தெரியவில்லை என்கிறார்கள்.

கரப்புக்குத்தி, விஞ்ஞான குளம் ஆகிய பகுதிகளில் கைப்பற்றப்பட்ட கனரக வாகனங்கள் மற்றும் ஆயுதங்களும் வன்னியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

'ஜயசிக்குறுய்' படையினரின் முன்னரங்க நிலைகள்மீது புலிகள் ஷெல் தாக்குதல்கள், மற்றும் சிறு குழுக்களாக முன்னேறி தாக்குதல்கள் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதிக்கு அண்மையாக உள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் உள்ள படை அரண்களையும் புலிகள் தாக்கினார்கள். இத் தாக்குதல்தான் மாங்குளப் பகுதியில் மோதல் என்று கூறப்பட்டது. 07.11.97 அப் பகுதியில் நடந்த மோதலில் புலிகள் தரப்பில் ஒருவர் பலியானார்.

### மூன்றாம் கட்டம்

புலிகளின் மாவீரர் தினத்துக்கு முன்பாக மூன்றாம் கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கவே படையினர் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

காட்டுப் பாதையூடாக படையணிகள் செல்லுமானால், இரண்டு மரபுப்படையணிகளுக்குள் நடைபெறும் சமர்போல களநிலவரம் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' படையினர்மீதான தாக்குதல்களில் புலிகளால் கைப்பற்றப்பட்ட மரபுப் படைகளுக்குரிய ஆயுதங்களும், கனரக வாகனங்களும் படையினருக்கு எதிராக மாறி நிற்கின்றன.

காட்டுப்பாதையூடாக செல்லும்போது மரபுப் படையணிகளுக்குரிய ஆயுத தளபாடங்களை புலிகளிடம் மேலும் இழக்காமல் இருப்பதுதான் படையினருக்கு உள்ள முக்கிய பிரச்சனையாக இருக்கும்.

எனவே வவுனியா-யாழ் சாலையில் முன்னேறுவதற்கான புலிகளின் தடையைத் தளர்த்தும் தந்திரங்களிலேயே படையினர் கவனம் செலுத்துவர். உட்பாதையால் முன்னேற முயல்வதுபோல போக்குக் காட்டிக் கொண்டு,சாலை வழியாக மற்றொரு அணி நகர முயற்சிக்கும் என்றும் கருதப்படுகிறது.

## வடக்கில் புதிய ஆசிரியர்கள்
## கல்விச் சேவைகள் ஆணைக்குழு அனுமதி!

**வ**டக்கில் உள்ள பாடசாலைகளுக்குப் புதிதாக ஆயிரத்து 355 ஆசிரியர்களை நியமிக்கக் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இந்த ஆசிரிய நியமனங்களை வழங்க விரைவில் நேர்முகப் பரீட்சைகள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

1996ம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களின் பட்டியலில் இருந்து இவர்கள் உயர்ந்த புள்ளி அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

இவர்களில் 575 பேர் யாழ் மாவட்டத்தில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

அதே நேரம் வடக்கு-கிழக்கில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்காக அண்மையில் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 871 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 584 பேர் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தபோதும், 374 பேருக்கே நியமனம் வழங்கப்படவிருக்கிறது. எஞ்சியோர் தமது தகைமையை நிரூபிக்கத் தேவையான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவும், வதிவிடத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவும் தவறிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த 374 பேருக்கும் இம்மாத நடுப் பகுதியில் நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டணிமீது புலிகள் சாட்டை

**அ**ரசின் தீர்வு யோசனைகளை ஆதரித்து கூட்டணித் தலைவர்கள் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பாக புலிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் இருந்து வெளியாகும் 'ஈழநாதம்' பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் கூட்டணியினர் காட்டிக் கொடுப்பில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

"கண் இழந்து, கைகால்கள் இழந்து, உயிர் இழந்து போராளிகள் தன்மானத்திற்காகவும், தாயகத்தை காக்கவும் போராடிக் கொண்டிருக்கும்போது, கொழும்பில் இருந்து தாயகத்தை கூறுபோடவும் பல துண்டுகளாகப் பிரிக்கவும் விலை பேசுகிறார்கள்," என்று புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## பாலியல் வல்லுறவு–மரண தண்டனை!

**பு**லிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் சிறுமி ஒருத்திமீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட காமக் கொடூரன் ஒருவனுக்கு புலிகள் மரண தண்டனை விதித்துள்ளனர். 26 வயதான நபர் ஒருவரே இக் கொடூரச் செயலில் ஈடுபட்டானாம். முல்லைத்தீவில் உள்ள புலிகள் இயக்க நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபோது மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. பாலியல் வல்லுறவு குற்றங்களுக்கு புலிகள் மரணதண்டனை விதித்து வருவது தெரிந்ததே.

## தலைமைதான் காரணம்
## மட்டு எம்.பி.கள் தெரிவிப்பு

"வடக்கு-கிழக்கில், கிழக்கை மூன்று துண்டாக்க இணக்கம் தெரிவித்தது தலைமைதான். எம்முடன் கலந்தாலோசிக்கவும் இல்லை. கருத்துக் கேட்கவும் இல்லை" இவ்வாறு கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்கள் இருவர் தெரிவித்துள்ளனர்.

"மட்டக்களப்பு மக்களின் மனக்குமுறலை தலைமைக்கு தெரிவித்து உள்ளோம். கவனத்தில் எடுக்காவிட்டால் நாம் என்ன செய்வது? ஆனாலும் அம்பாறையை பிரிக்கும் முடிவை நாம் ஏற்கவில்லை" என்று அந்த எம்.பி.கள் மேலும் தெரிவித்தனர்.

கூட்டணியின் மட்டக்களப்பு எம்.பி.கள் மூவருமே கிழக்கை மூன்றாகப் பிரிக்கும் முடிவில் தமக்கு சம்மதமில்லை, சம்பந்தமும் இல்லை என்றே கூறிவருகின்றனர். எனினும் நேரடியாக கூறாமல் மட்டக்களப்பு கிளைமூலம் தெரிவித்த மர்மம் என்ன என்பதுதான் புரியவில்லை.

## புரளியான ஊகங்கள்

**மு**ல்லைத்தீவில் 2.11.97ல் தாக்கப்பட்ட கப்பல் தொடர்பாக பல்வேறு ஊகங்களை தென்னிலங்கை சிங்கள ஆங்கில பத்திரிகைகள் சில கிளப்பி வருகின்றன.

குறிப்பிட்ட கப்பல் ஃஹொண்டூறாஸ் நாட்டில் இருந்து வந்தது என்று திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை 'லங்காதீப' என்ற பத்திரிகை கப்பல் தாக்குதலின்போது 50ற்கு மேற்பட்ட பொதுமக்கள் பலியானதாக செய்தி வெளியிட்டிருந்தது. ஆயுதம் இறக்கிய பொது மக்களே அவ்வாறு பலியானதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டது. அவ்வாறு பொது மக்கள் எவருமே பலியாகவில்லை. இதே போல கரிகாலன் இலண்டனில்,பிரபாகரன் வெளிநாட்டில் என்றும் பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்றன.

## எம்.பியின் பொய்!

**யா**ழ் முஸ்லிம்கள் யாழ் குடாநாட்டுக்கு திரும்பிச் செல்லுமாறு கூறி புலிகள் செய்தி அனுப்பியதாக, யாழ் எம்.பி. இல்யாஸ் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு எவ்விதமான செய்தியையும் இல்யாஸ் எம்.பிக்கு புலிகள் அனுப்பவில்லை என்று திட்டவட்டமாக தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான இல்யாஸ் அரசியல் பிரபலம் தேடவே இப்படியான பொய்யான செய்தியை வெளியிட்டாராம்.

## புலிகள் போராடுவது தீர்வுக்காக!
## புளொட் சித்தார்த்தன் பேட்டி

"**பு**லிகள் சண்டை பிடிக்க வேண்டும் என்பதற்காக சண்டை பிடிக்கவில்லை. அரசியல் தீர்வு ஒன்றுக்காகவே சண்டை பிடிக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன்" இவ்வாறு புளொட் இயக்க தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி.ரூபவாகினித் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"புலிகள் கலந்து கொள்ளாமல் நாட்டில் சமாதானம் தோன்ற முடியாது என்பதே கள நிலவர உண்மையாகும். ஆனாலும் புலிகள் பேச்சுக்கு வரவில்லை என்பதை காரணம் காட்டி அரசியல் தீர்வு முயற்சிகளை தள்ளிப் போடவும் கூடாது என்பதே எமது கருத்தாகும். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைத்தால், அதனை ஏற்க புலிகளும் நிர்ப்பந்திக்கப்படுவார்கள்" என்றும் சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார்.

வவுனியாவில் புளொட் இயக்கத்தினரால் பொதுமக்கள் துன்புறுத்தப்படுவதாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த சித்தார்த்தன், "வவுனியாவில் படையினர், ஊர்காவல் படையினர் போன்ற பலர் ஆயுதங்களுடன் உள்ளனர். அங்கு நடக்கும் எல்லா சம்பவங்களும் எம் தலையில் வீழ்கின்றன. அப்படித்தான் சர்வதேச மன்னிப்புச் சபையும் எம்மீது குற்றம் சாட்டியுள்ளது" என்று விளக்கமளித்தார்.

## பத்திரிகை காரியாலயத்திற்கு கல்வீச்சு

**யா**ழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றின் காரியாலயம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் கல்வீச்சுக்கு இலக்கானது.

"யாழ் பல்கலைக் கழகத்திலும் ராக்கிங் சூடுபிடிக்கிறது." என்று செய்தி வெளியிட்டதை அடுத்தே மாணவர்களால் தாக்கப்பட்டதாம்.

இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் திரண்டு வந்து கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். படையினர் கவச வாகனம் சகிதம் சென்று மாணவர்களைக் கலைந்து போகச் செய்தனர்.

செய்தி போட்டால் தாக்குதல் நடத்தும் அளவுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சென்றது இதுதான் முதற்தடவை என்று யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிலர் கவலை தெரிவித்துள்ளனர்.

## எம்.ஐ.24 பலமும், பலவீனமும்



**10.11.97** அன்று ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளான எம்.ஐ.24 ஹெலி பற்றிய விபரங்கள்:

எம்.ஐ.24 ரக ஹெலிகள் முதலில் ரசியாவில் தயாரிக்கப்பட்டன. தற்போது நேட்டோ நாடுகளும் சற்று நவீனமாக தயாரித்து வருகின்றன.

நம் நாட்டில் உள்ள எம்.24 ரக ஹெலிகள் ரசியாவில் வாங்கப்பட்டவை.

கன்ஷிப் என்றழைக்கப்படும் எம்.ஐ.24 ஹெலியின் விலை 22 கோடி ரூபாய்கள். புக்காரா விமானத்தைவிட இதன் விலை அதிகம்.

தடிப்பான வெளிக்கவச உடலமைப்பு கொண்டது. எனினும் ஏவுகணைத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க இயலாது. தரைக்கு ஏவக்கூடியதும், டாங்கிகளை தாக்கக்கூடியதுமான ஏவுகணைகள் நான்கு உள்ளன. ஆனால் இவற்றால் ஏவுகணைகளை எதிர்த்துத் தாக்க முடியாது. 12.7 மில்லிமீட்டர் பாரல் துப்பாக்கிகள் நான்கு இருக்கும். இவை ஒவ்வொன்றும் நிமிடத்துக்கு நாலாயிரம் முதல் ஐயாயிரம் தடவைகள்வரை சுடக்கூடியவை.

கைக்குண்டுகளை அள்ளி வீசும் வசதியும் உண்டு. 500 கிலோ எடைவரையான குண்டுகளையும் கொண்டு செல்லக்கூடியது.

கிளஸ்ரர் குண்டுகளையும் இதனால் காவிச் சென்று வீச முடியும். இடைநடுவே வெடித்து, பின்னர் பல குண்டுகளாக சென்று கீழே விழுந்து வெடிக்கக் கூடியவை தான் கிளஸ்ரர் குண்டுகள் என்று அழைக்கப்படுகின்றன.

ஏவுகணையிடம் இருந்து தப்ப முடியாமைதான் இதன் பிரதான பலவீனம்.

## லொறிகளுக்கு வந்த சோதனை!
## 'அன்பளிப்புக்களும் எதிர்பார்ப்பும்'

(மட்டக்களப்பு நிருபர்)

**கொ**ழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்குப் பாவிக்கப்பட்ட லொறி மட்டக்களப்பிலிருந்து அனுப்பப்பட்டது என்ற விசாரணைகளைத் தொடர்ந்து மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கும், நாட்டின் தென்பகுதிக்கும் செல்லும் அனைத்து லொறிகளும் தற்சமயம் மட்டக்களப்பு மாவட்டத்திலும், பொலனறுவை மாவட்டத்திலும் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கும் நாட்டின் வேறு பகுதிகளுக்கும் செல்லும் லொறிகள் ஓட்டமாவடியிலும், மாதுறு ஓயாச் சந்தியிலும் பொருட்கள் கீழிறக்கப்பட்டு முற்றாகச் சோதனையிடப்படுகின்றன. முன்னர் மன்னம்பிட்டியில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகள் இப்பொழுது மாதுறு ஓயாச் சந்திக்கு மாற்றப்பட்டுள்ளன. அப்பகுதியில் பெரிய நிலப்பரப்பில் லொறிகளை நிறுத்தி வைத்து பொருட்களைக் கீழிறக்கிச் சோதனையிடுவதற்காகத் தயார் செய்யப்பட்டுள்ளது.

முன்னர் மன்னம்பிட்டியில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் அச்சோதனைச் சாவடிகளில் இருந்து மாதுறு ஓயாச் சந்தியினூடாக எதுவித சோதனைகளுமில்லாது கண்டிக்குச் சென்று கொழும்பு செல்லமுடிந்தது என்பதாலேயே சோதனை நடவடிக்கைகள் மாதுறு ஓயாச் சந்திக்கு மாற்றப்பட்டுள்ளது.

நாளாந்தம் நூற்றுக்கணக்கான லொறிகள் சோதனைக்காகத் தரித்து நிற்கின்றன.

கடுமையான சோதனை என்று வீண் தாமதம் ஏற்படுத்தப்பட்டிருப்பது ஒரு புறமிருக்க சோதனை செய்யும்போது 'அன்பளிப்புக்கள்' பெறுவது ஒரு லொறிக்குத் தலா நூறு ரூபாவைத் தாண்டிப் பேரம்பேசப்படுவதாகவும் லொறிக்காரர்கள் கூறுகிறார்கள். நாளாந்தம் 500 இற்கு மேற்பட்ட லொறிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சோதனை நிலையங்களில் சோதனை முடித்துச்செல்கின்றன. சோதனைச் சாவடிகளில் கட்டாயத்தின் பேரில் தாம் வழங்கும் 'அன்பளிப்புத்' தொகைக்கு "போர்க் கொடுமைநிதி" என்று தாம் பெயரிட்டுள்ளதாக லொறிக்காரர்கள் அனைவரும் தெரிவிக்கிறார்கள்.

சாதாரண சிப்பாய்கள் தொடக்கம் அதிகாரிகள்வரை அனைவரும் 'அன்பளிப்பு'ப் பெறும் விடயத்தில் ஆர்வமாக இருப்பதால், தம்மால் எதுவும் செய்ய முடியாத நிலையிலிருப்பதாக அவர்கள் மேலும் கூறுகிறார்கள்.

## மன்னார் மோதல்

**வ**வுனியா, மன்னார் வீதியில் 08.11.97 அன்று புலிகளின் தாக்குதல் ஒன்று இடம் பெற்றது. அதிகாலை 2.45 மணிக்கு இத் தாக்குதல் நடத்தப்பட்டது. வவுனியா மன்னார் வீதியில் உள்ள காவலரண்கள்மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

லெப்டினன்ட் கேணல் சுகந்தன், கப்டன் அசோக் ஆகிய பலியான தமது உறுப்பினர்கள் நினைவாகவே புலிகள் இத் தாக்குதலை நடத்தி இருந்தனர்.

பத்துக்கு மேற்பட்ட காவலரண்கள் தம்மால் தாக்கப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர். தமது தரப்பில் எவ்வித இழப்பும் இல்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

## கவச அணி சகிதம் தேடுதல்!

(மன்னார் நிருபர்)

**ம**ன்னாரிலிருந்து எருக்கலம்பிட்டி பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு லொறிகளைச் சோதனையிட்ட பாதுகாப்புத் தரப்பினர் அதிலிருந்த சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கைப்பற்றினர்.

இப் பொருட்கள் யாவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கொண்டு செல்ல முற்பட்டபோதே இதனைக் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொருட்களை ஏற்றுவதற்காகப் பயன்படுத்திய இருலொறிகளும் கைப்பற்றப்பட்டதுடன், லொறியில் இருந்த 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இதில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் நகர வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த் ஒன்பது பேரும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரிலிருந்து டயர், டியூப் மோட்டார் உதிரிப்பாகங்கள் உட்பட பலவகையான பொருட்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்படுவதாக சந்தேகிக்கும் பாதுகாப்புத் தரப்பினர் இப் பகுதியில் கடும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே வேளை கடந்த 10.11.97 அன்று தாராபுரம் பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும், பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையிலீடுபட்டனர். இராணுவத்தினரின் கவச வாகன அணி இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

## திட்டமிட்ட அநீதி
## பயணிகள் அதிருப்தி

(ஏறாவூர் நிருபர்)

**நா**டளாவிய ரீதியில் எதிர் கொள்ளும் பயணிகள் போக்குவரத்துக் கஷ்டங்களை ஓரளவு சீர் செய்யும் விதத்தில் கடந்த செப்டம்பர் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இன்ரசிற்றி கொத்தணி பஸ்சேவை முறைகளில் மட்டக்களப்பு தலைமை டிப்போ முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்குப் பிராந்தியத்தில் முதல் தர தலைமைச் சாலையாகவுள்ள மட்டக்களப்பு பஸ் சாலைக்கு புதிய இன்ரசிற்றி கொத்தணி பஸ்சேவை முறையின் கீழ் ஒரு பஸ்ஸைத் தானும் வழங்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை நாடளாவிய ரீதியில் இன்ரசிற்றி கொத்தணி பஸ்சேவை முறையின் கீழ் 45 புதிய பஸ்கள் வழங்கப்பட்டு சேவைகள் நடைபெறுகின்றன.

கடந்த கால வன்முறைகளின்போது மட்டக்களப்பு டிப்போவின் பஸ்களே அதிகளவில் தீயிட்டு நாசமாக்கப்பட்டன. தற்சமயம் புகையிரத சேவைகூட மட்டக்களப்புக்கு இல்லாத நிலையில் பஸ் போக்குவரத்தையே நாளாந்தம் ஆயிரக்கணக்கான பயணிகள் நம்பியிருக்கிறார்கள். அவ்வாறிருந்தும் மட்டக்களப்பு டிப்போவுக்கு ஒரு பஸ்ஸைத்தானும் வழங்காது புறக்கணித்திருப்பது திட்டமிட்ட அநீதி என்று கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் போக்குவரத்தை ஈடு செய்ய 64 பஸ்கள் தேவையாக இருந்த போதிலும் 24 பஸ்களே தற்சமயம் சேவையிலீடுபடுகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகளும் இந்நிலமையைக் கருத்திலெடுத்ததாகத் தெரியவில்லையென்று சபை வட்டாரங்கள் கூறுகின்றன.

## தற்கொலை காதலர்கள்

**யா**ழ் குடாநாட்டில் உள்ள தீவுப் பகுதியில் வேலணையைச் சேர்ந்தவர் சிவம் பாலேஸ்வரி. வயது 23. அவர் இராணுவ சிப்பாய் ஒருவரைக் காதலித்து வந்தார்.

இந்த காதல் விவகாரம் வீட்டில் தெரியவரவே பாலேஸ்வரியை கண்டித்திருக்கிறார்கள். அதனால் மனம் உடைந்த பாலேஸ்வரி கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

இராணுவச் சிப்பாயும், காதலனுமான காமினி தன் காதலி தற்கொலையான செய்தியை அறிந்தார். உடனடியாகத் தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

# பயங்கரவாதிகள் யார்?
## ஒரு மாணவியின் குமுறல்

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற நிலை மாறி, 'தமிழன் என்று சொல்வதே தலைக்குனிவு தானடா' என்ற நிலமைக்கு எம்மை ஆளாக்கி விட்டார்கள் பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவர் அறுவர்.

யாழ்ப்பாண மக்கள் கல்வியிலே, கடும் உழைப்பிலே, சிக்கனத்திலே சேமிப்பிலே தமக்கென தனியான இலச்சினை படைத்தவர்கள். இந்த தனித்துவத்தினால் தான் போர் அனர்த்தங்கள், பொருளாதாரத் தடைகள் அத்தனையாலும் மூழ்கிப் போகாமல் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

இத்தகைய பெருமை கூறும் யாழ் மண்ணிலே உள்ள இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் இத்தனை கொடுமையாக நடந்து கொண்டார்கள் என்பது எம்மால் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

எத்தனை இடர்களுக்கும், தடைகளுக்கும், தரப்படுத்தலுக்கும் இடையில் பல்கலைக் கழகம் புகுந்த இந்த மாணவர்கள் சாதித்தது என்ன?

காலஞ்சென்ற பொறியியல் பீட 1ம் ஆண்டு மாணவன் வரப்பிரகாஷ் சிறந்த கல்வித் தகமைகள் கொண்டிருந்தார். அதனால் ஏற்பட்ட பொறாமையா? அல்லது இவர்கள் மனித நேயமற்ற மனநோயாளிகளா? உண்மையில் 'பயங்கரவாதிகள்' இவர்கள்தான்.

தான் கடும் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்த வேளையிலும் தன்னை இம்சைப்படுத்திய மாணவர்களை தண்டிக்க வேண்டாம். "நான் இனி பல்கலைக் கழகத்திற்கு போகாமல் இருந்து விடுகிறேன்" என்று கூறிய ஓர் உயர்ந்த உள்ளம் கொண்ட வரப்பிரகாஷின் இழப்பு அந்த பெற்றோர்க்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்துக்குமேதான்.

எதிர்காலத்தில் பல்கலைக் கழகம் புக இருக்கும் மாணவ மாணவியர்களே! நாம் இன்று எதிர்நோக்கும் பிரச்சனைகளை மறவாதீர்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திறமையாகப் படித்து உயர்ந்த நிலைக்குவர எத்தனியுங்கள். இந்தக் கொடிய சம்பவத்தால் எதிர்காலப் பொறியியலாளர் எழுவரை நாம் இன்று இழந்து நிற்கிறோம். இந்தநிலை எமக்கு என்றுமே வேண்டாம் என்ற திடசங்கற்பத்தோடு செயல்படுங்கள்.

இன்று எம்மைச் சூழ்ந்து நிற்கின்ற போர் மூட்டத்தால் ஒரு தலைமுறையே கல்வி வாய்ப்பை இழந்து விடுமோ என்று பரிதவிக்க வேண்டி உள்ளது. ஆகவே இனிமேல் நீங்கள் இந்த பகிடிவதை என்ற போர்வையில் நடக்கும் சித்திரவதைகளை சிந்தையாலும் சீண்டாமல் இருப்பதே நன்று.

நி.வித்தியா, கல்கிசை.

# படையினர் திரட்டும் விபரங்கள்

மட்டக்களப்பு நகரிலுள்ள தமிழ்,முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், அதன் உரிமையாளர்கள், பணியாற்றும் ஊழியர்கள் போன்ற விபரங்களைப் படையினர் திரட்டி வருகின்றனர். மாவட்டத்திற்கு புதிய பிரிகேடியராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் ஷக்கியின் நியமனத்தின் பின்னரே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட இரு விண்ணப்பப் படிவங்கள் இராணுவத்தினரால் வழங்கப்படுகின்றன. அவைகளை நிரப்பி கடைகளின் உரிமையாளர்கள் கையொப்பமிட்டு, மீண்டும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கின்றனர். அப்படிவத்தில் வியாபார நிலையத்தின் பெயர், முகவரி, உரிமையாளரின் பெயர், அடையாள அட்டை இலக்கம், நிரந்தர முகவரி, சிப்பந்திகளின் பெயர் பட்டியல், அவர்களது அடையாள அட்டை இலக்கங்கள், பால், சேவையாற்றும் காலம் உட்படப் பல்வேறு விபரங்கள் அதில் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறான விபரங்களை முன்னர் பொலிசார் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேரூந்தில் 'பிக்பொக்கட்'

பலாங்கொடையிலிருந்து பொகவந்தலாவ வழியாக ஹற்றனுக்குச் செல்லும் பேரூந்துகளில் 'பிக்பொக்கட்' பேர் வழிகள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர். பலாங்கொடையிலிருந்து சன நெரிசலுடன் வரும் இப் பேரூந்துகளில் பொகவந்தலாவை நகரிலிருந்து ஏறும் பயணிகளிடம் இப் பேர்வழிகள் பணம், பொருட்கள், அடையாள அட்டை போன்றவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

சிலர் தமது உடமைகளை உடனே சோதித்ததன்பின் பேரூந்து சாரதியிடமும் நடத்துநரிடமும் முறையிட்டாலும் அவர்கள் அலட்சியம் காட்டுகின்றனர். இதனால் இவர்கள் மீதும் பயணிகள் அதிருப்திப் படுகின்றனர். ஆகவே, இப்பேரூந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் விழிப்பாகயிருக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

சோ.ஸ்ரீ

# சிங்களத் தொலைக்காட்சி நாடகமும் தமிழ் வேலைக்காரர்களும்

இலங்கை தொலைக்காட்சி சேவைகளில் ஒளிபரப்பப்படும் சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களை அனைத்து இன மக்களும் விரும்பி இரசிக்கின்றனர். இச் சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களில் வீடு, தோட்ட வேலைக்கார பாத்திரம் வரும் பட்சத்தில், அப்பாத்திரத்தைத் தமிழர்களாகவே சித்தரிக்கின்றனர்.

மிகவும் கேவலமாக கொச்சைத் தமிழில் பேசி, தமிழினத்தையே கேவலப்படுத்துகின்றார்கள். மேற்படி வேலைக்கார பாத்திரங்களின் ஊடாக ஓரினத்தை அடிமைகளாகவும் மற்றோரினத்தை ஆண்டான்களாகவும் சித்தரிக்கின்றது இந்தச் சிங்களத் தொலைக்காட்சி நாடகங்கள்.

அதே நேரத்தில் ஒரு தமிழ்த் தொலைக்காட்சி நாடகத்தில் வேலைக்காரராக ஒரு சிங்களப் பாத்திரத்தைச் சித்தரிக்கப்பட்டிருந்தால் சும்மா விட்டுவிடுவார்களா? ஆணைக்குழுவொன்றை வைத்து ஆட்டிப் படைத்திருக்க மாட்டார்களா? இனங்களின் விரிசலை இத்தகைய நாடகங்கள் இன்னும் விரைவுப்படுத்துகின்றன. தொலைக்காட்சி சேவைகளில் கடமையாற்றும் தமிழ் அதிகாரிகள் தூங்கிக்கொண்டிருக்கின்றார்களா? அல்லது நாற்காலியைத் தக்க வைக்க நடிக்கிறார்களா?

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவ.

# ஜேர்மன் நிதி என்னாச்சு?

(மன்னார் நிருபர்)

செட்டிகுளத்திலிருந்து மன்னார் நகருக்கு நீர் மின்சாரம் வழங்கும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 1990ம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் மதவாச்சியிலிருந்து மன்னார் வரைக்கும் நீர் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பமானது.

எனினும் அக்காலப் பகுதியில் ஏற்பட்ட வன்செயல்களை தொடர்ந்து ஏராளமான மின் கோபுரங்கள் தகர்க்கப்பட்டிருந்தன.

தற்போது இதனைத் திருத்தி மன்னாருக்கு மின் விநியோகம் செய்யும் பணிகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

இதே வேளை மன்னாருக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஜெர்மன் ஏற்கனவே 80 மில்லியன் ரூபாயினை ஒதுக்கீடு செய்தது. இந்நிதி இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

செட்டிகுளத்திலிருந்து தலைமன்னார் வரையான நெடுஞ்சாலையினை திருத்தும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஈடுபட்டுள்ளது.

மன்னார் தொலைத் தொடர்பு சேவை நவீன மயப்படுத்தப்படவுள்ளது. வெகுவிரைவில் இரண்டாயிரம் யூனிட்டுகள் கொண்ட 'செட்' ஒன்று இங்குபொருத்தப்படவுள்ளது. தற்போது 150 யூனிட் கொண்ட செட்டே இங்கு பொருத்தப்பட்டுள்ளது. மன்னாரில் தொலைபேசிக்காக விண்ணப்பித்தவர்களுக்கும், டெலிகொம்மிற்கும் இடையே இருந்து வரும் தகராறுகள் இதன் மூலம் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மரண தண்டனை!

திருகோணமலை நிலாவெளியில் 02.11.97 அன்று காலை அருள் என்பவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படுபவர் என்றும், திருகோணமலைக்கு வந்து கொண்டிருக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மறைத்துவைத்த வாகனங்கள் சேதம்

(காத்தான்குடி நிருபர்)

புலிகளின் ஷெல் தாக்குதலினால் மட்டக்களப்பு கச்சேரியின் கட்டடங்கள், வாகனங்கள் பெருத்த சேதமடைந்தன அல்லவா? அந்த வாகனங்களின் எண்ணிக்கை ஒன்பதாகும். இவைகளில் அநேகமானவை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களினுடையது. எல்.ரி.ரி.ஈ. யினருக்குப் பயந்து, இவர்களில் பலர் தமது 'டபிள் கப்' வாகனங்களை பாவிக்காமல், மட்டக்களப்பு கச்சேரியில் நிறுத்தி வைத்திருந்தனர்.

பட்டிப்பளை உட்பட சில பிரதேச செயலாளர்களின் வாகனங்களை புலிகள் கடத்திச் சென்றதன் பின்னர், செயலாளர்கள் இவ்வாறு தமது வாகனங்களை மறைத்துவைத்து, நிறுத்திவிட்டு சாதாரண மானவர்களைப் போல் துவிச்சக்கர வண்டிகளிலும், தனியார் வாகனங்களிலும் பயணம் செய்கின்றனர்.

மட்டு மாவட்டத்தில் காத்தான்குடி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர்கள் தவிர ஏனைய 10 பிரதேச செயலாளர்களும் தமது வாகனங்களை கச்சேரியிலேயே நிறுத்தி வைத்திருந்தனர். அவ்வாறு நிறுத்தப்பட்ட வாகனங்களின் மீதுதான் புலிகளின் ஷெல்கள் விழுந்து சேதமடைந்தன.

# மீறப்படும் விதிகள்

அண்மையில் வாகனங்களில் புகைப்பவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின. ஆனால், நடைமுறையில் மாற்றங்கள் எதனையும் காணக்கூடியதாயில்லை. இந்த செயற்பாடு தனியார் வாகனங்களில் மட்டுமல்லாமல் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களிலும் தொடர்கிறது. பொதுவாக, இ.போ.ச.பஸ்களில் 'புகைத்தல் தடை', 'புகைத்தல் கூடாது', என்ற வாசகங்கள் வெறும் அலங்கரிப்புக்காகவே பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஏனெனில், பயணிகளோடு, அந்த பஸ் டிப்போவின் ஊழியர்களான; ஓட்டுநர், நடத்துனர், பரிசோதகர்கள் போன்றோரும் பயணத்தின்போது புகைக்கின்றனர். இவ்வாறு பயணிகளும், ஊழியர்களும் புகைத்தால் யாரை யார் கேட்பது..?

எனவே, பயணத்தின்போது 'புகைத்தல் தடை' எனும் வாசகத்தை மதித்து பயணிகளும், ஊழியர்களும், தனியாரும் செயற்பட வேண்டும். இல்லையேல் அந்த வாசகத்தை அழித்துவிட வேண்டும்.

ஆர். சாந்தசீலன்,
பொத்துவில்.


**தெய்வீக மருத்துவம்**
**சர்வதேச சமூக தெய்வீக சேவை**
GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமைஅடிப்படையில் கவனிக்கப்படும்.

| | |
|---|---|
| பாலுசோதிடர்–S.A.M.P. | BALUSOTHIDAR-S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம் | THEYVIGASAKTHY CENTRE, |
| கல்லடி–அரசவிடுதி வீதி, | BATTICALOA (P.O.) |
| மட்டக்களப்பு. (P.O). | SRI LANKA. |

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." – "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



**றெறாசோ ஷிப்ஸ்**
**(TERRAZZO CHIPS)**
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411



**விளம்பரப் பகுதி**
**வெளிவந்து விட்டது**
**கணிதம்**
G.C.E. (O/L) - 97
துரித மட்டல் மாதிரி வினாக்கள
(விரிவான வினா-விடை செயகை முறையுடன்).
இமமுறை G.C.E. (O/L) பாட்சை எடுககும மாணவாகளுககுரியது. பகுதி I - 100 வினாககள, பகுதி II - 30 வினாககளும செயகை முறையுடன விரிவான விடைகள அடஙகியது.
எலலா புததகசாலைகளிலும கிடைககும
ஆககம : S. திலீபண
தொடாபு : S. Thileephan
Denuma Institute, Wattala.



**சித்தர் மாந்திரீகம்**
அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர் களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை



**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீயபழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**
வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு தபால்மூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலைடிடி, வாதம் பசோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு, விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

**ஓட்டமாவடி டிசம்பர் 3, 4ம் திகதிகளில்**
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P. 065-57345

**கல்முனையில் டிசம்பர் 6, 7, 8, 9ம் திகதிகளில்**
T.M.M. பாமசியிலும் T.P. 065 - 29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

**வவுனியால் டிசம்பர் 14, 15, 16ம் திகதிகளில்**
வவுனியில் ஞான வைரவர் கோவில் வீதி, வன்னி INN இல் சந்திக்கலாம்
T.P. 024 - 22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**கொழும்பில் டிசம்பர் 21 முதல் 29 வரை**
DR. P. ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall St., Opposite Renjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.



**250 புலமைப் பரிசில்கள்**

மாணவர்களே! டிசம்பரில் (O/L) பரீட்சை எழுதுகிறீர்களா!
அடுத்தது என்ன?
இதோ 10,000/- பெறுமதியான கம்பியூட்டர் டிப்ளோமா பாடநெறியை இலவசமாக–புலமைப்பரிசில் மூலம்–விடுமுறை காலத்தில் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம். இப் பாடநெறியானது –

1. Introduction of Computer.
2. Computer technology in Hardware and Software
3. Use of following s/w packages
   a. Lotus 123 Rel 5/ Excel
   b. AUTO CAD
      Specially designed for students who wish to go for Engineering stream in A/L
   c. Word processing package (MS WORD)
4. Languages: (a) Visual Basic
   (b) PASCAL
5. Application of Micro process base technology in the field of Music and Multi medeia application Skills.
6. Internet, E-mail, Global communication
7. Introduction to Hardware Engineering
   (ELECTRONICS CONSTRUCTION)

ஆகிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

புலமைப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுவே: கீழ் உள்ள கூப்பனை நிரப்பி அத்துடன் ரூபா 100/- இற்கான காசுக்கட்டளையை கீழ் கண்ட முகவரிக்கு 24.12.1997 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி புலமைப் பரீட்சையில் தோற்றுங்கள். (காசுக்கட்டளை வெள்ளவத்தை தபாற்கந்தோருக்கு எடுக்கப்படல் வேண்டும்.)

பரீட்சைக்கான நேரம், திகதி, இடம், பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அறிவிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
General Manager,
Metro Computer World,
No.17, Charlemont Road, Colombo-06.

*Specimen form*
Full Name: ..........
Address: ..........
School: .......... Class: ..........
Sex: .......... Age: .......... Phone: ..........

இப்பாடநெறிக்கான காலம்– 4 மாதங்கள்.



**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218





**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

*தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி,
மே பீல்ட் ரோட், கொழும்பு–13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்–
342463-344831

# கடற்புலிகள் விரித்த வலை!
## எரிந்த கப்பலும்–வீழ்ந்த பறக்கும் கப்பலும்

**2.11.97** ஞாயிற்றுக்கிழமை முல்லைக் கடலில் தாக்கப்பட்டது தமது 'சரக்குக் கப்பல்' என்று புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

சரக்குக் கப்பலில் ஆயுதங்களும் கொண்டு செல்லலாம். வேறு பொருட்களும் ஏற்றிச் செல்லலாம். எனவே பொதுப்படையாக சரக்குக் கப்பல் என்று கூறியதோடு புலிகள் நிறுத்திக் கொண்டனர்.

ஆனால், எதற்காக அவ்வாறு கூற வேண்டும்?

ஒரு வருடத்திற்கு முன்னர் 14.02.96ல் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று முல்லைக் கடலில் தாக்கப்பட்டது. இரவோடு இரவாக தாக்கப்பட்டதால் ஆயுதங்களோடு கப்பல் முற்றாக அழிந்து போனது.

**அது தொடர்பாக புலிகள் விடுத்த செய்தியில் "கடற் தாக்குதலுக்காக தம்மால் வெடிமருந்து நிரப்பி கொண்டு செல்லப்பட்ட கப்பல்தான் தாக்குதலுக்கு உள்ளானது. கடற்சமரில் ஐந்து கடற்புலிகள் பலியானார்கள் என்றுதான் தெரிவித்திருந்தனர்.**

**17.10.93ல் கிட்டு பயணம் செய்த ஆயுதக் கப்பலான டொங்நோவா விவகாரத்திலும், சமாதானத்திட்டத்துடன் கிட்டு வந்த கப்பல்தான் அது என்று புலிகள் கூறியிருந்தனர்.**

ஆயுதக் கப்பல் என்றோ, சரக்குக் கப்பல் என்றோ அப்போது புலிகள் கூறாமல் இருந்தமைக்கு பல காரணங்கள் உள்ளன.

அதில் முக்கியமான ஒரு காரணம், சர்வதேச கடற்பரப்பின் ஊடாக அங்கீகாரமில்லாத சட்டவிரோத அயுதக் கடத்தலில் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு தம்மீது விழுந்துவிடக்கூடாது என்பதுதான்.

அப்படியானால் தற்போது ஏன் தமது சரக்குக் கப்பல் தாக்கப்பட்டது என்று உரிமை கோரினார்கள்?

இரண்டு காரணங்கள் உள்ளன.

**ஒன்று: விமானப்படையினரின் உளவு விமானம் எடுத்த புகைப்படம், கடலில் நின்றது பொருட்களை ஏற்றப் பயன்படும் பாரிய சரக்குக்கப்பல் என்பதற்கு சாட்சியாக உள்ளது.**

**இரண்டு: தமது கப்பல் என்று புலிகள் உரிமை கோராவிட்டால், சைப்பிரசில் இருந்து மோட்டார் குண்டுகளை ஏற்றிக் கொண்டு காணாமல்போன கப்பலைத்தான், புலிகள் தாக்குதலுக்கு இரையாக்கி தடயம் இல்லாமல் செய்துள்ளனர் என்று வெளியுலகில் கருதப்பட்டுவிடும்.**

எனவேதான் புலிகள் உரிமை கோரி இருந்தனர். எனினும் சரக்குக் கப்பலின் பெயரை புலிகள் வெளியிடவில்லை.

பெயர் ஒன்றைப் புலிகள் குறிப்பிட்டால் அப்படி ஒரு சரக்குக் கப்பல் பதிவில் உள்ளதா என்று கண்டறிந்துவிடலாம். பதிவில் இல்லையானால் தாக்கப்பட்டது காணாமல்போன கப்பல்தான் என்ற சந்தேகம் உறுதியாகிவிடும். எனவேதான் பெயர் எதனையும் புலிகள் குறிப்பிடவில்லை.

**அப்படியானால் உண்மையில் அக் கப்பல் யாருடையது?**

சைப்பிரசில் இருந்து குண்டுகளுடன் மாயமான கப்பல் ஃபிரான்ஸ் கடற்பகுதியில் நிற்பதாக முதலில் செய்திகள் வெளியாகின. பின்னர் அச் செய்திகளில் உண்மையில்லை என்பது தெரிந்தது.

காணாமல்போன கப்பலைத் தேடி சர்வதேசப் பொலிசாரான இண்டர்போல் தீவிரமான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

**ஆயுத விற்பனையில் ஈடுபடும் சில பெரிய நாடுகளும் குறிப்பிட்ட கப்பல் மர்மத்தை அறிவதில் தீவிரம் காட்டத் தொடங்கியிருப்பதுதான் புதிய திருப்பம். தாங்கள் ஏனைய நாடுகளுக்கு ஏற்றி அனுப்பும் ஆயுதங்கள் உட்பட ஏனைய பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டால் என்ன செய்வது? என்ற சுயநலம்தான் அந்த நாடுகளை தீவிரம் காட்டச் செய்துள்ளன.**

இந்நிலையில் சைப்பிரசில் இருந்து மோட்டார் குண்டுகளுடன் புலிகளால் கொண்டு செல்லப்பட்ட கப்பல், புலிகளுக்கு சாதகமான நாடொன்றின் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாம்.

கப்பலின் நிறம் மாறினாலும், பெயரை மாற்றினாலும், சந்தேகத்தில் கப்பலை பிடித்தவைத்து தீர ஆராய்ந்தால் உண்மை அம்பலமாகிவிடும். விசாரணைகள் தீவிரமாக நடக்காவிட்டால் சிறு மாற்றங்களை செய்துவிட்டு பயன்படுத்தலாம். ஆனால் விசாரணையில் இண்டர்போல் துருவிக்கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, பெரிய நாடுகளும், அயுத வியாபாரிகளும்கூட மர்மத்தை அறிய ஆவலாயிருந்தனர்.

வெளிநாடுகளில் உள்ள புலிகளின் வட்டாரங்களையும் சில நாடுகளின் அதிகாரிகள் தொடர்பு கொண்டு சிநேகபூர்வமாக விசாரித்திருக்கிறார்கள்.

இதன்பின்னர்தான் காணாமல் போன கப்பலுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் ஒரு அறிக்கையும் விட்டிருந்தனர். முதலில் மறுப்பு தெரிவிக்கும் யோசனையே புலிகளுக்கு இருக்கவில்லை.

கப்பல் காணாமல்போய் பல மாதங்களின் பின்னரே புலிகளின் மறுப்பறிக்கை வெளியானது.

மறுப்பறிக்கை வெளியிட்ட பின்னர் இனி மேலும் குறிப்பிட்ட கப்பலை தங்கள் கையில் வைத்திருப்பது புத்திசாலித்தனமல்ல என்ற திட்டவட்டமான முடிவுக்கு வந்தது புலிகளின் தலைமைப்பீடம்.



ஐரிஸ்மோனாவை கவசமாகவைத்து 29.08.95இல் நடந்த தாக்குதல் காட்சி.

மோட்டார் ஷெல்களுடன், ஆட்டிலெறி ஷெல்கள், ஏவுகணைகள், மருந்துப் பொருட்கள் என்பவற்றையும் கொள்வனது செய்து கொண்டு கப்பல் வந்து சேர்ந்தது.

30.10.97 முதல் முல்லைக் கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற மீனவர்கள் புலிகளால் திருப்பி விடப்பட்டனர்.

**கப்பல் வந்துசேரும்வரை முல்லைக் கடற்பிராந்தியத்தை கடற்புலிப் படகுகளும், கடற் கரும் புலிப் படகுகளும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன.**

புலிகளுக்கு நெருக்கமான மீனவர்களின் படகுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட படகுகள் பொருட்களை இறக்க தயார் நிலையில் காத்திருந்தன.

முன்னூறு புலிகள்வரை ஆயுதங்களை இறக்கிக் கொண்டுவரும் பணிக்காக தயார் நிலையில் இருந்தனர்.

1.11.97 அன்று இரவு பத்து மணிக்கு பின்னர்தான் கப்பல் முல்லைக் கடலுக்குள் பிரவேசித்துள்ளது.

வானிலையை உத்தேசித்துத்தான் கப்பல் வரவேண்டிய நாள் குறிக்கப்பட்டது.

வன்னியில் கடும் மழை ஆரம்பமாகி விட்டது.

31.10.97 அன்று அமாவாசை தினம். அமாவாசை தினத்தன்றே கப்பல் வந்து சேர்ந்துவிடும் என்று எதிர்பார்த்தார்களாம். கடல் நிலை காரணமாக ஒருநாள் தாமதமாகியதாம்.

**1.11.97 அன்று இரவு பத்துமணியளவில் தான் முல்லைக் கடலுக்குள் கப்பல் பிரவேசித்தது. அமாவாசைக்கு மறுநாள் என்பதால் வானம் இருண்டு கிடந்தது.**

இரவோடு இரவாக ஆயுதங்கள் இறக்கப்பட்டு படகுகள் மூலம் கரைக்கு கொண்டு செல்லப்பட்டன. கரையில் நின்ற லொறிகளில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டன.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் தவிர புலிகளின் ஆதரவாளர்களும் லொறிகளில் ஆயுதம் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பெட்டிகளின் உள்ளே ஆயுதங்கள் இருந்தமையால், எத்தகைய ஆயுதங்கள் உள்ளே இருக்கின்றன என்ற விடயம் புலிகளுக்கோ, ஆதரவாளர்களுக்கோ கூட தெரியாது.

**கப்பலில் இருந்து ஆயுதங்கள் முற்றாக இறக்கப்படும்வரை முல்லைக் கடற் பிராந்தியத்தில் கடற்புலிப் படகுகளும், கடற்கரும்புலிப் படகுகளும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.**

கடற்படையினரின் ரோந்துப் படகுகள் வருமானால் எட்டத்தில் வைத்தே அவற்றை வழிமறித்து தாக்கத் தயாராகச் சுற்றித் திரிந்தன கடற்கரும்புலிப் படகுகள்.

ஆயுதங்கள் இறக்கி முடிக்கப்படும்வரை எவ்வித மோதலுக்கும் அவசியம் இருக்கவில்லை. ஏனெனில் கடற்படையினர் அப் பகுதியில் ரோந்து எதிலும் ஈடுபடவில்லை.

கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கப்பட்டதும், அடுத்த கட்டத் தாக்குதலுக்கு கடற் புலிகள் தயாரானார்கள்.

**விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உட்பட, கடற்படைப் படகுகளை தாக்கக்கூடிய நீண்ட சுடுதூர துப்பாக்கிகள், ஆர்.பி.ஜி. றொக்கட் லோஞ்சர்கள் சகிதம் ஒரு தாக்குதல் அணி கப்பலுக்குள் சென்று தயார் நிலையில் இருந்தது.**

இன்னொரு அணியினர் கப்பல் நின்ற கடற்கரைப் பகுதியில் பதுங்கி இருந்தனர். ரி.55 ரக டாங்கி ஒன்று நிலத்தில் குழி தோண்டி இறக்கப்பட்டு சுடுநிலைக்கு தயாராக காத்திருந்தது.

கடற்பரப்பில் வரும் படகுகளை கடலில் இருந்து தாக்க வசதியாகவே நிலத்திற்குள் டாங்கி இறக்கப்பட்டு, சுடுகுழாய் கடற்பரப்புக்கு குறிவைக்கும் வகையில், தரையோடு தரையாக நீண்டு வாயை திறந்து காத்திருந்தது.

**இரண்டு வருடங்களின் முன்னர் முல்லைக் கடலில் ஐரிஸ்மோனா பயணிகள் கப்பலை கேடயமாக வைத்து புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.**

கப்பலில் இருந்த பயணிகள் கரைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கரையில் இருந்து தாக்குதல் நடத்தக்கூடிய தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. கப்பலின் மேல் தளத்திலும், கரையிலும் கடற்புலிகள் தயார் நிலையில் இருந்தனர்.

தமக்கு விரிக்கப்பட்ட வலை என்று தெரியாமல் கப்பலை நோக்கிச் சென்ற சூப்பர் டோராப் படகை கரையில் இருந்தும், கப்பல் தளத்தில் இருந்தும் கடற் புலிகள் தாக்கினர். சூப்பர் டோரா பற்றி எரிந்தது. அதன்பின்னர் அதனை தேடிச் சென்ற இன்னொரு சூப்பர் டோராவும் கரையில் இருந்து ரி.56 டாங்கி ஏவிய குண்டால் தாக்கப்பட்டது. அந்த டோரா புலிகளால் கைப்பற்றி இழுத்து செல்லப்பட்டது.

அதே பாணியில் ஒரு பாரிய தாக்குதலுக்கே புலிகள் திட்டமிட்டனர்.

**ஆனால் இம்முறை கடற்படையினருக்கு மட்டுமல்ல, விமானப்படை விமானங்களுக்கும் வலை விரிக்கப்பட்டதாம். கப்பலில் புதிய ஏவுகணைகள் வந்து சேர்ந்து விட்டதால், தம்மிடம் முன்னர் இருந்த ஏவுகணைகளை தாராளமாக பயன்படுத்தி விமானங்களை குறிவைக்க பிரபாகரன் அனுமதித்தாராம்.**

கடற்படை மீதோ, அல்லது விமானப் படை விமானம் ஒன்றை வீழ்த்திவிட்டோ, கப்பலை தாமே தகர்த்துவிடலாம் என்று புலிகள் நினைத்திருந்தனர். அவ்வாறு செய்தால் சண்டைக்காக பயன்படுத்தப்பட்ட கப்பல் என்றும், சண்டையில் கப்பலும் தாக்கப்பட்டது என்று கதையை முடித்துவிடலாம் என்று நினைத்தனராம்.

ஆனால் புலிகள் எதிர்பார்த்தற்கு மாறாக காரியங்கள் நடந்தன. கடற்படையினரின் டோராப் படகுகள் எட்டத்தில் வந்ததை, கடற் புலிகளும் தங்கள் ராடர்களில் அவதானித்தபடியே இருந்தனர்.

**கடற்படையினரிடம் உள்ள ராடர்கள் போன்றவையே கடற் புலிகளிடமும் உள்ளன. கடற்படையினரின் படகுகளில் இருந்து கடற் புலிகளால் கைப்பற்றப்பட்ட ராடர்களும் உள்ளன.**

கடற்படையினருக்கு சந்தேகம் வராமல் இருப்பதற்காக கடற்பரப்பில் கடற் புலிப் படகுகள் நடமாடவில்லை. அனைத்தும் கரைக்கு சென்று மறைவில் நிறுத்தப்பட்டிருந்தன.

கடற்படைப் படகுகளை ராடரில் பார்த்த கடற்புலிகள் தங்கள் வலைக்குள் சிக்கப்போகிறார்கள் என்று தயார் நிலையில் இருந்தனர்.

ஆனால் கடற்படைப் படகுகள் எட்டத்திலேயே நின்று கொண்டன. தகவல் விமானப் படைக்கு சென்றது.

அதன்பின்னர் குறிப்பிட்ட கப்பலுடன் தொடர்பு கொள்ள கடற்படையினர் அழைப்பு விடுத்தனர். கப்பலுக்குள் அதற்கான சமிஞ்ஞைகள் கேட்டன. புலிகள் பதில் சொல்லவில்லை.

**கப்பல் நிற்பதை படைத்தரப்பு நன்கு அறிந்துகொண்டுவிட்டது என்பதை புலிகள் உறுதிப்படுத்திக் கொண்டனர்.**

கப்பலுடன் தொடர்பு கொள்ளப்பட்டது என்பதை படையினரும் கூறியிருந்தனர். வெளிநாட்டுக் கப்பலாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தில் அப்படி தொடர்பு கொண்டு பார்த்தனர்.

அதன்பின்னர் கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாக புலிகள் காத்திருந்தனர்.

**உண்மையில் கப்பலை காப்பாற்ற நினைத்திருந்தால் சர்வதேச கடற்பரப்புக்குள் செல்ல முயற்சிக்க ஒரு மணி நேர அவகாசம் இருந்தது. ஆனால் கப்பல் கரையை அண்டி அப்படியே நின்றிருக்கிறது. அது ஒன்றே தாக்குதலை எதிர்பார்த்து காத்திருந்தமைக்கு போதிய சான்றாக உள்ளது.**

விமானப்படை விமானங்கள் வரப் போகிறதா? அல்லது கடற்படை படகுகள் வரப்போகிறதா என்று தெரியாமல் கடற்புலிகள் ஒருமணி நேரமாக காத்திருக்க, திடீரென்று வானத்தில் இரண்டு கிபீர் விமானங்களும், எம்.ஐ.24 ஹெலிக்கொப்டரும் தாக்குதலுக்கு சென்றன. கப்பலில் காத்திருந்த புலிகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். குறி தவறியுள்ளது.

ஆனாலும் கிபீர் வீசிய குண்டு குறிதவறாமல் கப்பலின் தளத்தில் விழுந்ததும், கப்பலுக்குள் இருந்த புலிகளும் பலியானார்கள்.

தொடர்ந்து கிபீர் விமானங்களும் எம்.ஐ.24ம் நடத்திய தாக்குதல் காரணமாக கடற்கரையை அண்டிய பகுதியில் நின்றிருந்த கடற் புலிகள் சிலரும் பலியானார்கள். ஆனாலும் ரி.55 டாங்கி தாக்குதலில் சிக்கவில்லை. தாக்கப்பட்டதாக கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்த செய்தியில் உண்மையில்லை.

15 கடற்புலிகள் பலியானார்கள். அனைவரும் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர்கள். 14 கடற்புலிகள் பலியானதாக முதலில் செய்திகள் வந்தன. 15 கடற்புலிகள் பலியானதாக பின்னர் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

ஒரு மேஜர், ஏழு கப்டன்கள், நான்கு லெப்டினன்ட்கள், ஒரு இரண்டாம் லெப்டினன்ட், மேலும் இரண்டு கடற்புலிகள் உட்பட 15 பேர் பலியாகியுள்ளனர்.

ஆயுதங்களை இறக்க பயன்பட்ட படகுகளை ஏற்றிச்செல்ல கரையில் காத்திருந்த புலிகளின் கனரக வாகனங்கள்தான் உளவு விமானப் படப்பிடிப்பில் தெரிந்துள்ளன.

கிபீர் விமானங்களைக் கண்டதும் அவை புறப்பட்டுச் சென்று மறைந்துவிட்டன.

கப்பலில் வந்த ஆயுதங்களில் ஏவுகணைகள் சற்றுத் தாராளமாகவே வந்து இறங்கியுள்ளனவாம்.

20ற்கு மேற்பட்ட லொறிகள் 2.11.97 அதி காலையில் ஒரு பெரும் தொடராக முல்லைத் தீவுக் காட்டுப் பகுதிக்குள் சென்றதை பலர் கண்டுள்ளனர்.

மோட்டார் ஷெல்கள், ஆட்டிலெறி ஷெல்கள் என்பவையும் கொண்டுவரப்பட்டதால்தான் அத்தனை லொறிகளில் ஏற்றப்படும் அளவுக்கு இருந்துள்ளன.

**கப்பலில் ஏவுகணைகள் வந்த உற்சாகத்தை 10.11.97ல் காட்டியிருக்கிறார்கள் கடற் புலிகள்.**

கப்பலை கேடயமாக வைத்து நடத்த இருந்த தாக்குதல் தோல்வியில் முடிந்ததை கௌரவப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டனர் கடற்புலிகள்.

கப்பல் தாக்கப்பட்ட செய்தியை பெரும் சாதனையாகக் காட்டிய விமானப்படையினருக்கு பதிலடி கொடுக்கவும் திட்டமிட்டனர்.

கப்பல் தாக்கப்பட்டு 15 கடற்புலிகள் பலி யான அதே தினத்தில் விமானப்படை விமானம் ஒன்றையாவது தாக்குவதுதான் கடற்புலிகளின் திட்டம்.

9.11.97 ஞாயிறு முழுவதும் கடற்புலிப் படகுகள் மீன்பிடிப் படகுகள் போல முல்லைக் கடற்பகுதியில் காத்திருந்தன.

ஏவுகணைகள் தயார் நிலையில் இருந்தன. ஞாயிறு அன்று குறிவைக்க தோதாக இரை கிடைக்கவில்லை.

மறுநாளும் காத்திருந்தனர்.

முதல்நாள் ஏமாற்றத்தை நிறைவு செய்வது போல,கப்பல் தாக்குதலில் பங்கு கொண்ட அதே எம்.ஐ. 24 ஹெலிகொப்டர் முல்லைக் கடலுக்கு மேல் பறந்து போனது.

எம்.ஐ.17 ரக ஹெலிகள் மூன்று படையினரை ஏற்றிக்கொண்டு ஆனையிறவுக்குச் சென்றன. அந்த மூன்று ஹெலிகளுக்கும் பாதுகாப்பாக சென்றதுதான் எம்.ஐ.24.

எம்.ஐ.17 ரக ஹெலிகள் தாக்குதல் நடத்தக் ககூடியவை அல்ல. அதனால்தான் எம்.ஐ.24 இன் பாதுகாப்புடன் பயணித்தன.

**எம்.ஐ.24ஐ 'கன்ஷிப்' என்று அழைப்பர். 'பறக்கும் போர்க் கப்பல்' என்றும் கூறலாம்.**

கப்பல் மீது தாக்குதல் நடத்திய பறக்கும் போர்க் கப்பலை குறிவைத்து கடலில் நின்ற கடற்புலிப் படகில் இருந்து ஏவுகணை பறந்து சென்றது.

ஹெலி தீப்பிடித்தது.

சரியாக ஒரு வாரத்தின் பின்னர் முல்லைக் கடலின் மடியில் மற்றொரு தீப்பிழம்பு.

**புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட இடத்தில் இருந்து ஹெலி வீழ்ந்து எரிந்த பகுதி 35 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. கொக்கிளாய் கடற்பரப்பு என்று சொல்லப்பட்டாலும், அதுவும் முல்லை கடற்பிராந்தியத்திற்குள்தான் அடங்குகிறது.**

எம்.ஐ.24 ஐ ஏவுகணை வால் பகுதியில்தான் தாக்கியுள்ளது. அதனால்தான் வானிலேயே வெடித்துச் சிதறாமல் தீப் பற்றியபடி கடலில் விழுந்துள்ளது. அது போல எம்.ஐ.17மீதும் ஏவுகணை பட வேண்டிய இடத்தில் சரியாகப் படவில்லை.

ஆனால் இது தொடர்பாக படைத்தரப்பு தெரிவித்ததாக சில பத்திரிகைகளில் வெளியான செய்திகள் விநோதமாக உள்ளன. குறிப்பிட்ட ஹெலிகளை தயாரித்தவர்கள் பொருந்தாத ஆயுதங்களை எல்லாம் நம்நாட்டில் வைத்து பொருத்திவிட்டார்களோ என்று ஆச்சரியம் வருகிறது.

எம்.ஐ.17ல் ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்ததாம். அதன் உதவியால் ஏவுகணையை தடுத்து தாக்கினார்களாம். என்று ஒரு செய்தி.

எம்.ஐ.17ல் மட்டுமல்ல, அதனைவிட பாரிய சண்டைக் ஹெலியான எம்.ஐ.24ல் கூட ஏவுகணையிடம் இருந்து தப்பக்கூடிய வசதியோ, ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணையோ கிடையவே கிடையாது.

தரையில் உள்ள இலக்குகளை தாக்கக் கூடிய ஏவுகணைகள் நான்கு எம்.ஐ.24ல் உள்ளன. இந்த ஏவுகணைகளும் மிசைல் ரூ மிசைல் என்றழைக்கப்படும் ஏவுகணையை எதிர்த்து தாக்கும் எவுகணையும் ஒன்றல்ல.

கப்பல் தாக்குதலில் பங்குகொண்ட எம்.ஐ.24 ஹெலியை தாக்க முடிந்ததுதான் புலிகளும்கூட எதிர்பாராத சம்பவம்.

கப்பலில் இருந்து ஏவுகணைகள் வந்து இறங்கிவிட்டன. இனிமேல் வான்பரப்புக்களில் தொடர் அபாயம் உள்ளது என்ற தகவலையும் ஹெலி மீதான தாக்குதல் வெளிப்படுத்தி உள்ளது. ■

நாரதர்

### கப்பலோட்டும் புலிகள்

இலங்கையில் கப்பலோட்டுவதில் பெயர் பெற்றவர்கள் தமிழர்கள். அதிலும் வல்வெட்டித் துறையை சேர்ந்தவர்கள்தான் முதன் முதலில் கப்பல் கட்டி அமெரிக்கா சென்றனர்.

1937ல் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இருந்து புறப்பட்ட அன்னபூரணிக் கப்பல் ஒன்றரை வருடத்தின் பின்னர் அமெரிக்காவை சென்றடைந்தது.

'இலங்கையின் முதலாவது உத்தியோக பற்றற்ற தூதுவர்கள்' என்று அமெரிக்க பத்திரிகையான 'போஸ்ரன் குளோப்' எழுதியது.

தற்போது இலங்கையில் இருந்து நவீன வர்த்தகக் கப்பல்கள் சர்வசாதாரணமாக உலகெங்கும் சென்று வருகின்றன.

அதே சமயம் புலிகளும் கப்பல் ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புலிகளின் உறுப்பினர்கள்தான் முதலில் புலிகளின் கப்பல்களில் மாலுமிகளாக இருந்தனர். தற்போது ஏனைய பகுதி உறுப்பினர்களும் பயிற்றப்பட்டுள்ளனராம். ■

# அதிரடி அய்யாத்துரை




**யாழில் உள்ள** முன்னாள் போராளிகள்மீது பச்சை உடையினர் ஒரு கண் வைத்திருக்கினமாம். நகர கடைகளுக்குச் சென்ற பச்சை உடையினர், றெண்டு எழுத்தார் பணம் கேட்டுவந்தால் கொடுக்க வேண்டாம், எண்டு கூறினார்களாம். அடுத்ததாக அவர்கள் கூறிய விஷயம்: "இங்குள்ள ஏனைய இயக்கக்காரர் வந்து கேட்டாலும் கொடுக்க வேண்டாம், எங்களிடம் தெரிவியுங்கள்!"

"எங்களை என்ன கப்பம் வாங்கும் ஆட்கள் எண்டோ நினைச்சினம்" எண்டு பொருமுகிறார்களாம் இயக்கத்தினர்.

**சபைக்கு செல்வதில்** கடும் ஒழுங்கு காட்டுகிறார் திருவான மலைக்கு சம்பந்தமானவர். ஊதியத்தை தனியான அலவுன்சும் கிடைக்கும். அடிக்கடி பேசிப் பத்திரிகையில் பேர் வந்தால் அடுத்த முறை போட்டியிட மூலதனமாகவும் இருக்கும். புகழும் சேரும். கல்லு ஒன்று, மாங்காய்கள் இரண்டு. ஆள் ஒரு பேய்க்காய்தான்.

**யாழ்ப்பாண நகரத்தின்** தந்தையாகியே தீருவது என்று கழக மாணிக்கம் உறுதியான முடிவோடு இருக்கிறாராம். யாழ் பஸ் நிலையம் அமைத்துக் கொடுப்பது முதல், இசை நிகழ்ச்சிகள், சிரமதானம், மணிக்கோபுரம் திருத்துதல் என்று சுறுசுறுப்பாக பணி நடக்குதாம். எல்லாப் பணிகளும் மாநகர எல்லைக்குள்தான் நடக்குது!

**முரசை மிரட்டியதாக** கழக வட்டாரம் யாருக்கோ காது குத்திக் கதை சொல்லித் திரிகிறதாம். சும்மா ஒரு பேச்சுக்காக எண்டாலும் மிரட்டிப்போட்டு கதை சொல்லி இருக்கலாமல்லோ? மிரட்டினால் மேலும் திரட்டித் திரட்டி எல்லோத் தகவல் போட்டிருப்போம்!

**வன்னியில்** கடும் அபாயத்தில் உள்ள நோயாளிகளை றெண்டு எழுத்தார் தங்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கிறார்களாம். கண்ணைக் கட்டித்தான் அழைத்துப் போகிறார்கள். கச்சிதமான சிகிச்சையாம். தட்டுப்பாடான சில மருந்துகளையும் அரச ஆஸ்பத்திரிகளுக்கு கொடுக்கினமாம். றெண்டு எழுத்தாரின் மருத்துவமனை நவீன மருத்துவ மனைபோலவே இருக்கிறதாம். சத்திர சிகிச்சைப் பிரிவு உட்பட ஜெனரேட்டர் உபயத்தில் மின்சாரம், குளிர்சாதனம் யாவும் இயங்குகிறதாம்.

**அதிகாரத் தரப்பாரின்** தொலைக் காட்சிக்கு கூட்டான கட்சித் தலைவர் கொடுத்த பேட்டியை றெண்டு எழுத்தாரும் கண்ணுற்றவையாம். குறிப்பாக றெண்டு எழுத்தாரின் தலைவரே நேரடியாகப் பார்த்ததுடன், ஒரு மர்மமான புன்னகையையும் உதிர்த்தாராம்.

**கூட்டான கட்சித் தலைவருக்கு** டென்ஷன் கூடப்பிறந்தது. ஐயா ஆயுதம் தூக்கியிருந்தா ஒருத்தரும் தப்பியிருக்க இயலாது. கேட்டால் காந்தீயவாதி என்பார். காந்தீயத்தின் ஒரு அம்சம் அமைதியாக இருத்தல். அங்கம் பிளக்க அடிச்சால் என்ன? பங்கமாய வசை வாடினால் என்ன புலன் அடக்கம் முக்கியம். ஆயுதம் தூக்காமல் இருப்பது மட்டும்தான் காந்தீயம் எண்டு கதை விடப்படாது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், தொலைக்காட்சிப் பேட்டியில் யாரோ கேள்வி கேட்க, ஐயா டென்ஷனாகி "மட்டக்களப்பு கொட்டாஞ்சேனையில் ஐ.தே.கட்சி ஆட்சியில் படுகொலை நடந்ததை மறந்து போனியளோ?" எண்டு கேட்டவர். கொட்டாஞ்சேனை இருப்பது கொழும்பில்! படுகொலை நடந்த இடம் கொக்கட்டிச்சோலை! காந்தீயவாதிகள் முதலில் சாந்தியான மனநிலை பெறுவார்களாக! காந்தீயத்தில் மற்றொரு முக்கிய அம்சம் பொய் சொல்லாமை!

**ஆங்கிலத்தில் எழுதும்** தமிழ் விமர்சகர்கள் சிலருக்கு 'முரசு' மீது பொறாமையென்றால் அப்படி ஒரு பொறாமை. நுனிப்புல் மேய்ந்து கொண்டு கற்பனைகளை அள்ளிப்போட்டுக் கொண்டு திரிய தலையாகி விட்டதாம். உதாரணமாக, "ஃபொக்ஸ் இங்கே வந்தால், புலிகளின் சம்மதத்துடன் வந்து குதித்துவிட்டார். அரசு, புலிகள் பேச்சு நடக்கப் போகுது" எண்டு கற்பனைக்கதை பண்ணிக்கொண்டு இருக்கலாம். ஆனால் முரசு உண்மையை உரைத்துவிடுகிறதே. பின்னர் அது சரிதான் எண்டும் நிரூபணமாகிறதே! அதுதான் முரசில் அவைக்கு எரிச்சல். 'நான்தான் பெரிய விமர்சகன்' என்று பெயரெடுக்கவோ, புகழ்பெறவோ முரசில் யாரும் எழுதுவதில்லை. ஒவ்வொரு ஆக்கமும் தகவல் திரட்டல், அதைச் சரிபார்த்தல், தவறு இருந்தால் அதனை மறுவாரம் திருத்துதல் என்று ஒரு குழுவாகச் சேர்ந்து தரும் உழைப்பின் அறுவடை தானுங்கோ! 'முரசின்' நேர்மையான விமர்சனங்களும், கணிப்புக்களும், தகவல்களும் அதுதான் பளிச்சிடுகின்றன பாருங்கோ. அது தெரியாமல் யார் யாருக்கோ விளம்பரம் தேடிக் கொடுக்கும் பொறாமையாளர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்! ஹி.ஹி.ஹி.

**கனடாவில் மூன்று பத்திரிகைகள்** முரசை மறுபிரசுரம் செய்கின்றன. முரசு செல்ல முன்னரே முரசின் பக்கங்களை ஃபக்ஸ் மூலம் எடுத்து மறுபிரசுரம் செய்கிறார்கள். இதனால் முரசு விற்பனை பாதிக்கிறது என்கிறார் கனடா முகவர். விற்பனை முக்கியம்தான். இல்லாவிட்டால் உண்டியல் குலுக்கி இப்படி ஒரு பத்திரிகை நடத்த இயலாது. எண்டாலும் அரசியல் விமர்சனங்கள் அனைவரும் அறிய வேண்டியவை என்பதால் நல்லாப் பரவட்டும். தடுக்கமாட்டோம் எண்டு சொல்லிவிட்டது முரசு நிர்வாகம். ஆனால், மறுபிரசுரத்தார் மத்தியில் யார் முதலில் மறுபிரசுரம் செய்வது எண்டு போட்டி. அதில் தோல்வி கண்ட கனடா பத்திரிகை ஒன்று இப்போது 'முரசை' திட்டுகிறது. இதை எங்கே போய்ச் சொல்லி அழுவது அல்லது சிரிப்பது?

**இவ்வாரம் பொன்மொழிப்**

**"தோல்வி வந்தால்**
**அது உனக்குப்**
**பிரியமானதாகக் காட்டிக்கொள்!**
**வெற்றி அடைந்தால்**
**அது மிகவும்**
**பழக்கப்பட்டதுபோல் காட்டிக்கொள்!**
**இதுதான் வாழ்க்கையின்**
**இரகசியம்!"** ■

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




புலிகளுடன் பேசுவதற்கான ஏற்பாடுகள் இரகசியமாக நடந்துகொண்டிருந்தன. அதே சமயம் பகிரங்க அரசியல் நாடகம் ஒன்றும் அரங்கேறியது.

பாராளுமன்றத்தை தொடர்ச்சியாக பகிஷ்கரித்துவந்த ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேச்சு நடத்தினார் ஜனாதிபதி பிரேமதாசா.

பேச்சுவார்த்தையின்போது ஈரோஸ் எம்.பி.கள் குழுவுக்கு தலைமை தாங்கியவர் வே.பாலகுமார். ஈரோஸ் எம்.பி.கள் சார்பாக பாலகுமார் முன்வைத்த முக்கிய கோரிக்கை, "விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தவேண்டும்" என்பது.

அக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக இணக்கம் தெரிவித்தார் பிரேமதாசா.

செய்தி ஊடகங்கள் மூலம் பிரேமதாசா, ஈரோஸ் எம்.பி.கள் பேச்சுவார்த்தை

## அமுதருக்கு தகவல்

ஈரோஸ் எம்.பி.கள் பாராளுமன்றம் செல்லாமல் இருந்த விவகாரத்தில் இந்திய அரசும் தலையிட்டது. ஈரோஸ் தலைவர்களில் ஒருவரான சங்கர் ராஜு இந்திய 'றோ'

இத் தகவல் அமுதருக்கு நேரடியாகச் சொல்லப்படவில்லை. முன்னாள் யாழ் தொகுதி எம்.பி.வெ.யோகேஸ்வரன் மூலமாகவே தெரிவிக்கப்பட்டது.

யோகேஸ்வரன் புலிகளுடன் தொடர்பு

## பிரேமா தீவிரம்

புலிகளுடன் இரகசியத் தொடர்பு ஏற்பட்டுவிட்டதால் ஜனாதிபதி பிரேமதாசா உற்சாகமாகினார்.

"இந்தியப் படையை வாபஸ் பெறும் விடயத்தில் இலங்கையும், இந்தியாவும் பேச்சு நடத்தி ஒரு முடிவுக்கு வரலாம்" என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியிருந்தார்.

நெத்தியடியாக பிரேமதாசாவின் கருத்து வெளியானது; "ஜூலை மாதத்துக்குள் (89) இலங்கையிலிருந்து இந்தியப்படை வெளியேறாவிட்டால் இராணுவ முகாம்களுக்குள் முடக்கப்படும்" என்று அறிவித்தார் பிரேமதாசா.

பிரேமதாசாவைத் தவிர வேறொருவரால் நிச்சயமாக அப்படியொரு துணிச்சலான அறிவிப்பை வெளியிட்டிருக்க முடியாது.

இந்திய எதிர்ப்பில் முன்னணியில் நின்ற ஜே.வி.பி.யினரைவிட பிரேமதாசா முன்னணியில் நிற்க ஆரம்பித்தார்.

அதேவேளை, தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினரை ஒழித்துக் கட்டும் வேட்டைகளும் நடந்து கொண்டிருந்தன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னவின் அணுகுமுறைகள் முரட்டுத்தனமானவை. 'அடிக்கு அடி தான் சரி' என்று அடிக்கடி ரஞ்சன் கூறுவது வழக்கம்.

அதனால் இந்தியப் படைக்கு எதிராக போராடிய புலிகளுடன் பிரேமதாசா பேச்சு நடத்துவதற்கு எதிர்ப்பு எதுவும் எழவில்லை.

ஜனாதிபதி தேர்தல் நேரத்தில் புலிகளின் ஆதரவைக் கோரி வன்னிக்கு சென்றவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர்.

"இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை இரத்துச் செய்வோம்" என்றும் தேர்தல் பிரசாரத்தில் கூறியது சுதந்திரக் கட்சி.

எனவே- இந்தியப் படைக்கு எதிரான பிரேமதாசாவின் நடவடிக்கைகளையோ, பிரேமதாசாவுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தொடர்பாகவோ எதிரான கருத்துக்கள் தெரிவிக்க முடியாத நிலையில் இருந்தனர் சுதந்திரக் கட்சியினர்.

பிரேமதாசாவுக்கு சூழ்நிலை கை கொடுத்தது. சூழ்நிலை அமைந்தும் அதனை சரிவரப் பயன்படுத்த முடியாமல் இருந்தவர்கள், இருப்பவர்கள் பலர் உண்டு.

ஆனால் பிரேமதாசா சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொள்ளத் தெரிந்தவர். இந்த விடயத்தில் பிரபாகரனுக்கும்,



# வன்னியில் இருந்து கொழும்புக்கு

பற்றிய செய்திகளும் காணப்பட்ட இணக்கங்களும் வெளியாகின.

தமது முக்கிய கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா இணக்கம் தெரிவித்ததை அடுத்து ஈரோஸ் எம்.பி.கள் பாராளுமன்றம் செல்ல முடிவு என்றும் செய்திகள் தெரிவித்தன.

ஈரோஸ் எம்.பி.கள் கேட்டுக்கொண்டதால்தான் புலிகளுடன் பேசுவதற்கு பிரேமதாசா முன்வந்ததுபோல காட்டத்தான் இந்த நாடகம் எல்லாம் நடந்தேறின.

பிரேமதாசாவின் அரசியல் விவேகத்திற்கு பல உதாரணங்களைச் சொல்லலாம். அதில் ஒன்றுதான் மேற்கண்ட அரசியல் நாடகம்.

1989ல் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஈரோஸ் தலைவர் பாலகுமார் வன்னிக் காட்டுக்குச் சென்று பிரபாகரனை சந்தித்தார் அல்லவா.

அச் சந்திப்பில் பிரபாகரனுக்கு கொடுத்த உத்தரவாதத்தை கடைசிவரை பாலகுமார் மீறவில்லை. பாராளுமன்றத்திற்கு தெரிவான பின்னரும் புலிகளுடன் இணைந்தே முடிவுகளை மேற்கொண்டார்.

பாலகுமார்மீது பிரபாகரனுக்கு நம்பிக்கை ஏற்பட இத்தகைய அணுகுமுறைகளும் ஒரு காரணம் எனலாம். அதனால்தான் பின்னர் பாலகுமார்,, பரராஜசிங்கம் ஆகியோரை தம்முடன் சேர்த்துக்கொண்டனர் புலிகள்.

உளவுப் பிரிவுக்கு நெருக்கமானவர்.

"ஈரோஸ் எம்.பி.களை பாராளுமன்றம் செல்லவைக்கிறேன்" என்று 'றோ'வுக்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டு கொழும்பு வந்தார் சங்கர் ராஜு.

பாலகுமாரிடம் எப்படியெல்லாமோ வலியுறுத்திப் பார்த்தார் சங்கர் ராஜு. பாலகுமார் அசைந்தே கொடுக்கவில்லை.

இறுதியாக பிரேமதாசாவுடன் நடந்த சந்திப்பின்பின்னர்தான் பாராளுமன்றம் செல்லும் முடிவை எடுத்தார் பாலகுமார். புலிகளின் சம்மதத்துடன் எடுக்கப்பட்ட முடிவுதான் அது.

களை வைத்திருந்தார். அதேசமயம் அமுதர் மீதும் பாசம் கொண்டிருந்தார்.

யோகேஸ்வரன் அத் தகவலை அமுதருக்கு தெரிவித்தார். "அவர்கள் சொல்லி நான் என்ன கேட்பது? எங்கள் பாதையில் அவை ஏன் குறுக்கிடவேண்டும்?" என்று அமுதர் யோகேஸ்வரனிடம் கேட்டாராம்.

# அமுதருக்கு முதல் எச்சரிக்கை!



மூர்த்தி, அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், யோகி ஆகியோர் கொழும்பில் வந்து இறங்குகின்றனர். முதல் விஜயம்.

பிரேமதாசாவுக்கும், ரஞ்சனுக்கும் இடையே ஒரு வித்தியாசம் இருந்தது.

பிரேமதாசாவுக்கு அரசியலில் சகல தந்திரங்களும் அத்துப்படி. அணைக்க வேண்டிய நேரத்தில் தன் எதிரிகளையும் அணைத்துக்கொள்வார்.

ரஞ்சனுக்கு அந்த சூட்சுமம் எல்லாம் தெரியாது. நேரடி நடவடிக்கைதான்.

ஜே.வி.பி. பணிந்து வந்தால் பேச்சு நடத்தலாம் என்பது பிரேமதாசாவின் எண்ணம். ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டியே தீரவேண்டும் என்பது ரஞ்சனின் எண்ணம்.

படையினரும்,பொலிசாரும் ஜே.வி.பி.யினரை ஒடுக்கும் நடவடிக்கைகளை கடுமையாக்க ரஞ்சன்தான் ஊக்குவிப்பு வழங்கிவந்தார்.

தென்னிலங்கை வீதிகளில் பிணங்கள் டயர்களுடன் டயர்களாக எரிந்தன.

ஜே.வி.பி. என சந்தேகிக்கப்பட்ட சிங்கள இளைஞர்கள் மறுபேச்சே இல்லாமல் டயர்களில் போடப்பட்டனர்.

புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும் செய்திகள் சிங்கள மக்களுக்கும் புதிய விஷயமாக இருந்தன.

இந்தியப் படை வெளியேற வேண்டும் என்ற அபிப்பிராயம் சிங்கள மக்களிடம் பரவலாக இருந்தது.

பிரேமதாசாவுக்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன.

## கொழும்பில் புலிகள்

புலிகளுடன் பேச்சு நடத்துவது என்பது முடிவாகிவிட்டது.தென்னிலங்கையில் அதற்கு எதிர்ப்பும் இல்லை என்று தெரிந்துவிட்டது.

பிறகென்ன தயக்கம்?

மே மாதம் மூன்றாம் திகதி இரண்டு பெல் ரக ஹெலிக்கொப்டர்கள் கொழும்பில் இருந்து புறப்பட்டன.

முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியில் மாலை 3.10 மணியளவில் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் தரையிறங்கின.

ஹெலிகள் இரண்டும் தரையிறங்கிய இடத்தில் புலிக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

30ற்கு மேற்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் அணிவகுத்து நின்று சல்யூட் பண்ணினார்கள்.

பிறிதொரு நாட்டுக்குள் சென்று விட்டதுபோல உணர்ந்தனர் ஹெலியில் சென்ற அரச தரப்பினர்.

22 நிமிடங்களின் பின்னர் புலிகள் இயக்க பிரதிநிதிகளுடன் முல்லைத்தீவு காட்டில் இருந்து கொழும்புக்கு திரும்பியது ஹெலிக்கொப்டர்.

அன்ரன் பாலசிங்கம், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம், திலகர், யோகி, மூர்த்தி உட்பட பத்துப்பேர் கொண்ட பிரதிநிதிகள் குழு ஹெலியில் கொழும்பு வந்து இறங்கியது.

ஏ.கே.47 துப்பாக்கிகள் சகிதம் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தங்கள் பிரமுகர்களுக்கு பாதுகாப்பாக ஹெலியிலேயே வந்தனர். கொமாண்டோ சீருடையுடன் காணப்பட்டனர். (தொடர்ந்து வரும்)

## பாராளுமன்ற பயன்பாடு

பாராளுமன்றத்தால் தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்க இயலாது என்பது தெளிவு.

எனினும் தமிழ் மக்களிடம் தமக்குள்ள செல்வாக்கை எடுத்துக் காட்டவும், தவறான சக்திகள் பாராளுமன்றம் சென்று தங்களை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்வதை தடுக்கவும், வேறு சில சட்டபூர்வ வாய்ப்புக்களை பயன்படுத்தவும் பாராளுமன்றம் செல்வதாகவே கூட்டணி முதல் இன்றைய பாராளுமன்ற தமிழ்க் கட்சிகள் வரை கூறிவந்தன.

ஆனால் தற்போது தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றம் செல்வதுதான் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்றுத்தரும் வழி என்று காண்பிக்க முற்படுகின்றனர்.

பாராளுமன்றத்திற்கு செல்வதும், அங்கு உரையாற்றுவதும்தான் இனவிடுதலைக்கான தீவிரப் பணி என்பது போல மக்களை நம்பவைக்கவும் முயன்று வருகின்றனர்.

ஆனால் ஈரோஸ் தலைவர் பாலகுமாரும், ஈரோஸ் எம்.பி.களும் மேற்கொண்ட அணுகுமுறைதான் பாராளுமன்ற பயன்படுத்தல் என்பதின் உண்மையான அர்த்தமாகும்.

புலிகளுக்கு பயந்துதானே செய்தார்கள், தாமாகச் செய்தார்களா? என்று கேள்வி எழலாம்.

பயத்தையும் பதவி ஆசை வென்றுவிடும் என்பதை நாம் அனுபவத்தில் கண்டு வருகிறோம். "அரசும், புலிகளும் பேசவேண்டும்" என்று கூட்டணி எம்.பி.கள் உதட்டளவில் கூறுவது பயத்தின் வெளிப்பாடுதான்.

ஆனாலும் புலிகள் எதற்காக போராடுகிறார்களோ அந்த இலட்சியத்திற்கு முற்றிலும் மாறான தீர்வு யோசனைக்கு ஆதரவளிப்பதும், தாமாகவே வடக்கு-கிழக்கின் சில பகுதிகளை தாரை வார்ப்பதையும் காண்கிறோம்.

கூட்டணியின் செயலதிபர் இரா. சம்பந்தன் எம்.பி.யாக முன்னர் புலிகளின் அனுமதியைப் பெற பல வழிகளில் முயன்றார். பிரபாகரனிடம் இருந்து கடைசிவரை 'சிக்னல்' கிடைக்கவே இல்லை. இறுதியில் ஆசை வென்றது. எம்.பி.யாகப் பதவி ஏற்றார்.

ஈரோஸ் எம்.பி.களும் நினைத்திருந்தால் அரசின் பாதுகாப்பை பெற்றுக் கொண்டு எம்.பி.களாக தொடர்ந்து இருந்திருக்கலாம். பிரபாவுக்கு கொடுத்த வாக்குறுதியை பாலகுமார் மீறியிருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை.

ஈரோஸ் எம்.பி.கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்துக் கொண்டிருந்த காலத்தில்தான் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்றார் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம்.

தேசியப் பட்டியல் மூலம் அமிர்தலிங்கம் பாராளுமன்றம் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோதே புலிகளிடமிருந்து தகவல் அனுப்பப்பட்டது.

"பாராளுமன்றம் செல்ல வேண்டாம். இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். இந்தியாவுக்கு திரும்பிச் சென்றுவிடுங்கள்" அதுதான் பிரபா சொல்லி அனுப்பிய தகவல்.

தேசியப் பட்டியல் மூலம் அமிர்தலிங்கம் பாராளுமன்றம் சென்றார்.

வன்னிக்காட்டில் இருந்த பிரபாகரன் அமிர்தலிங்கத்தாருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்ற நாள் குறித்தார்.

அரசுடன் பேச்சு நடக்கும்போது அமுதரையும் போடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. புலிகளின் உளவுப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்த விச்சுவிடம் நடவடிக்கைக்கான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது.

அரசு, புலிகள் பேச்சு கொழும்பில் ஆரம்பமாக முன்னரே அமிர்தலிங்கத்தை தீர்த்துக்கட்டும் திட்டம் தீட்டப்பட்டுவிட்டது.

# கொழும்பு ஒப்பந்தம்

அன்புள்ள வாசகர்களே!

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் இத் தொடரில் நான் சில கருத்துக்களை தெரிவித்திருந்தேன்.

இந்தியாவின் நலன் என்பதை முதன்மைப் படுத்தியதாகவே அந்த ஒப்பந்தம் அமைந்திருந்தது என்று ஆணித்தரமாக குறிப்பிட்டு வந்தேன்.

இந்தியாவுக்கு எதிரான உணர்வுடன் இத் தொடர் எழுதப்படுவதாக சிலர் முத்திரை குத்தினார்கள்.

இந்தியாவுடன் நட்பு வேண்டும். இந்தியாவின் நட்பு அவசியம் என்பதே என்கருத்து. ஆனால் என் கருத்து என்பதும், வரலாறு என்பதும் ஒன்றல்ல.

எனது கருத்துக்கு ஏற்ப நடந்த நிகழ்ச்சிகளுக்கு சாயம் பூச இயலாது. இந்தியா நண்பன் என்பதற்காக, அதன் அணுகுமுறைகள் யாவுமே சரியாக இருந்தன என்று ஊதுகுழல் வாசிக்கவும் முடியாது.

தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப நடந்தவற்றை திரிபுபடுத்தி, நடக்கப்போகின்றவற்றுக்கு நேர் எதிரான கணிப்புக்கூறி பழக்கப்பட்டவர்களுக்கு முரசின் அணுகுமுறை புரியாது. அதுபோல அதில் இடம் பெறும் இத்தொடரின் தன்மையும் விளங்காது. அதுதான் மிகவும் குழம்பிப்போய் ஆள் ஆளுக்கு ஒவ்வொரு விதமாக பொறாமை கொட்டி வருகிறார்கள். போகட்டும், இயலாதவர்கள் அவர்கள்!

இந்தியத் தூதராக இருந்தவர் ஜே.என் திக்ஷித். அவர் எழுதிய 'கொழும்பில் பணி' (Colombo Assignment) என்ற புத்தகம் சமீபத்தில் வெளியாகியுள்ளது. இப் புத்தகம் வெளியாக முன்னரே இத் தொடரில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிக் கூறிய கருத்துக்களை திக்ஷித் எழுதிய புத்தகம் தெளிவாக்குகிறது. முரசு கூறும் முன்னர், காலம் அதனை உறுதி செய்யும் பின்னர்!

திக்ஷித் எழுதிய புத்தகத்தில் இருந்து சில பகுதிகள்:

"நம்பிக்கையும் நிராசையும் மாறி மாறி கைகாட்டிய அந்த நீண்ட நெடிய பேச்சுவார்த்தை ஒரு வழியாக முடிந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக ஜூலை29 அன்று ராஜீவ் காந்தி இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் தயாராகி விட்டன.

இந்தியா இந்த விவகாரத்தில் நேரடியாக பங்கு கொண்டாலொழிய இலங்கை அரசும் தமிழ்க் குழுக்களும் (குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு) எந்த ஒப்பந்தத்தையும் ஏற்க மாட்டார்கள்; நீடித்த சமரசத்திற்கும் ஒத்துவரமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்திருந்தார் ராஜீவ்.

ஜெயவர்த்தனேயின் நோக்கங்கள் பற்றி ராஜீவுக்கு சந்தேகம் இருந்தது. விடுதலைப் புலிகள் மற்றும் இதர தமிழ்க் குழுக்களின் பிடிவாதப் போக்கும் அவருக்கு ஏமாற்றமளித்தது. பெங்களூரில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டின்போதும் நாம் எடுத்த முயற்சி தோற்ற

பிறகு நான் ராஜீவிடம் ஒரு யோசனை கூறினேன்.

இலங்கைப் பிரச்சனை தீர வேண்டுமென்றால் இந்தியா மத்தியஸ்தர் என்ற நிலையிலிருந்து மாறி அமைதியைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதம் தரக்கூடிய வகையில் பங்கு பணியாற்ற வேண்டும் என்று கூறினேன்.




இன,மத,மொழி அடிப்படையில் ஸ்ரீலங்காவில் தனியாக தமிழர் நாடு அமைக்கச் சொல்லி புலிகள் அமைப்பு வற்புறுத்துவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் பிரதேச ஒற்றுமைக்கும் கூட எதிர்மறையான தீவிர பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் எனக்கு தீர்மானமாக ஒரு கருத்து இருந்தது.

தமிழர்களின் நலனை முன்னிட்டு விடுதலைப் புலிகள் குரல் எழுப்புவதில் நியாயம் இருந்தாலும் அந்த அமைப்பு எதேச்சாதிகாரப்போக்கு கொண்டது என்பதே என் கருத்து. எந்தவிதமான கருத்து வேற்றுமைகளையும் தீர்த்துக்கொள்வதற்கு வன்முறையை நாடும் இயக்கம் அது. அரசியல் களத்திலும் யுத்த களத்திலும் புலிகளின் நடவடிக்கைகளைப் பார்த்த பிறகே நான் இந்த முடிவுக்கு வந்தேன்.

புலிகள் சமரசத்திற்கு ஒப்புக் கொண்டது குறித்து என்னுடைய சகாக்களான ஐ.பி.இயக்குநர் கோபி அரோரா, அயலுறவுச் செயலர் குல்தீப் சஹதேவ் ஆகியோருக்கு சந்தேகம் இருந்தது.

எனக்கும் அதுபற்றி ஓரளவு கவலை இருந்தது.

எனவே ஆலோசனைக்கூட்டம் ஒன்றில் நான் இரண்டு கேள்விகளை எழுப்பினேன். எம்.ஜி.ஆரும் தமிழகத் தலைவர்களும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வார்களா? என்பது முதல் கேள்வி. ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு விடுதலைப்புலிகள் அதிலிருந்து பின்வாங்கினால் ஒப்பந்தப்படி நடக்கும்படி அவர்களை நாம் நிர்ப்பந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்; அப்படி நடந்தால் நம்மால் அதை வெற்றிகரமாகச் செய்ய முடியுமா? என்பது என் இரண்டாவது கேள்வி.

எம்.ஜி.ஆரிடமும் மற்ற தமிழகத் தலைவர்களிடமும் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதாகவும் அவர்கள் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாகவும் ராஜீவ் கூறினார்.

புலிகளோடு மோதவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் என்ன செய்வது என்ற கேள்வி பற்றி அப்போதைய இராணுவ தலைமை தளபதி கே. சுந்தர்ஜியின் கருத்தைக் கேட்டார்.

ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டபிறகு அதிலிருந்து பின்வாங்கி இந்தியாவுடனோ இலங்கையுடனோ மோதும் தெம்பு விடுதலைப் புலிகளுக்கு இருக்காது என்று சுந்தர்ஜி கூறினார்.

அப்படியே இராணுவரீதியாக மோத புலிகள் முடிவு செய்தாலும் இரண்டே வாரங்களில் அவர்களை ஒடுக்கிவிட முடியும் என்றும் அவர் கூறினார். ஜெயவர்த்தனே இந்த ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்னுடைய பிரதானமான பணி என்று ராஜீவ் என்னிடம் சொன்னார்.

ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புவரை ஜெயவர்த்தனே சந்தேகம் கிளப்பிக் கொண்டே இருந்தார்.

செல்வாக்கு மிகுந்த சில அமைச்சர்கள் பிரேமதாசாவின் தலைமையில் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது அதற்கு ஒரு காரணம். திருமதி பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா ஃப்ரீடம் பார்ட்டியும் புத்தெழுச்சி பெற்ற ஜனதாவிமுக்தி பெரமுனாவும் போராட்டத்தில் இறங்கக் கூடும் என்று அவர் அஞ்சியது இரண்டாவது காரணம். மூன்றாவதாக அரசியல் ரீதியான தீர்வு காண்பதில் அவருக்கு நிஜமான அக்கறை இல்லை. ஆனால் அரசியல் ரீதியான தீர்வுக்கு அவர் ஒப்புக் கொள்ளாவிட்டால் இந்தியா தனது மத்தியஸ்த முயற்சிகளை முற்றாகக் கைவிட்டு விடும் அதன் பிறகு இந்தியர்களின்-குறிப்பாக தமிழக மக்களின் முழுமையான ஆதரவு இலங்கைத் தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கிடைத்துவிடும் என்று அவரிடம் தெளிவாகச் சொன்ன பிறகுதான ஒப்பந்தத்திற்கு சம்மதித்தார்.

ஜூலை 29ஆம் திகதி இரவில் ஜயவர்த்தனவின் தரப்பிலும் சிக்கலான ராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க தூதர் ஜேம்ஸ் ஸ்பெயினுடன் ஜயர்த்தனே நெடு நேரம் ஆலோசனை நடத்தியதாக எங்களுக்குத் தகவல் வந்தது. அன்றிரவே ராஜீவிடம் நான் இந்த விவரங்களைத் தெரிவித்து விட்டேன். அமெரிக்க தூதரை தான் சந்தித்தது எப்படியும் வெளியில் தெரிந்துபோகும் என்பது ஜெயவர்த்தனேயின் சாணக்கிய மூளைக்கு நன்றாகவே தெரியும். ஜூலை 30ம் திகதி காலையில் ஜேம்ஸுடன் தான் சந்தித்த விஷயங்கள் பற்றி ஜெயவர்த்தனே ராஜீவிடம் கூறினார். சிங்களப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க அமெரிக்காவிடம் இராணுவ உதவி கோரியதையும் தெரிவித்தார்.

இருவரும் சமமான நிலையில் இருந்து கொண்டு ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஒப்பந்தத்திற்காக ஜெயவர்த்தனே இந்த அளவு முன்ஜாக்கிரதையோடு நடந்து கொள்வார் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்று ராஜீவ் கூறினார். பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக வேறு நாடுகளின் உதவியை நாடுவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்ன ராஜீவ், ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் விஷயத்தில் இந்த நாடுகள் எந்த விதத்திலும் தலையிடக் கூடாது" என்பதையும் தெளிவுபடுத்தினார்.

# 'பக்கேஜ்' முதல் 'பட்ஜெட்' வரை!

# வசீகரமான அரசியல் தந்திரங்கள்

அலசுவது– இராஜதந்திரி

**பொ**துஜன முன்னணி அரசாங்கம் தனது நாலாவது பட்ஜெட்டைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. பட்ஜெட்டின் முன்னரே அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் உயர்த்தப்பட்டிருந்தன.

**அதனால் பட்ஜெட்டில் விலை உயர்வுகள் பெரிதாக இடம்பெறவில்லை. அடுத்த சில மாதங்களில் மீண்டும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும், சிகரெட், மதுபானம் போன்றவற்றின் விலைகளும் உயர்த்தப்படக்கூடும்.**

'பட்ஜெட்'டின் முன்னரும், 'பட்ஜெட்'டின் பின்னரும் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படுவதுதான் பொதுஜன முன்னணியின் நாசூக்கான அணுகுமுறையாக இருந்து வருகிறது.

'பட்ஜெட்'டில் விலைகள் உயரும்போது உடனடியாக மக்களின் கவனத்தை பெறுவதுடன், பாரிய அதிருப்திகளையும் தோற்றுவிக்கக்கூடியதாக அமைவதுண்டு.

உள்நாட்டில் மட்டுமல்லாமல் உலக அரங்கில்கூட 'பட்ஜெட்' பற்றிய கவனம் இருக்கும். அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டிருக்குமானால், இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வருகிறது என்பதுதான் வெளியுலகின் அபிப்பிராயமாக இருக்கும்.

**இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் உள்நாட்டு மக்களையும், வெளியுலகையும் திருப்திப்படுத்தும் விதமாக 'பட்ஜெட்'டில் விலை உயர்வுகளை தவிர்த்திருக்கிறது அரசாங்கம்.**

'பட்ஜெட்' என்றாலே பொருட்களின் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பு கடந்த பல ஆண்டுகளாக மக்களிடம் பழக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது.

அவ்வாறான எதிர்பார்ப்பு இம் முறையும் இருந்தது. எனவே பொருட்களின் விலையை பட்ஜெட்டில் அரசு உயர்த்தாமல் விட்டிருப்பது சாதாரண மக்களுக்கு ஆச்சரியமான விடயம்தான்.

**பட்ஜெட்டின்போது உயர்த்தப்பட வேண்டிய விலைகள் பட்ஜெட்டின் முன்னரும், பின்னரும்தான் இப்போதெல்லாம் உயர்த்தப்படுகின்றன என்ற அரசியல் தந்திரம் மக்களுக்குப் புரியாது என்றே ஆட்சியாளர் நினைக்கின்றனர்.**

எனவே சாதாரண மக்களைப் பாதிக்காத

'பட்ஜெட்' இது என்றும், கடும் யுத்த செலவீனங்கள் மத்தியிலும் அடிமட்ட மக்களின் முதுகுகளில் சுமைகளைத் திணிக்கவில்லை என்றும் அரசாங்கம் பீற்றிக்கொள்ள அத் தந்திரம் சாதகமாக அமைந்துள்ளது.

நாட்டு மக்களுக்கு தம்மால் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியையும் பொதுஜன முன்னணி அரசால் நிறைவேற்ற இயலவில்லை.

ஜனரஞ்சகமான ஆனால் நாட்டின் இன்றைய நிலையில் நிறைவேற்றப்பட முடியாத வாக்குறுதிகளை பொதுஜன முன்னணி வழங்கியிருந்தது.

தண்ணீரைக் கூட கட்டணம் இல்லாமல் வழங்க முயற்சிப்போம் என்று இன்றைய அமைச்சரும், பொதுஜன முன்னணி முக்கியஸ்தருமான கிங்ஸ்லி விக்கிரமசிங்கா கடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

**அரசியல் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக ஆரவாரமான வாக்குறுதிகளை வழங்குவது புதுமையல்ல. ஆயினும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் சிலவற்றைக்கூட நிறைவேற்ற முடியாமல் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் திண்டாடி வருகின்றனர்.**

இந்நிலையில் சாதாரண மக்களை திருப்திப்படுத்த மிகையான பிரசாரங்கள், நாசூக்கான அரசியல் தந்திரங்கள் என்பவற்றையே ஆட்சியாளர்கள் நம்பியிருக்க வேண்டியவர்களாகின்றனர்.

**யுத்த கள நிலவரம் பற்றிய மிகையான பிரசாரங்கள் மூலம், பொருளாதார சுமைகளை தாங்கும் மக்களை திருப்திப்படுத்தவும், மகிழ்ச்சியூட்டவும் ஆட்சியாளர்கள் முயன்று வருகின்றனர்.**

மறுபுறத்தில் இன்றைய நெருக்கடிகளுக்கு



கடந்த கால ஆட்சியாளர்கள்மீது குறைகூறுவது, கடந்த கால ஆட்சியாளர்களின் தவறுகளை கிளறி வெளிப்படுத்துவது போன்ற அரசியல் தந்திரங்களையும் ஆட்சியாளர்கள் கையாண்டு வருகின்றனர்.

'பட்ஜெட்டில்' அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை மட்டுமன்றி, சிகரெட், மதுபானம் போன்றவற்றின் விலைகளைக்கூட உயர்த்தாமல்

விட்டிருப்பதும் அரசியல் தந்திரங்களில் ஒன்றுதான் என்பது புலனாகின்றது.

இத்தகைய நாசூக்கான அரசியல் தந்திரங்களில் கடந்தகால ஆட்சியினரைவிட பொதுஜன முன்னணி ஆட்சியினர் தேர்ச்சி பெற்றவர்களாகவே திகழ்ந்து வருகின்றனர்.

அரசியல்தீர்வு விடயங்களிலும், மக்களின் அன்றாட பிரச்சனை விடயங்களிலும் ஏற்பட்டு வரும் நெருக்கடிகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு பரிகாரம் காணமுடியாத ஆட்சியாளர்கள், புண்ணுக்கு புனுகு பூசும் காரியங்களை கச்சிதமாக நிறைவேற்றி வருகின்றனர்.

அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்து, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை சந்தித்து வெற்றிகொள்ள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. இதனால் தீர்வை முன்வைப்பதை நீண்ட காலத்திற்கு தள்ளிவைத்தபடி உள்ளனர்.

இதனை மறைக்க அரசியல் தீர்வை

வழங்கியே தீருவோம் என்றும், இனப்பிரச்சனைக்கு தீர்வு தேவை என்றும் ஆட்சியாளர்கள் அடிக்கடி பேசிவருகின்றனர்.

மேலோட்டமாக நோக்கும்போது உண்மையை துணிச்சலாகவும், உறுதியாகவும் ஆட்சியாளர்கள் உரைப்பதுபோலவே தெரியும். ஆனால் ஆயிரமாயிரம் இளைஞர்களும், யுவதிகளும் தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்ததன் பயனாகவே இனப்பிரச்சனையின் தீவிரம் உலகின் கவனத்துக்கு சென்றது.

**இந் நிலையில் இனப்பிரச்சனை இங்கு இல்லையென்றோ, அரசியல் தீர்வு தேவை இல்லை என்றோ ஆட்சியாளர்கள் கூறுவார்களேயானால், தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போடும் காரியத்தை செய்தவர்களாவர்.**

பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் இன்றைய உலகின் நாடித்துடிப்பை நன்கு அறிந்து கொண்டுள்ளனர். அதற்கேற்ப பேசவும் கற்றுள்ளனர்.

"தமிழ் ஈழத்தைத் தவிர ஏனையவை எல்லாம் தமிழருக்கு வழங்கப்பட்டுவிட்டன" என்று முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தன பதவியில் இருந்தபோது கூறியிருந்தார்.

அப்போது ஆயுதப் போராட்டம் தீவிரமடையாத காலகட்டம். திக்கெட்டும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தின் தீவிரமும் பலமும் உணரப்படாத காலகட்டமே அதுவாகும்.

**ஆனால் இன்றோ இலங்கைத் தீவில் யுத்தத் தீ கொளுந்துவிட்டெரிகிறது. இந்தத் தீ எரியக் காரணம் இனப்பிரச்சனை என்பதும் உலகின் கண்களுக்கு தெரிகிறது.**

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். பாணியில் இந்நாள் ஜனாதிபதி பேசுவாரேயானால் வெளியுலகம் முகம் சுளிக்கவே செய்யும். வெளிநாடுகளின் அனுதாபம், ஆதரவு, கடன் உதவிகள் என்பவை தடைப்படுமானால் இலங்கை அரசாங்கத்தின் நிலை தலைக்கு மேல் வெள்ளம் வந்த நிலையாகிவிடும்.

**ஆகவேதான் முன்னைய ஜனாதிபதிகள் போல் அல்லாமல், இன்றைய ஜனாதிபதி அவர்கள் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும், தீர்வு அவசியம், சமாதானம் தேவை என்றெல்லாம் பேசியே ஆகவேண்டிய நிலை உள்ளது.**

இவ்வாறான பேச்சுக்கள் இதயசுத்தியுடன் அமைந்தவையாக இருந்தால், தீர்வை முன்வைக்க தற்போது கூறப்படும் தடைகள் ஒரு பொருட்டாகவே இருக்க முடியாது.

வாக்குறுதிகள், வசீகரமான உரைகள், திசை திருப்பும் அரசியல் தந்திரங்கள் என்பவற்றைத் தவிர, நடைமுறையில்

எவ்வித முன்னேற்றத்தையும் காண்பிக்க முடியாதவர்களாகவே இன்றைய ஆட்சியாளர்கள் உள்ளனர்.

'தீர்வுப் பொதி' (பக்கேஜ்) முதல் 'பட்ஜெட்' வரை மேற்கண்ட உண்மையைத்தான் உணர்த்தியுள்ளன.

உள்நாட்டுக்கும், உலக அரங்குக்கும் சேர்த்து வாண வேடிக்கை காட்ட புஸ்வாணங்களை விடும் ஆட்சியாளரின் அணுகுமுறைகள் தற்காலிக வெற்றிகளை கொடுக்கக்கூடும். ஆனால், நாட்டைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கும்

இனப்பிரச்சனைக்கும், அதன் தொடர்பான யுத்தத்துக்கும் முடிவு காண உதவப்போவதில்லை.

**எனினும் உலக அரங்கில் தமிழர் தரப்பை பலவீனப்படுத்துவதிலும், தமிழ் பேசும் மக்கள் கொடுத்துள்ள விலைக்கு ஈடாகாத குறைந்த பட்ச தீர்வைப் பற்றி உலகம் புரிந்து கொள்ளாமல் தடுப்பதிலும் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.**

இந்த வெற்றியில் முன்னாள் தலைமையான கூட்டணியினருக்கும், முன்னாள் போராளிகளான தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ள நியாயமான பங்கை எதிர்கால வரலாறு ஒருபோதும் மறக்கப்போவதில்லை.

தந்திரோபாயமாகவே அரசாங்கத்துடன் இணைந்து நிற்கிறோம். தமிழ் பேசும் மக்களின் நலன்களை தாரை வார்க்க மாட்டோம் என்று முன்னாள் போராளி இயக்கங்கள் கூறி வந்தன.

இப்போது அக் கட்சிகளை ஆட்சியாளர்கள் தந்திரோபாயமாக பயன்படுத்தி வருகின்றனர். ஒரு போதும் இந்த முன்னாள் போராளிகளின் அரசியல் கருத்துக்களை ஆட்சியாளர்கள் கேட்கப்போவதில்லை.

**இந்தியாவின் ஆங்கிலத் தினசரியான இந்துவுக்கு நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள் அளித்த பேட்டியில் வடக்குடன் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள் இணைந்திருப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க கருத்துக் கணிப்பு நடந்தே தீரும். இவ்விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் கருத்தை ஏற்க முடியாது என்று கூறியிருக்கிறார்.**

கிழக்கை மூன்றாக நறுக்குவதற்கு கூட்டணி சம்மதித்த பின்னரும்கூட, வடக்குடன், திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை இணைந்திருக்கட்டும் என்று இணங்க அரசு தயாராக இல்லை என்பது தெளிவாகிவிட்டது. விட்டுக்

கொடுக்க விழுந்தடிக்கும் தமிழர் தரப்பிடம் மேலும் மேலும் விட்டுக் கொடுப்புக்களை எதிர்பார்க்கின்றனர் ஆட்சியாளர்கள்.

நீதியமைச்சரின் பேட்டி வெளியான பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கூட்டணி செயலதிபர் இரா.சம்பந்தன், அரசும், எதிர்க்கட்சியும் பேசி இணக்கத்துக்கு வரவேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இரண்டு பெரும்பான்மைக் கட்சிகள் தனித் தனியாக முரண்பட்டு நிற்கும்போதே, யானைப் பசிக்கு சோளப் பொரிகூட கிடைக்கவில்லை என்ற நிலையில் தீர்வு யோசனை காணப்படுகிறது.

**இந்நிலையில் இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் ஒன்று சேர்ந்தால் வடக்கையும் மூன்று துண்டாக நறுக்கும் முடிவுக்கு வந்தாலும் ஆச்சரியமில்லை.**

முன்னாள் தமிழ் தலைமையான கூட்டணியினர் இப்போது ஆளும் பொதுஜன முன்னணியின் பிரதிநிதிகளாக மட்டுமல்லாமல், பேரினவாத தரப்புக்களை பலப்படுத்தும் வகையிலும் செயற்படத் தொடங்கி உள்ளனர் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

ஈ.பி.டி.பி. கிழக்கை மூன்று துண்டாக நறுக்குவதை எதிர்க்கிறது. பிரிப்புக்கு கருத்துக் கணிப்பு நடத்துவதையும் எதிர்க்கிறது. ஆயினும் தமது எதிர்ப்பைப் பற்றி தமிழ் மக்களிடம் கூறுகிறார்களே தவிர, உலக அரங்கில் வெளிப்படுத்தவோ, அரசியல் போராட்டமாக முன்னெடுக்கவோ ஈ.பி.டி.பி.யும் முன்வரவில்லை.

புளொட் அமைப்பினர் கழுவும் நீரில் நழுவும் மீன்போலவே கருத்துக் கூறிவருகின்றனர். ஏனைய தமிழ்க் கட்சிகள் பற்றி அரசு கவனத்தில் கொள்வதில்லை.

கிழக்கை மூன்றாக நறுக்க இரகசிய உடன்பாடு செய்த முதல் கட்சியான கூட்டணியினர், வடக்குடன் மட்டக்களப்பு, திருமலையை இணைக்க கருத்துக் கணிப்பு வேண்டாம் என்று கூறினார்கள்.

அதனையும் கூட நீதியமைச்சர் நிராகரித்துள்ளார். இந்தநிலையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் வடக்கு-கிழக்கின் மூன்று தமிழ் அரசியல் கட்சிகளும் அரசை ஆதரிக்கும் தங்கள் நிலைப்பாட்டுக்கு என்ன காரணம் கூறப்போகின்றன?

**தீர்வுத் திட்டம் எப்போது வரும் என்பது தெரியாமல் இருக்கலாம். ஆனால் எவ்வாறான தீர்வு கிடைக்கப் போகிறது என்பது தெளிவாகிவிட்டது.**

இதன் பின்பும் அரசை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகள் உதட்டளவில் மட்டும் தெரிவிக்கும் எதிர்ப்புக்கள் அர்த்தமற்றவையாகும். தமிழ் பேசும் மக்களை ஏமாற்றும் அரசியல் தந்திரங்கள் என்றே கருதப்படும். ■

---

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்

**நோ**ர்வே நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி குரோ ஹார்ஸம் புரூண்ட் லாண்ட் கடந்தவாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

5.10.97 அன்று இரவு கொழும்பில் உள்ள நோர்வே தூதரின் இல்லத்தில் விருந்துபசாரம் ஒன்று நடைபெற்றது.

நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டணி சார்பாக நீலன் திருச்செல்வம் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர்.

இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் மிக ஆர்வமுள்ளவர் நோர்வே முன்னாள் பிரதமர். அதனால் தமிழ்க் கட்சிப் பிரமுகர்களை தனித்தனியாக சந்தித்தும் கருத்துக்களை அறிந்தாராம்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பான பேச்சு எழுந்தபோது, "இலங்கை இனப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அழைத்தால், நோர்வே மத்தியஸ்தராக செயற்பட முன்வரும்" என்று கூறினாராம் முன்னாள் பிரதமர்.

தமிழ்க் கட்சிகள் தரப்பில் இருந்து இலங்கை அரசின் தீர்வு யோசனைகள், தீர்வு முயற்சிகளின் இழுத்தடிப்புக்கள் பற்றி கருத்துக் கூறப்பட்டதைவிட, எதிர்க்கட்சித் தலைவர் ரணில்தான் அக்குவேறு ஆணி வேறாக எடுத்துரைத்தாராம்.

"முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் ஜனநாயக வழிக்கு வந்துள்ளன. ஆனால் அவையும் இப்போது நம்பிக்கை இழந்துள்ளன. அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து உற்சாகமளிக்க தவறிவிட்டோம்" என்று ஒரு கட்டத்தில் கூறினாராம் ரணில்.

"விடுதலைப் புலிகளைப் போரில் வெல்வது இயலாத ஒன்று. அதனால்தான் அவர்களுடன் பேச்சு நடத்தச் சொல்கிறோம். புலிகள் பங்குகொள்ளாத பேச்சில் பயனில்லை" என்றும் ரணில் தெரிவித்தாராம்.

நோர்வே முன்னாள் பிரதமருடன் ரணில் உரையாடியதை விருந்தில் கலந்து கொண்ட அரச தரப்பினர் சந்தேகக் கண்களுடன் நோக்கிக் கொண்டிருந்தனராம்.

எப்படியோ ஆளும்தரப்பும், எதிர்த் தரப்பும் கீரியும், பாம்புமாக இருப்பதால் தமிழர் தரப்பு செய்யத் தவறும் பிரசாரத்தை எதிர்க்கட்சி செய்து வருகிறது.

'தாமும் செய்யமாட்டோம், ஏனையோர் செய்யவும் விடமாட்டோம்' என்பதுபோல, ஐக்கிய தேசியக் கட்சியையும் ஆளும் தரப்பையும் சமரசம் செய்ய வைக்க கூட்டணி படும் பாடு தனிக்கதை. இதில் முன் நிற்பவர்கள் நீலனும், சம்பந்தரும்.

சமீபத்தில் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் தலைப்புச் செய்தி. "ஐக்கிய தேசியக் கட்சியுடன் பாராளுமன்ற தமிழ்க் கட்சிகள் இந்தவாரம் சந்தித்து பேசவுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. 'அப்படி முயற்சியே நடக்கவில்லை. ஆனால் கூட்டணிப் பிரமுகர் ஒருவர்தான் அப்படி ஒரு செய்தியை கொடுத்துள்ளார்' என்றார் இன்னொரு பாராளுமன்ற தமிழ்க்கட்சிப் பிரமுகர்.

உண்மையில் அப்படி ஒரு சந்திப்பும் நடைபெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிதான் தீர்வுக்கு தடையாக உள்ளது என்று காண்பிப்பதில் கூட்டணியினரும் தீவிரமாக உள்ளனர். குறிப்பாக அரசின் தீர்வு யோசனையை எப்படியாவது ஒப்பேற்றி முடிப்பது தனது கடமை என்று கருதுகிறார் நீலன். அவருக்கு தோள் கொடுத்து நிற்கிறார் புதிய எம்.பி இரா.சம்பந்தர்.

அவசரகால சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு.இரா.சம்பந்தன் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அறிவை குறைவாக எடை போட்டிருக்கிறார்.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். அரசும், எதிர்க்கட்சியும் இணக்கம் காணவேண்டும் என்றும் உபதேசித்திருக்கிறார். அதுமட்டுமல்ல மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படாமல் தடுக்க, உலகை ஏமாற்ற பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சர் பொக்ஸ் மூலம் நடத்தப்பட்ட நாடகத்தையும் சம்பந்தர் போற்றிப் பேசியிருக்கிறார்.**

சாதாரண மக்களுக்கு தெரிந்த போலி நாடகங்கள்கூட இந்த மெத்தப் படித்த அரசியல் வல்லுநர்களுக்கு(?!) தெரியாமல் போகிறது.

அது ஒரு புறம் இருக்க, நாமும்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோருகிறோம் என்று தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு கூட்டணி முயற்சிக்கிறது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர், அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் ஆகியோரைச் சந்தித்த கூட்டணித் தலைவர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி மூச்சே விடவில்லையே ஏன்?

முன்னாள் நோர்வே பிரதமரிடம் கூட்டணி பிரமுகர் நீலன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரவில்லையே என்?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோருவது என்றால், இலங்கை அரசில் நம்பிக்கை இல்லை என்பதை முதலில் பகிரங்கமாக அறிவித்தாக வேண்டும்.

இலங்கைக்குள் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு கிட்டவே கிட்டாது என்பதை ஆதார பூர்வமாக வெளி உலகுக்கு எடுத்துக் காட்டியாக வேண்டும்.

அப்படி எடுத்துக்காட்ட இதுதான் தருணம். எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. தமிழ்க் கட்சிகள் முன்வைத்த யோசனைகளில் ஒன்றைக்கூட அரசு ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பதை சுட்டிக் காட்டினாலே போதும்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் அதற்குத் தயாராக இல்லை. தயங்குகின்றன.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

**1) அரசைப் பகைக்க வேண்டி வரும் என்பது. கூட்டணியைப் பொறுத்தவரை தீர்வு யோசனையின் பங்காளர்களே அவர்கள் தான்.**

**2) மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வருமானால் புலிகளுக்கு பிரதான பாத்திரம் கிடைத்துவிடும் என்பது.**

**தமிழ் பேசும் தரப்பின் கழுத்தை சுருக்குக் கயிறு இறுக்கும் போதும், தங்கள் சொந்த நலனை பாதுகாக்கவே தமிழ்க் கட்சி தலைமைகள் விரும்புகின்றன.**

எனவேதான், இலங்கைக்குள் பிரச்சனையை தீர்க்க முடியும் என்று சித்தரிக்கும் அரசின் முயற்சிகளை தமிழ்க் கட்சிகள் ஆதரித்து வருகின்றன. குறிப்பாக கூட்டணி பகிரங்கமாகவே நம்பிக்கை தெரிவித்து வருகிறது.

போதாக்குறைக்கு ஆளும் தரப்பையும், எதிர்க்கட்சியையும் சமரசம் செய்துவைக்கவும் முயன்று வருகிறார்கள். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை தமிழ்க் கட்சிகள் விரும்பினால், ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு மோதல் தான் அக் கோரிக்கைக்கு சாதகமாக இருக்கும்.

**அரசுமீதும் நம்பிக்கை உண்டு. ஆளும் தரப்பும் எதிர்க்கட்சியும் சேர்ந்தால் பிரச்சனை தீரும் என்றும் எதிர்பார்ப்பு உண்டு. பின்னர் ஏன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்? சம்பந்தர் யாரை ஏமாற்றப் பார்க்கிறார்?**

உதட்டளவிலான முழக்கங்கள் பயனற்றவை. 'பட்ஜெட்'டும் வந்துவிட்டதால் இனி மேல் முழம் முழமாக முழக்கங்களால் நம் காதில் பூச்சுற்றப் போகிறார்கள். இப் பேச்சுக்களை கேட்க பாராளுமன்றத்தில் ஆட்கள் இல்லாவிட்டாலும் பத்திரிகைகளில் தூள் கிளம்பும். ■

கடந்த வாரம்

**ஸ்ரீ ராமும். லாலா ராமும் தங்கியிருந்த கிராமத்துக்குள் செல்கின்றனர் பூலான் கோஷ்டியினர். ஸ்ரீராம். லாலா ராம் இருவரும் தப்பி ஓடுகின்றனர். அவர்களது கூட்டத்தைச் சேர்ந்த ஐந்து பேரை சுட்டுக் கொல்கின்றனர். கொள்ளைக் கோஷ்டிகளை பிடிக்க விசேஷ பொலிஸ்படைகள் அமைக்கப்படுகின்றன.**

இனி...

# கொள்ளை ராணி



## பூலான் பூலான்தேவி 69

தருவது ரசிகன்

இன்ஸ்பெக்டர் வியர்த்திருந்தான். மூச்சிறைத்தான். குசுமா அவனது முன்புற தலைமுடிக்குள் விரல்களை நுழைத்து கோதிவிட்டாள்.

எதிர்ப்புக் காட்டுவாள் என்று நினைத்து பலப்பிரயோகத்துக்குத் தயாராக வந்த இன்ஸ்பெக்டருக்கு குசுமாவின் ஒத்துழைப்பு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று இனித்தது.

என்றாலும் குசுமாவிடம் ஒரு பயமும் வந்துவிட்டது. இரைதேடும் புலியைப் போலவே அவள் நடந்து கொண்டாள்.

இன்ஸ்பெக்டருக்கு இப்போது தாகமெடுத்தது. முற்றாகக் களைத்துப் போயிருந்தான்.

குசுமா துணியை எடுத்து குறுக்காகக் கட்டிக்கொண்டு வெளியே போனாள். ஸ்ரீராம் ஒரு மரக்குத்தியில் அமர்ந்திருந்தான்.

அவனிடம் எதுவும் பேசாமல் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய் இன்ஸ்பெக்டருக்குக் கொடுத்தாள்.

அவன் வெளியே போக முன்பாக குசுமாவை இறுக்கமாகத் தன்னோடு சேர்த்து அணைத்தான். குசுமா கண்களை விரித்து அவனை கிறக்கமாகப் பார்த்துக் கொண்டு அவன் உதடுகளோடு தன் இதழ்களைப் பொருத்தினாள்.

குசுமாவின் கரங்கள் துணிந்து செய்த விஷமத்தால் இன்ஸ்பெக்டர் பதறிப் போனான்.

"இராட்சசி!" என்று சொல்லிவிட்டு, "இனி அடிக்கடி வருவேன்," என்றான்.

வெளியே ஸ்ரீராம் இளித்தான். இப்போது இன்ஸ்பெக்டர் அவனிடம் கடுமை காட்டவில்லை.

"ஒழுங்காக நடந்துகொள்! என்னை அனுசரித்து நடந்தாயானால் பிரச்சனை இருக்காது," என்றான் இன்ஸ்பெக்டர்.

ஸ்ரீராம் தன் காவிப் பற்கள் தெரியச் சிரித்தான்.

"ஐயா அடிக்கடி இங்கே வந்து போகவேண்டும்," என்றான் பணிவான குரலில்.

"வந்தால் என்ன தருவாய்?" என்றான், தன் சீருடையின் சட்டைப் பொத்தான்களைப் போட்டுக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர்.

"ஐயா என்ன கேட்டாலும் தருவோம். எல்லாம் ஐயா விருப்பமுங்க," என்றான் ஸ்ரீராம். அவன் பேச்சில் இருந்த பொடி இன்ஸ்பெக்டருக்குப் பிடித்திருந்தது.

என்றாலும் ஒரு கொள்ளைக்காரன் முன்பாக தன் பலவீனத்தை ஒப்புக் கொள்வது இன்ஸ்பெக்டருக்கு கௌரவப் பிரச்சனையாக இருந்தது.

"உன் கூட்டாளிகள் பற்றிய விபரங்களை எனக்கு மட்டும் தரவேண்டும். ஏமாற்ற நினைத்தாயோ தொலைந்தாய்" என்றுவிட்டுப் போனான்.

அதன்பின்னர் ஸ்ரீராமிடம் தகவல் திரட்ட வருவதுபோல, அடிக்கடி குசுமாவிடம் வந்து போனான் இன்ஸ்பெக்டர்.

ஸ்ரீராம் கொடுத்த தகவல்படி பைஜாமௌ என்ற கிராமத்துக்குள் புகுந்தது பொலிஸ் கோஷ்டி.

சில நாட்களுக்கு முன்னர்தான் அங்குள்ள மீனவர்கள் குடியிருப்பு பகுதிக்கு பூலான் கோஷ்டியினர் வந்துவிட்டுப் போனார்கள்.

அதனை அக் கிராமத்தில் உள்ள பண்ணையார் சாதிக்காரர்கள் மூலம்



அறிந்த ஸ்ரீராம் பொலிசாருக்கு தகவல் கொடுத்திருந்தான்.

மீனவர்களின் குடியிருப்புக்களில் பொலிசார் தேடுதல் நடத்தினார்கள். பூலான் கோஷ்டியினர் அங்கு வரவே இல்லையென்றும், தங்களுடன் பகைமை பாராட்டும் பண்ணையார் சாதிக்காரர்தான் பொய்யான கதையைக் கட்டி விட்டுள்ளனர் என்றும் மீனவர்கள் பொலிசாரிடம் கூறிவிட்டனர்.

பொலிசார் மூலமாக பண்ணையார்களுக்கு மீனவர்களின் புகார்கள் கிடைத்துவிட்டன. பொலிசார் சென்றபின்னர் பண்ணையார்கள் மீனவர் குடியிருப்புகளுக்குள் புகுந்தனர்.

ஆண்கள் மீன் பிடிக்கப் போய்விட்டார்கள். வயதானவர்களும், சிறு பையன்களும், பெண்களும்தான் இருந்தனர்.

பெண்களைப் பிடித்து இழுத்தார்கள். சேலைகளை உருவி, கைகளை வீசி வக்கிரம் பண்ணினார்கள்.

கும்பலுக்கு தலைமை தாங்கி வந்த பண்ணையார் தன் பெரிய தொந்தி குலுங்கச் சிரித்தான்.

"உள்ளவர்களில் அழகான பெண்களாக மூன்று பேரைப் பிடித்து வாங்கடா!" என்றான்.

மூன்று பெண்களை குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

பூலான் தேவிக்கு தகவல் போனபோது அவள் பாபாவுடன் பேசிக்கொண்டிருந்தாள். செய்தியைக் கேட்டதும் பாபாவின் கண்களும் சினத்தால் சிவந்தன.

"கிராமத்தையே அழிக்கப்போகிறேன். நாய்களை விடவே கூடாது; விடமாட்டேன்!" என்றாள் பூலான்.

அவளது கை கால்கள் எல்லாம் நடுங்கிக்கொண்டிருந்தன.

மூன்று பெண்களை பண்ணையார்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்றதும் தனக்கு நேர்ந்த கொடுமைகள் எல்லாம் பூலானுக்கு நினைவுக்கு வந்துவிட்டன.

தான் இருக்கும்போது தன் சாதிக்காரர்களைக் கொடுமைப்படுத்தி இருக்கிறார்களே என்பதை நினைக்க பூலானுக்கு இரத்தம் கொதித்தது.

"மான் சிங்! எல்லோரையும் தயார்படுத்து! ரவைகளை அதிகமாக எடுத்து வைத்துக் கொள்! ம்..சீக்கிரம்!" என்று உத்தரவிட்டாள் பூலான்.

தன் முன்னாலேயே இப்படி உத்தரவிட பூலான் நினைப்பவள் அல்ல என்பது பாபாவுக்கும் தெரியும்.

இன்று தன் நிலை மறக்கும் அளவுக்கு கோபம் அவளை உருவேற்றி இருக்கிறது என்பதும் பாபாவுக்கு தெரிந்தது.

'அதிக கோபம்கூட ஆபத்தானதுதான். கண்களை மறைத்து காரியத்தைக் கெடுத்துவிடும்' என்பது பாபாவின் உறுதியான அபிப்பிராயம்.

"தண்டனை கொடுக்கத் தான் வேண்டும்! ஆனால் இப்போதே சென்றுதான் ஆக வேண்டுமா?" என்று கேட்டார் பாபா.

அப்போதுதான் பாபாவின் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் நினைப்பு பூலானுக்கு ஏற்பட்டது.

"தாமதித்தால் மூன்று பெண்களையும் அந்த நாய்கள் குதறிப்போட்டுவிடும் பாபா!" என்றாள்.

பாபா தன் விரல்களால் நெற்றியை வருடிக்கொண்டு யோசித்தார். "சரி உன் இஷ்டம். நிதானமாக நடந்து கொள்!" என்றுவிட்டு உள்ளே போய்விட்டார்.

சரக்குகள் ஏற்றுவதற்காகச் சென்ற நான்கு லொறிகளைக் கடத்திக் கொண்டு அவற்றிலேதான் சென்றனர் பூலான் கோஷ்டியினர்.

புழுதியைக் கிளப்பியபடி, ஒன்றன் பின் ஒன்றாக நாலு லொறிகளும் பைஜாமௌ கிராமத்திற்குள் உறுமிக்கொண்டு புகுந்தன.

நிகழப்போகும் விபரீதத்துக்கு முன்னறிவிப்பாக வெய்யில் கொளுத்திக்கொண்டிருந்தது.

"பூலான் தேவிக்கு ஜே" என்றபடி லொறிகளில் இருந்து குதித்தனர் பூலானின் ஆட்கள்.

லொறிகள் வந்த வேகத்தைப் பார்த்து, அபாயம் புரிந்து ஓடமுற்பட்ட இரண்டு பண்ணையார் சாதிப் பையன்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு, துப்பாக்கியின் தலைப் பகுதியால் தாக்கப்பட்டார்கள்.

வீடுகளுக்குள் புகுந்த பூலானின் ஆட்கள் துப்பாக்கி முனையில் பண்ணையார்களைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஆண்களை மட்டுமல்லாமல், பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் கொண்டுவந்து தன் முன்பாக நிறுத்துமாறு உத்தரவிட்டாள் பூலான்.

அரைமணி நேரத்திற்குள் பூலான் முன்பாக பண்ணையார் சாதியினர் அனைவரும் கைகட்டி, வாய் பொத்தி நிற்கவைக்கப்பட்டனர்.

யாரும் தப்பி ஓடவோ, பொலிசாருக்கு தகவல் தரவோ முடியாதபடி பண்ணையார் சாதியினர் குடியிருக்கும் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு, துப்பாக்கியுடன் பூலானின் ஆட்கள் காவலுக்கு நின்றனர்.

பண்ணையார் பெண்கள் சிலரைப் பிடித்து தனியாக நிறுத்தினாள் பூலான். பின்னர் கூட்டத்தினரைப் பார்த்து உரத்த குரலில் பேசினாள்:

"ஏய் பண்ணையார் நாய்களே! உங்கள் சாதிப் பெண்களை என் ஆட்களைவிட்டே உங்கள் கண்முன்னாலேயே..... போகிறேன். அப்போதுதானடா உங்களுக்கு சுரணை வரும்!"

கூட்டத்தினர் ஒட்டுமொத்தமாக மன்றாடினார்கள். பெண்கள் கையெடுத்துக் கும்பிட்டனர்.

"எங்கேயடா நாய்களே, நீங்கள் தூக்கிக் கொண்டுவந்த அந்த மூன்று பெண்களும்?" என்று தொண்டை நரம்புகள் புடைக்கக் கத்தினாள் பூலான்.

ஒதுக்குப் புறமாக இருந்த வீடொன்றுக்குள் மூன்று பெண்களையும் கட்டிப் போட்டு, வாய்களுக்குள் துணிகளை அடைத்து வைத்திருந்தார்கள்.

பண்ணையார் சாதிப் பெண் ஒருத்திதான் அந்த வீட்டை பூலானுக்குக் காட்டிக் கொடுத்தாள்.

கதவை உடைத்து திறந்தாள் பூலான். மூன்று பெண்களும் உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் கிடந்தனர்.

மூன்று பெண்களுக்கும் மார்பிலும் கழுத்திலும் நகக் கீறல்கள் பதிந்திருந்தன.

பண்ணையார் சாதிப் பெண் எங்கோ ஓடிப்போய் சேலைகள் கொண்டுவந்து தந்தாள்.

மூன்று பெண்களும் பூலானின் காலில் விழுந்தார்கள். கேவிக் கேவி அழுதார்கள். பூலானுக்கு உடம்பெங்கும் கொதித்தது.

"வாருங்கள். யார் உங்களை தொட்டது என்று காட்டுங்கள்!" என்று மூவரையும் அழைத்துக் கொண்டு புயல்போல சென்றாள்.

தங்களை நோக்கி வரும் பூலானின் தோற்றத்தைப் பார்த்ததும் கூட்டத்தினர் அத்தனைபேரின் உடம்புகளும் ஆட்டம் கண்டன.

தங்கள் புருஷன்மாரைக் காப்பாற்ற நினைத்து பூலானிடம் மன்னிப்புக் கேட்க ஓடிய பெண்களை தன் கையிலிருந்த துப்பாக்கியைச் சுழற்றி தாறுமாறாகத் தாக்கினாள் பூலான்.

பெண்களையும் பூலான் தாக்கியது அதுதான் முதல் முறை.

மீனவர் குடியிருப்பில் புகுந்த கும்பலுக்கு தலைமை தாங்கிய பண்ணையாரையும், தங்களை நிர்வாணப்படுத்திய ஐந்து பேரையும் பெண்கள் அடையாளம் காட்டினார்கள்.

ஐந்து பண்ணையாளர்களும் கூட்டத்தினரின் மத்தியில் நிர்வாணமாக்கப்பட்டு மொட்டை அடிக்கப்பட்டனர்.

பின்னர் பூலானின் துப்பாக்கியின் பின்புறம் அவர்களைப் பதம் பார்த்தது.

மூன்று பெண்களையும் அழைத்தாள் பூலான்.

"இந்த நாய்களின் முகங்களில் காறி உமிழுங்கள்!" என்றாள்.

அவர்கள் தயங்க, அறைந்தாள்.

"இப்படி அடங்கி கிடப்பதால்தானேயடி பெண்களைப் புழுவாக நினைத்து மிதிக்கிறார்கள். துப்படி!"

மூவரும் காறி உமிழ்ந்தார்கள்.

அடுத்த கணமே ஆறு பண்ணையார்களும் சுட்டுத்தள்ளப்பட்டனர்.

ஒவ்வொருத்தர்மீதும் ரவைகள் பாய, அவர்கள் குடும்பத்தினர் ஓங்கி அலற, வேட்டுச் சத்தமும், ஓலமுமாக கிராமம் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது.

பெண்களை அடைத்து வைத்திருந்த வீட்டை கொளுத்திவிடுமாறு உத்தரவிட்டாள் பூலான்.

வீடு தீக்கிரையாகி நெருப்பு மூட்டத்தைக் கிளப்ப, அது பூலானின் நெஞ்சின் குமுறலாய் வானைத் தொட்டது.

(தொடர்ந்து வரும்)

# மற்றுமொரு இரகசியம்

## மர்லின்-மார்லன்



மர்லின் மன்றோ- அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடிக்கே ம்யக்கத்தைக் கொடுத்த நடிகை. கவர்ச்சி என்றால் மர்லின், மர்லின் என்றால் கவர்ச்சி என்று புகழ்பெற்றவர்.

1962ல் மர்லின் மரணமானார். மர்மம் இன்றுவரை தொடர்கிறது. மர்லினின் காதல் கதைகள் இன்றுவரை பேசப்படுகின்றன.

சமீபத்தில் வெளியாகியுள்ள மற்றொரு இரகசியம் மர்லின்-மார்லன் பிராண்டோ காதல்.

'ஒஸ்கார்' விருது பெற்ற கோட் ஃபாதர் உட்பட பல வெற்றிப் படங்களில் நடித்த ஹொலிவூட் நடிகர் மார்லன் பிராண்டோ. அற்புதமான நடிகர்.

மர்லினுடன் மார்லன் பிராண்டோ நெருங்கிப் பழகத் தொடங்கியபோது மர்லினுக்கு 29 வயது. மார்லன் பிராண்டோவுக்கு 31 வயது.

இருவரும் நெருங்கிப் பழகினார்கள். படுக்கையை பகிர்ந்து கொண்டார்கள். கருமையான கூந்தல் உடைய அழகிகளை மார்லன் பிராண்டோவுக்கு மிகப் பிடிக்கும். தன்னை விட வயதான ஆண்களை மர்லின் மன்றோவுக்கு பிடிக்கும். இருவரும் ஒன்றுபட்டனர்.

தனக்கு மனக் கஷ்டம் வந்தால் மர்லின் மனம் திறந்து பேசும் ஒரே நபர் மார்லன் பிராண்டோதான். உடல்ரீதியாக மட்டுமல்லாமல் உணர்வு ரீதியாகவும் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

மர்லின் மன்றோ தூக்கமாத்திரைகளை விழுங்கி மரணமானதாக அறிந்ததும் மார்லன் பிராண்டோ மனம் உடைந்து போனார். ஆனாலும் மர்லினுடன் தனக்கு இருந்த அந்தரங்க நட்புப் பற்றி மூச்சுவிடவில்லை.

இப்போதுதான் மர்லின், மார்லன் காதல் விவகாரம் வெளியாகி இருக்கிறது. காலம் கடந்து வெளியான கதை என்றாலும் மர்லினுக்கு இருக்கும் மவுசு காரணமாக பரபரப்பான கதையாகிவிட்டது. மர்லின்- மார்லன் பெயர்கூட பொருத்தம்தான்.



# வீரப்பன் யோசனை

வீரப்பன் விவகாரம் முடிந்தபாடில்லை. தமிழக முதல்வர் கருணாநிதியும் ஏமாந்து போயிருக்கிறார். அக்டோபர் 31ம் திகதிக்கு முன்பாக வீரப்பன் சரணடைய காலக்கெடு விதிக்கப்பட்டது.

கர்நாடகஅரசை வழிக்குக் கொண்டு வந்தால் கலைஞர் முன்பாக சரணடையத் தயார் என்று கலைஞருக்கு தெரியப்படுத்தி இருந்தானாம் வீரப்பன். ஒரு பத்திரிகையாளர் மூலம் அனுப்பிய இரகசிய உறுதிமொழிதான் அது.

முதல் தடவை கடத்தல் நாடகத்துக்கு கர்நாடக அரசு பணிய மறுத்தமையால், இரண்டாவது தடவையாக கடத்தல் நாடகம் ஆடியிருக்கிறான்.

கர்நாடக அரசு இராணுவ உதவியைக் கோரியவுடன் வீரப்பன் பயந்துவிட்டானாம். அவனிடம் பணயக் கைதிகளாக இருந்தவர்களில் ஒருவரான டாக்டர் மைத்தி என்பவர் இராணுவம் பற்றியும், காட்டுக்குள் இராணுவம் புகுந்தால் வீரப்பன் கதி என்னாகும் என்றும் விளக்கியபோது, வீரப்பன் யோசித்தானாம்.

அதன்பின்னர்தான் கடத்திச் சென்றவர்களை விடுதலை செய்தானாம். 'சரணடையத் தயார்' என்று கர்நாடக முதல்வருக்கு கசட்டில் பேசி அனுப்பியிருந்தானாம்.

'காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறேன். தப்புச் செய்திருக்கிறேன்' என்றெல்லாம் வீரப்பன் புலம்பி இருந்தான். 'வீரப்பன் மன உறுதி இல்லாத ஒருத்தன் என்பதைத்தான் அவன் கசட்டில் பேசிய பேச்சுக்கள் காட்டுகின்றன.' என்கிறார்கள் மனநல ஆய்வாளர்கள்.

வீரப்பன் சரணடைவதை ஒரு விழா மாதிரி நடத்திக்காட்ட ஏற்பாடுகள் செய்து காத்திருந்தார் தமிழக முதல்வர்.

சுதந்திரப் போராட்டத் தியாகியை கௌரவிப்பதுபோல ஏன் இந்த ஏற்பாடுகள்? என்று சில பத்திரிகைகள் கண்டனம் செய்தன.

இறுதியாக அக்டோபர் 31ல் கலைஞர் கருணாநிதிக்கும் பலத்த ஏமாற்றம். வீரப்பன் வரவே இல்லை.

காட்டுக்குள் சேர்த்து வைத்திருக்கும் பணத்தை எல்லாம் பத்திரப்படுத்தத்தான் வீரப்பனுக்கு அவகாசம் தேவைப்படுகிறது. பத்திரமாக மறைத்து வைத்ததும் சரணடையத்தான் போகிறான் என்றும் சொல்லப்படுகிறது.

"கருணாநிதியை நம்பாதே, தனக்குப் பிரச்சனை வரும் என்றால் யாரை வேண்டுமானாலும் கைவிடத் தயங்காதவர் கருணாநிதி. புலிகளையும் அப்படித்தான் கைவிட்டார். உன்னையும் கைவிட்டு விடுவார்." என்று வீரப்பனை சிலர் எச்சரித்திருக்கிறார்களாம்.

அதனால்தான் வீரப்பன் மேலும் குழப்பத்தில் இருப்பதாகவும், குறிப்பிட்ட திகதியில் சரணடைய வராமல் இருந்தான் என்றும் கூறப்படுகிறது.

# தடை மேல் தடை



ஆஃப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் ஆட்சியாளர்கள் பெண்களை வாழ்க்கையின் ஓரத்திற்கே துரத்திக் கொண்டிருக்கிறார்கள்.


பெண்கள் வீட்டை விட்டு வெளியேவரக் கட்டுப்பாடு. படிப்பைத் தொடர, வேலைக்குச் செல்லத் தடை. பர்தா அணியாவிட்டால் தண்டனை. வெளி ஆண்களைப் பார்க்கவே கூடாது. இப்படியாக ஏகப்பட்ட கட்டுப்பாடுகள்.

இப்போது மற்றொரு கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகளில் ஆண்களும், பெண்களும் ஒன்றா கச்சிகிச்சை பெறத் தடை போட்டுள்ளார்கள்.

பெண்களுக்கு என்று தனியான மருத்துவமனைகள் அவசரமாகத் திறக்கப்பட்டன. பொது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற பெண் நோயாளர்களை உடனடியாகப் பிரித்தெடுத்து அங்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

மேலும் மேலும் என்னென்ன புதிய கட்டுப்பாடுகள் போடப்போகிறர்களோ? என்று ஆஃப்கான் பெண்கள் கலங்கிப்போய் இருக்கிறார்கள்.

# '84' ஐ கடத்திய '92'



ஆசைக்கு வயதில்லை என்பது உண்மைதான். அதற்காக இப்படியுமா நடக்கும்? விஷயத்தைக் கேளுங்கள்.

அமெரிக்க கலிபோர்னியாவைச் சேர்ந்தவர் சார்லஸ் பர்னல். வயது 92. ஆனாலும் மனிதர் படு ஆரோக்கியமாக இருக்கிறார். கேன்னி டிரிஸ் என்ற பெண்மணிக்கு வயது 84. கேன்னி மீது கிழவர் சார்லஸ் பர்னலுக்கு காதல் பிறந்தது.

கடந்த செப்டம்பர் மாதம் யாருக்கும் தெரியாமல் கிழவியைக் கடத்திக்கொண்டு போய்விட்டார் சார்லஸ்.

கேன்னியின் குடும்பத்தினர் பொலிசில் புகார் செய்தனர். பொலிசார் அவரைக் கைது செய்து வழக்குத் தொடுத்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி கடந்த மாத இறுதியில் தீர்ப்பு வழங்கியுள்ளார். கேன்னியை கடத்திய குற்றத்துக்காக கிழவருக்கு ஐந்துநாள் சிறைத்தண்டனையும், ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

'கேன்னிமீது கொண்ட காதலால்தான் கடத்தினேன்' என்று கிழவர் அடித்துச் சொன்னார். ஆனால் தனக்கு அவர்மீது காதலும் கிடையாது கத்தரிக்காயும் கிடையாது என்று சொல்லிவிட்டார் கேன்னி. அதனால்தான் கிழவருக்கு தண்டனை கிடைத்தது.



## புதைகுழிகள்

← என்ன பொதுத்தேர்தலா வரப்போகிறது? மண்டையோடுகளையும், எலும்புகளையும் கிளறத் தொட்டங்கிவிட்டார்களோ? என்பன போன்ற புத்திசாலித்தனமான கேள்விகள் எழக்கூடும். அவற்றை ஒத்திவையுங்கள்.

இது உகண்டா நாட்டில் எடுக்கப்பட்ட புகைப்படம். மனித குல வரலாற்றில் கறைபடிந்த ஆட்சிகளில் ஒன்று இடி அமீனின் ஆட்சி. மனித இறைச்சியைக்கூட கரக்மொரக் என்று ரசித்து ருசித்து சாப்பிட்ட கொடூரன் அவன்.

இடி அமீன் சாப்பிட்டதுபோக மேலும் இலட்சக்கணக்கான மக்கள் அவன் ஆட்சியில் கொல்லப்பட்டனர். இப்போது இடி அமீன் எங்கிருக்கிறான் என்பதே தெரியவில்லை. தலைகால் தெரியாமல் ஆடியவன் தலைமறைவாக இருக்கிறான்.

சமீபத்தில் உகண்டாவில் ஒரு பகுதியில் விவசாயத்திற்காக நிலத்தை கிண்டியபோது, மண்டை ஓடுகளும், எலும்புக்கூடுகளும் கிடந்தன. வானும், நிலமும், வீசும் காற்றும் மட்டும் சாட்சியாக இருக்க புதைக்கப்பட்ட மனிதர்கள் இவர்கள்! உலகில் புதைகுழிகள் மட்டும் பேசத் தொடங்கினால் என்னாகும்?

## கொம்பு வேட்டை

↓ உலகில் உள்ள பெரிய மிருகங்களில் இரண்டாவது இடத்தில் இருப்பது காண்டாமிருகம். பயங்கரமான மூர்க்கம் கொண்டது. கொம்புகளால் செருகியே எதிரிகளை கொன்று போட்டுவிடும்.

காண்டாமிருகக் கொம்புகளுக்கு மவுசு அதிகம். அதனால் காண்டாமிருகங்களை சுட்டுத்தள்ளிவிட்டு கொம்புகளை கடத்தத் தொடங்கிவிட்டார்கள். கொம்புக் கடத்தல் மன்னர்களை பிடிக்க காடுகளில் கண்காணிப்புக்கள் நடக்கின்றன. ஆபிரிக்க மொஸாம்பிக் நாட்டில் உள்ள காட்டில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

கடத்தல்காரர்களால் சுடப்பட்ட காண்டாமிருகம் ஒன்றை காப்பாற்றி சிகிச்சை கொடுக்க கட்டி இழுத்துப் போகிறார்கள். காப்பாற்றப்படுகிறோம் என்பது புரியாமல் மூர்க்கமாக திமிறி எதிர்ப்புக் காட்டுகிறது காண்டாமிருகம்.

ஆறறிவு மனிதருக்கு உதவி செய்தால்கூட சில சமயம் உபத்திரவமாகிவிடுகிறது. பாவம் இது ஐந்தறிவு மிருகம். அதற்கு என்ன தெரியும்?



## மீண்ட படகு

↓ இப்போதெல்லாம் பல ரகங்களில் படகுகள் வந்துவிட்டன. அதிவேக விசைப் படகுகள் முதல், அழகான சின்ன சின்னப் படகுகள்வரை ஜோராக நீரலைமீது வலம் வருகின்றன.



ஆனால் படத்தில் உள்ள படகு இருக்கிறதே, இதுதான் அந்தக் காலத்தில் அசத்தலான படகு. அந்தக் காலம் என்றால் உங்க பாட்டன், எங்க பாட்டன் காலம் அல்ல. இயேசுநாதர் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட படகுதான் இது!

நீண்டடடட..... காலமாக கடலுக்குள் அமிழ்ந்திருந்த இப்படகை 1986ல் இஸ்ரேல் சுழியோடிகள் கண்டுபிடித்தனர். இப் படகின் பலகைத் துண்டு ஒன்று கடலில் மிதந்து வந்ததைக் கண்டபின்னரே, சுழியோடிகள் தேடுதல் நடத்தினார்கள்.

கடல் நீரில் சிதைவுற்றுப் போகாமல் இருக்கக்கூடியவாறு ஒரு விதமான இரசாயனப் பூச்சுப் இப் படகில் பூசப்பட்டிருந்ததாம்.

இப்படகின் நீளம் 27 அடி. ஏழு வகையான மரப்பலகைகளால் செய்யப்பட்டது. நான்கு பேர் வலிக்கவும், ஒருவர் சுங்கான் பிடிக்கவும் வசதிகள் உள்ளன. இதனை மிகப் பத்திரமாக பாதுகாத்து வருகின்றனர்.

## குண்டும் குண்டும்

→ குண்டான இந்த ஆசாமி ஸ்பெயின் நாட்டுக்காரர். பெயர் பியர்ஸ். குண்டெறியும் போட்டிகளில் பல சாதனைகள் படைத்திருக்கிறார். தற்போது உலக சாதனை படைத்திருக்கிறார். 300 கிலோ எடையுள்ள குண்டை மூச்சுப்பிடித்து தூக்கி எறிந்துவிட்டார். பலே! பலே!




## இலட்சியத் தம்பதி



← அபாரமான இலட்சியத் தம்பதி இவர்கள். கணவர் சார்லி 280கிலோ. மனைவி கேதரின் ஆக 60 கிலோ. யானையும் எலியும் மாதிரி.

அமெரிக்காவில் தெற்கு கலிபோர்னியாவைச் சேர்ந்தவர்கள் இவர்கள். பாரமான கணவரை பெற்றது பாக்யம் என்று பூரிக்கிறார் கேதரின்.

ஆனாலும் சின்ன சின்ன பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. மிஸ்டர் சார்லிக்கு பயங்கரமான சந்தோசம் வந்து விட்டால் மனைவியை கட்டிப் பிடித்துக் கொள்வாராம். அப்போது நசுங்கிப் போனாலும், மூச்சுத் திணறாமல் தப்பிக் கொள்வதுதான் பெரிய காரியம். அந்த வியடத்தில் கேதரினுக்கு எப்படியோ அதிஷ்டம் கை கொடுத்து வருகிறது. அல்லது ஆயுள் கெட்டியோ தெரியவில்லை.

செல்லமாக கன்னத்தில் தட்டுதல், தூக்கத்தில் கேதரின்மீது காலைத்தூக்கிப் போடுதல் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால் கேதரின் இரண்டு நாட்களுக்கு உடல்வலியால் கஷ்டப்படுவாராம்.

மேற்கண்ட அசம்பாவிதங்களையும் காதலுக்காக சகித்துக் கொள்வதில்தான் சுகம் இருக்கிறதாம். அதாவது சுகமான சுமை.

கேதரினுக்கு ஒரே ஒரு ஆசைதான் இருக்கிறது, என்றாவது ஒருநாள் தன் கணவரை தன்கைகளால் வளைத்து அன்போடு கட்டியணைக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. ம்.ஹூம்... இந்த ஜென்மத்தில் நிறைவேறக்கூடிய ஆசையாகத் தெரியவில்லை!

## தகவல் பெட்டி

## வெளியேற்றம்

↓ மாபெரும் இடம் பெயர்வு யாழ் குடாநாட்டு மக்கள் சந்தித்த அனுபவம்தான். அநேகமாக உலகில் போர் காலங்களில் நிகழ்ந்த எந்த அவலங்களை எடுத்துக் கொண்டாலும், வடக்கு-கிழக்கு மக்களுக்கு பழக்கப்பட்டவைதான்.

படத்தில் இருக்கும் காட்சி, இரண்டு இலட்சம் சேர்பிய அகதிகளை கிரஜினா குடியரசில் இருந்து குரோஷியப் படைகள் வெளியேற்றும் காட்சி. 'உங்கள் பகுதியான சேர்பியாவுக்கே செல்லுங்கள்' என்று துரத்தி அடித்தார்கள்.

இவர்கள் கிரஜினாவில் தொடர்ந்து தங்கியிருந்தால், குரேஷிய இனத்துடன் கலப்பு ஏற்பட்டுவிடும் என்று கருதியே துரத்தப்பட்டனர். இந்த நடவடிக்கைக்கு குரோஷியப் படைகள் வைத்திருந்த பெயர் என்ன தெரியுமா? 'இனச் சுத்தப்படுத்தல்'.



திரையுலக மறுபக்கம் 29

# பத்திரிகையாளர் மீது பாய்ந்த கவர்ச்சிப் பாடகி

## மதுவுக்கு அடிமையான வாரிசு நடிகை

மெல்லிசை மன்னர்கள் காலத்தில் பிரபலமாக பேசப்பட்ட பின்னணிப் பாடகி அவர். துள்ளிசைப் பாடல்களை வரி வரியாக இரசித்து கிறக்கமாகப் பாடுவார். ஆடுவோருக்கு ஆடத்தோன்றும், பாடுவோருக்கு பாடத்தோன்றும்.

ஆரம்பத்தில் பாட வாய்ப்புத் தேடும்போது அவரது குரலைவிட உடலைத்தான் ஒரு தட்சணையாகக் கேட்டனர். பாடகியும் தாராளமான குணம் கொண்டவராகவே இருந்தார். அதனால் அனுசரிக்க வேண்டியவர்களை தேவைக்கு அதிகமாகவே அனுசரிக்கத் தொடங்கினார்.

வெளியூர்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு இசை நிகழ்ச்சி நடத்தச் சென்றால் உற்சாக பானத்தை ஏற்றிக் கொண்டு மேடையிலேயே ஆடி ஆடிப் பாடுவார். மேடையைவிட்டு ஜாமுக்கு சென்றபின்னர் பாடகியின் வாயிலிருந்து பச்சை பச்சையான வார்த்தைகள் எல்லாம் கொட்டத் தொடங்கும். உதவியாளர்கள் பாடு திண்டாட்டமாகிவிடும்.

பாடகியின் பலவீனத்தை பயன்படுத்திய பிரமுகர்கள் பற்பலர். அதனால் பாடகியை தங்கள் ஊர்களில் இசை நிகழ்ச்சி நடத்த விரும்பி அழைத்தனர். ஒருமுறை பாடகியைப் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டார். பேச்சுவாக்கில் அரசியல் பற்றியும் பேசப்பட்டது.

அரசியல் என்றால் தனக்குப் பிடிக்காது என்று பாடகி சொல்லியிருக்கிறார். அந்த நிருபரும் பாடகியின் பேட்டியைப் பிரசுரித்து, 'அரசியலில் ஈடுபடமாட்டேன்' என்று பாடகி கூறுவதாக தலைப்பிட்டிருந்தார்.

### பாடகியின் கோபம்

அதன்பின்னர் ஒருநாள் குறிப்பிட்ட பத்திரிகையின் இன்னொரு நிருபர் பாடகியைச் சந்தித்தார். பாடகிக்கு வந்ததே கோபம். "ஏண்டா நீங்கள் எல்லாம் பத்திரிகையா நடத்துறீங்க?" என்று துள்ளத் தொடங்கிவிட்டார்.

அப்போது எம்.ஜி.ஆர். மரணமான நேரம். அரசியலில் தன் பெயரையும் ஏன் இழுத்துவிட்டுள்ளார்கள் என்பதுதான் பாடகியின் கோபம்.

"அரசியலில் ஈடுபடமாட்டோர்கள் என்றுதானே போட்டிருக்கிறோம்" என்று சமாளித்தார் நிருபர்.

பாடகி சமாதானமாகவில்லை. தன் ஐந்து விரல்களையும் நிருபர் முகம் எதிரே அகலவிரித்து முன்னுக்கும் பின்னுக்குமாக ஆட்டிக்காண்பித்தபடி. "எனக்கு விளக்கம் சொல்ல வந்திரோ விளக்கம்?" என்று கோபமாகவும், கேலியாகவும் கேட்டார். நிருபர் நைசாக நழுவிச் சென்றுவிட்டார்.

'பாடகியின் முதல் அனுபவம்' என்ற தலைப்பில் நிருபரை விரட்டியடித்த சம்பவம் பற்றி தன் பத்திரிகையில் விபரித்து எழுதினார் அந்த நிருபர்.

பாடகிகளுக்குள் கவர்ச்சியானவராகவும், கலை சர்ப்பாளராகவும் இருந்தவர்களில் குறிப்பிட்ட பாடகிதான் முதலிடத்தில் இருந்தார். அப்போது பிரபலமாக இருந்தவரான பாடகர் ஒருவருக்கு பாடகியுடன் அந்தரங்க நட்பு இருந்தது. வெளியூர்களுக்கு இசை நிகழ்ச்சி நடத்தச் சென்றால் இருவரும் இணைந்து அடிக்கும் கூத்து கூடச் சென்றவர்களுக்கே சகிக்காது.

பாடகரும் மது, மாது இரண்டிலும் பிரியம் உள்ளவர். பிரபல நடிகர்களின் வெற்றிக்கே தன் குரல்தான் காரணம் என்று கூறிக்கொண்டிருந்தவர். அப்போது அவரது காட்டில்தான் மழை. பாடகியும் அவர் மனம் கோணாமல் நடந்து பல பாடல்களை அவருடன் இணைந்து பாடினார்.

—★★★—

### வாரிசு நடிகை

லட்சமிகரமான பெயர் கொண்ட நடிகையின் மகளும் நடிக்க வந்தார். தாயாரின் போக்கு பிடிக்காத மகள் நடிகை பாட்டியுடன் ஒட்டிக்கொண்டார்.

நடிக்க வந்த புதிதில் இயக்குநர்களதும், ஹீரோவினதும் சில்மிஷங்களால் மிரண்டு போனார் நடிகை. பின்னர் அதுவே பழக்கமாகிவிட்டது. சில்மிஷங்களை இரசிக்கவும் தொடங்கினார்.

சக நடிகைகள் சிலருடனும் நடிகை நெருங்கிப் பழகத் தொடங்கினார். நடிகையின் பலவீனம் தெரிந்த குட்டி நடிகைகள் சிலர் நடிகையைப் பற்றிய இரகசியங்களை பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

தாயார் தன் மகளை அழைத்து கண்டித்தார். "நீ மட்டும் என்ன செய்கிறாய், யாருடன் சுற்றுகிறாய்? என்று நான் கேட்கிறேனா, என் போக்கில் என்னைவிடு" என்று முகத்தில் அடித்தால் போல் கூறிவிட்டார் மகள் நடிகை.

அதன்பின்னர் போதைமாத்திரைகளுக்கும், ஊசிகளுக்கும் அடிமையானார். பல நடிகர்கள் அவரது மயக்க நிலையை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டனர்.

இறுதியாக திருமணம் செய்து மதம் மாறினார். கணவரும் நடிகையை வைத்து பணம் சம்பாதிக்க முயன்றார். பிரபல புள்ளிகள் சிலரை அழைத்து வந்து அவர்களை சந்தோசப்படுத்தச் சொல்லி கட்டளையிட்டார்.

நடிகைக்கு மெல்ல மெல்ல புத்தி தெளிந்தது. தன் குழந்தையுடன் தாயாரிடம் திரும்பி அடைக்கலமானார்.

## இரட்டை அர்த்தங்கள்

மும்பாயில் இருந்து நடிகைகளை இறக்குமதி செய்வதில் தமிழ்ப்பட இயக்குநர்கள் போட்டி போடுவதற்கு பல ருசிகரமான காரணங்கள் உள்ளன.

அவற்றில் ஒரு காரணத்தை நடிகை ரோஹிணி சொல்கிறார் கேளுங்கள்.

"இங்கே இரட்டை அர்த்த வசனங்கள் பேசச் சொல்கிறார்கள். நமக்கு கூச்சமாக இருக்கிறது. மும்பை நடிகைகளுக்கு மொழி தெரியாமையால் எப்படி வேண்டுமானாலும் வாயசைத்து விடுகிறார்கள். 'டப்பிங்' பேசுவது வேறு ஆள்தானே.

இப்படிப் பேசமாட்டேன், அப்படிப் பேசமாட்டேன் என்று அடம் பிடிக்காத நடிகைகளை மும்பாயில்தான் பிடிக்கலாம். அப்படியான நடிகைகளுக்கு கலாசாரம் கெட்டுப்போன மும்பாய்தான் இலாயக்கு" என்கிறார் ரோஹிணி.

## சுவாதியின் வருத்தம்

அஜித்குமாரால் முதலில் தீவிரமாகக் காதலிக்கப்பட்டவர் சுவாதி. தற்போது விக்னேசின் அன்புப்பிடியில் சிக்கி இருக்கிறார். கல்லூரி மாணவியை கல்யாணம் செய்த பின்னரும் சுவாதியை காதலிக்கிறார் விக்னேஷ்.

விக்னேஷ்மீது சுவாதிக்கு லேசான வருத்தம். சுவாதியைத்தான் திருமணம் செய்யப்போவதாக கூறிக்கொண்டிருந்தார் விக்னேஷ். கல்லூரி மாணவியைக் கண்டதும் மனம் மாறிவிட்டார்.

## காதலிகள் தேவை
## அவள் வருவாளா

பிரசாந்த், சூர்யா, விஜய், அருண்குமார் ஆகியோருக்கு ஏராளம் இரசிகைகள். அவர்களிடமிருந்து தினசரி நூறு காதல் கடிதங்கள்.

இந்த இளம் ஹீரோக்களை வளைத்துப்போடும் முயற்சியில் இறங்குவோருக்கு உதவும் வகையில், தமிழக சஞ்சிகை ஒன்று நால்வரிடமும் பேட்டி கண்டது. அவர்களுக்குப் பிடித்த பெண்கள் எப்படி இருக்க வேண்டும்? என்று அறிந்து வெளியிட்டுள்ளது. அந்த பயனுள்ள தகவல்கள் இதோ.


'ஜீன்ஸ்' படப்பிடிப்புக்காக இத்தாலியில் இருந்த பிரசாந்த் இப்படிக் கூறுகிறார்: "என்பக்கத்துல (?) ஐஸ்வர்யா ராய் இருக்காங்க. இத்தாலியில் எந்தப் பெண்ணுமே பார்க்கிற மாதிரி இல்லை.

என் கற்பனைக் காதலிய சொல்றேன் கேளுங்க: கருங்கூந்தல், அதில் ரெட்டை ஜடை, மீன் விழி, பிறைச்சந்திரன் மாதிரி நெற்றி, திவ்யபாரதி மாதிரி உதடு, கூர்மையான மூக்கு, நீளமான கழுத்து" என்று அடுக்கினார்.

ஆர்வமாக வர்ணனை செய்தார் சூர்யா: "முடி நீளமா இருக்கணும், புருவம் இயற்கையா இருக்கணும், உதடு கொஞ்சம் தடிப்பா இருக்கணும், குடும்பப் பாங்காக இருக்கணும், ஆனால் ரீ சர்ட் போட்டிருக்கணும்."

உணர்ச்சிவசப்பட்டு பேசினார் விஜய்: "என் ரேஞ்ச் கொஞ்சம் ஜாஸ்தி. கண்ணு, மூக்கு ரெண்டும் ஐஸ்வர்யா ராய். ஆனால் முகம் மட்டும் கொஞ்சம் குண்டா உருண்டையா இருக்கணும். முக்கியமா எனக்கு கருப்புக் கலர் ரொம்பப் பிடிக்கும். ஸோ பொண்ணு கருப்பு சுடிதார் போட்டிருந்தா சந்தோசப்படுவேன்."

அருண்குமார் சொல்கிறார்: "நீள் வட்டமா முகம் இருக்கணும். உதடு மெலிதா கோடு மாதிரி இருக்கணும். மொத்தத்தில குடும்பப் பாங்கா இருக்கணும்."



மகேஷ்-ஓவியா
படம்:சாதிசனம்

## பொற்காலம்

திரைக்கு வந்துள்ள 'பொற்காலம்' படத்தின் இயக்குநர் சேரன், புகைப்படப்பிடிப்பாளராகவும் நடித்தார். மீனாவின் பின்னால் ஜொள் விட்டபடி அலையும் வேடம். மீனாவுக்கும், சேரனுக்கும் நிஜமாகவே உள்ள நெருக்கம் வெளியே தெரிந்ததால், பொற்காலத்தில் தான் நடித்த காட்சிகளை கத்தரித்துவிட்டாராம் சேரன்.

'பாரதி கண்ணம்மா' படத்தில் தொடங்கிய நட்பு இப்போது பொற்காலத்தில் இருக்கிறது. இருவரும் மறுத்தாலும், நெருக்கம் என்பது படப்பிடிப்பு தளத்திலும், வெளியிலும் பல கண்கள் கண்ட சமாச்சாரம்தான்.



பிரகாஷ்ராஜ்-நீனா
படம்:விடுகதை

## காதோடு சொல்லுகிறோம்

**கி**ராமியப் பாடல்களை இயக்கும் கஸ்தூரமான இயக்குநரின் பெயரைக் கேட்டாலே நடிகைகள் ஓட்டம் பிடிக்கிறார்களாம். இயக்குநர்களில் குறிப்பிட்ட இயக்குநர் கரடு முரடான பேர்வழியாம். அதனால்தான் நடிகைகள் பயந்து ஓடுகிறார்கள்.

**பெ**யரில் 'ராம்' உள்ள மூன்றெழுத்து நடிகர் சிகரெட் பிடிப்பதையே நிறுத்திவிட்டாராம். முன்பு குறைந்தது ஐந்து பாக்கெட் பிடிப்பாராம். செயின் ஸ்மோக்கர். விஷயமுள்ள சாந்தியின் அன்புக் கட்டளைப்படிதான் சிகரெட்டுக்கு 'குட்பை' சொல்லி இருக்கிறார் நடிகர். தங்கை நடிகையை வசியப்படுத்திய நடிகர் பின்னர் அவரை ஏமாற்றியது தெரிந்த கதை. இப்போது நடிகையால் வசியம் செய்யப்பட்டுள்ளார்.

**த**னது அன்புக் கட்டளையையும் மீறி, காதல் கோட்டை நாயகியான தேவ நடிகையுடன் 'கா' நடிகர் நெருக்கமாகியுள்ளது நடிகைக்கு கோபத்தை ஏற்படுத்தி உள்ளதாம். 'ரே' நடிகையின் கோபத்துக்கு 'கா' நடிகர் பயந்ததுபோலத்தான் தெரிந்தது. ஆனால் அது பாசாங்கு என்று இப்போது தெரிந்துவிட்டது. அந்த விஷயத்தில் 'கா' நடிகரை யாராலும் திருத்தவே முடியாது என்பது யாவரும் அறிந்த சங்கதிதான்.

**ர**ட்சக நாயகி தன்னுடன் ஜோடி சேர்ந்த நாயகனை ரட்சித்தது முன்பே அறியப்பட்ட சமாச்சாரம். படம் வெளியானதும் நாயகனும், நாயகியும் சிங்கப்பூருக்கு கிளம்பிப் போய்விட்டனர். 'ரட்சக' நாயகனின் மனைவியான முன்னாள் நடிகை சோகத்தில் இருக்கிறார்.

**பி**ரகாசமான அந்த வில்லன் நடிகர் பெண்கள் விடயத்தில் பட்டும்படாமல் நடந்து கொள்கிறாராம். டிஸ்கோ நடிகையின் தங்கையைத்தான் நடிகர் திருமணம் செய்திருக்கிறார். டிஸ்கோ நடிகைக்கும் இப்போது திருமணமாகிவிட்டது. திருமணத்தின் முன்னர் டிஸ்கோவுக்கும் பிரகாசமான நடிகருக்கும் இடையே 'நட்பு' இருந்ததாம். டிஸ்கோவை சந்திக்க வந்த இடத்தில்தான் அவரது தங்கை நடிகையை காதலிக்க தொடங்கினாராம். காதல் கல்யாணத்தில் முடிந்த பின்னர் பெண்கள் விடயத்தில் 'விரதம்' இருக்கிறார் நடிகர். அந்த விரதத்தை கெடுக்க சில நடிகைகள் முயற்சிப்பதாக கூறுகிறார்கள்.

**ப**டைப்பாளிகள் வட்டாரத்தில் புகைச்சல் ஆரம்பமாகியுள்ளதாம். இயக்குநர் சிகரத்திற்கும், இயக்குநர் இமயத்திற்கும் இடையே சின்ன சின்ன லடாய்களாம். விரிசல் பெரிதாக வேண்டும் என்று காத்திருக்கிறது எதிர்த்தரப்பு.

## பாடல் ஆறுபே

இயக்குநர்கள் பாடல் ... தும் காலம் இது. பாடலா... யர்கள் பாடுதான் திண்ட... டம். 'இதுதான் கா... படத்தில் ஆறு இயக்குநர்... பாடல் எழுதி உள்ளனர். ... கண்ணன், மனோபா... கே.எஸ். அதியமான், அ... மதி, ஆர்.வி. உதயகும... ச.ராமதாஸ் ஆகிய ... இயக்குநர்கள்தான் பாடல் எழுதியுள்ளனர்.

சவசந்திரன் இயக்கத்தில் பிரபு நடிக்கும் ல் பிரபுவுக்கு ஜோடியாக மீனா நடிக்க ராஜகுமாரன்' படத்திற்குப் பின்னர் பிரபு-மீனா நடிக்கும் படம் இது.

ராஜன் இயக்கத்தில் பாண்டியராஜன் கதாநாய 'அட்ரா சக்கை அட்ரா சக்கை' வியா வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, வி.சி. பாண்டியராஜனும் மீண்டும் இணைய

ஜோதி ஃபிலிம்ஸ் தயாரிக்க, செய்யாறு ரவி அரிச்சந்திரா' படத்தில் கார்த்திக்-மீனா நடிக்கிறார்கள். 'கருத்தம்மா' ராஜஸ்ரீ இப் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார்.

...ம்மா' படத்தயாரிப்பாளர் ஹென்றி தயா அஜித்குமார் நடிப்பதாக இருந்த 'மழைவரப் படத்தில் தற்போது அஜித்குமாருக்குப் பதிலாக நடிக்கவுள்ளார்.

## மி னி சி னி

* கார்த்திக் நடிக்கும் 'உதவிக்கு வரலாமா' படத்திற்கு இசையமைப்பவர் சிற்பி. இந்தப் படத்தில் இடம்பெறும் கானா பாடல் ஒன்றை சிற்பியின் இசையில் பாடியிருக்கிறார் இசையமைப்பாளர் தேவா.

* 'லவ்டுடே' பட இயக்குநர் பாலசேகரன் இயக்கத்தில் 'துள்ளித்திரிந்த காலம்' படத்தில் நடித்து வரும் அருண்குமார், அடுத்து 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தை இயக்கிய ஆர்.பாலு இயக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* சஞ்சீவ்குமார்- புதுமுகம் ஸ்வேதா ஜோடியாக நடிக்கும் 'ஸ்டைல்' என்ற படத்தை இயக்குபவர் புதிய இயக்குநர் அபிமன்யு. இவர் ஆர்.கே. செல்வமணியிடமும், லியாகத் அலிகானிடமும் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.

* தெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் கன்னடப்படத்திற்கு 'பெங்களூர் டுடே' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் தெப்போலியனுக்கு ஜோடியாக ரஞ்சிதா நடித்து வருகிறார்.

* பிரபல எழுத்தாளரான குஷ்வந்த் சிங் எழுதிய நாவல் 'ட்ரெய்ன் டு பாகிஸ்தான்' என்ற பெரியல் படமாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் கதாநாயகியாக நடித் திருப்பவர் 'கூட்டாளி' படத்தில் கார்த்திற்கு ஜோடியாக நடித்துள்ள திவ்யா தத்.

* அரவிந்தசாமி- சோனாலி பாண்ட்ரே இணைந்து நடிக்கும் 'என் சுவாசக் காற்றே' படத்தில் ரகுவரன், பிரகாஷ்ராஜ் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். இதில் ரகுவரன் நடிப்பது அரவிந்த சாமிக்கு அப்பாவாக.

## நேற்றைய சிறுமி

'கேளடி கண்மணி' படத்தை சமீபத்தில் தொலைக் காட்சியில் ஒளிபரப்பினார்கள். அப்படத்தில் பாலசுப்பிரமணியத்தின் மகளாக நடிக்கும் சிறுமி உங்கள் உள்ளத்தை தொட்டிருக்கலாம். அந்தச் சிறுமிதான் இங்கே பிரகாஷ்ராஜுடன் காணப்படும் சிறுமி நீனா. 'விடுகதை' படத்தில் பிரகாஷ்ராஜின் ஜோடியாக, வயதானவரை திருமணம் செய்யும் பெண்ணாக நடித்திருக்கிறார்.

'தீபாவளி' வெளியீடாக வந்து தமிழ் நாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது 'விடுகதை'. 'காதல் கோட்டை' இயக்குநர் அகத்தியன் பாலச்சந்தரின் தயாரிப்பில் இயக்கியுள்ள படம் இது.

## ...சை எடுக்கிறார்கள்

...ஹிட்' படங்களை கொடுக்கும் இயக்குநர்கள் ...ளத்தை கோடிரூபாய்வரை உயர்த்துகிறார்கள், ...ன் இப்படிச் சம்பாதிக்கிறார்களே, பொறாமைப் ...க்கு சில அதிர்ச்சியான தகவல்கள்:

...படத்தை தந்த சூப்பர் இயக்குநர் துரை இப்போது ...க்கடை நடத்துகிறார். இளையராஜாவை அறிமுகம் ...தேவராஜ் மோகன் விவசாயம் செய்கிறார். ...கள்', 'முள்ளும் மலரும்' போன்ற ஹிட் படங்களை ...ந்திரன் செலவுக்கு பணம் இல்லாமல் நடிகை ...யிடம் கைகட்டி நிற்கிறார். மாங்காடு என்ற ...ள்ள கோவிலில் ஒரு இயக்குநர் பிச்சை எடுக்கிறார்.

## அஜித்தின் விருப்பங்கள்

அஜித்குமாருக்கு ரொம்ப ரொம்ப பிடிச்ச விடயங்கள் இரண்டு. ஒன்று, வேகமாக மோட்டார் பைக் ஓட்டுவது. இரண்டு பெண் நட்பு.

நட்பு பற்றி அஜித்குமார் சொல்லியுள்ள கருத்து இது: "நல்ல நட்பு என்பது ஓர் ஆணுடன், பெற்றோர்களுடன், சகோதரனுடன் மட்டும்தான் ஏற்படவேண்டுமா? ஒரு பெண்ணுடன் ஏற்பட்டால் அது என்ன மானுட ஜென்மத்தின் முதல் பாவமா?

பார்த்தவுடன் ஹாய் எனச் சொல்லும் அனைவருடனும் நமக்கு நல்ல நட்பு என்று எப்படிச் சொல்ல முடியும்?

எத்தனை சோகங்கள், வலிகள், இழப்புக்கள், தூக்கமில்லாத இரவுகள், அத்தனையும் என்னை பாரமாய் அழுத்த, எங்கே தான் காணாமல் போய் விடுவேனோ என்று தவிக்கையில், ஒரு ஆண் நண்பன் எப்படி இளைப்பாறுதல் தருவான்?

அவ்வாறான சந்தர்ப்பங்களில் தாயும், தோழியும் மட்டுமே நம் உணர்வுகளில் இரண்டறக் கலந்து, மேகத்தில் நம்மை இளைப்பாறச் செய்து, வலிகளின் கனத்தை புரிந்து கொண்டு, நம் சுமைகளை சுகமாக்க முடியும்."

என்று சொல்கிறார் அஜித்.

**முகப்பில்**
மம்முட்டி–தேவயாணி
படம்:மறுமலர்ச்சி
சிம்ரான்

## ...றுக்கிறார் மீனா

...சேரனுடன் தனக்கு நெருக்கம் என்பது வதந்தி ...மீனா.

...இயக்கத்தில் இரண்டு படம் நடித்தேன். அதற்காக ...காதல் என்பதா? ரஜினி சாருடன் மூன்றுபடம் ...சத்யராஜுடன் மூன்றுபடம், சரத்துடன் மூன்று ...க அவர்களுடன் என்னை இணைத்துப் பேசலாமா? ...ருடனும் ஒரு படம் மட்டும்தான் செய்ய வேண்டுமா? ...டால் இணைத்துப் பேசுவீர்களா? என்று கேள்விமேல் ...கேட்டுள்ளார் மீனா.

...சரத் ஆகியோருடன் நடித்தபோதும், ரவிக்குமார் ...ல் மூன்று படம் நடித்த போதும் கிளம்பாத கிசு கிசு, ...இயக்கத்தில் இரண்டு படம் நடித்து முடிக்க ...கிளம்பிய மர்மம் என்ன? மீனா விளக்குவாரா?

## ...ளச்சல்

சாதாரண பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட 'அட்ரா சக்கை ...சக்கை' படம் போட்ட முதலீட்டைவிட பல ...லாபத்தை அறுவடை செய்து கொடுத் ...ிருந்து.

...பாண்டியராஜன், சங்கீதா இருவரும் ஜோடி ...நடித்துள்ள படம் அது. இரட்டை அர்த்த வசனங்கள் அதிகம் என்று குறை கூறப்பட்டாலும் வசூல் விளைச்சல் அமோகம்தான். இயக்குநர் வி.சி. குகநாதன் மகிழ்ச்சியில் இருக் கிறார்.





சத்யராஜ்-ரேகா-சுகிதா
படம்:பெரியமனுஷன்



## தேவயாணியின் செண்டிமெண்ட்

"மணிவண்ணனுடன் இணைந்து நடித்த படமென்றாலே பெரிய வெற்றி பெற்று விடுகிறது."

இப்படிச் சொல்லிச் சந்தோஷப்படுபவர் தேவயாணி. அத்துடன் மணிவண்ணனுடன் நடித்து வெற்றி பெற்ற படலிஸ்ட்டையும் கூறுகிறார்.

'காதல் கோட்டை', 'பூமணி', 'சூர்யவம்சம்', 'பெரிய இடத்து மாப்பிள்ளை'.

தற்போது தேவயாணி, மணிவண்ணனுடன், 'சொர்ணமுகி', 'உதவிக்கு வரலாமா', 'செந்தூரம்', 'கிழக்கும் மேற்கும்', 'நினைத்தேன் வந்தாய்', 'பூந்தோட்டம்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

## நேர் எதிர் ரகுவரன்

ரொம்ப அப்பாவியாகவும், மகா கொடுமைக்காரனாகவும் நடிக்கக் கூடியவர் ரகுவரன். 'நேருக்கு நேர்', 'அபிமன்யு' என்று இரண்டு படங்கள் ஒரே நேரத்தில் வெளியாகின. நேருக்கு நேர் படத்தில் அப்பாவியாக நடித்தார். அபிமன்யுவில் முரட்டு வில்லன். இரண்டு படங்களிலும் ரகுவரனின் நடிப்புக்கு பலத்த வரவேற்பு.

தீபாவளிப் படங்களில் 'ரட்சகன்' படத்தில் கொடூர வில்லன். 'ஆஹா' படத்தில் அதற்கு நேர் எதிர். 'எந்தப் பாத்திரமானாலும் என்னால் நடிக்க முடியும். ரசிகர்களின் பாராட்டைப் பெற முடியும்' என்று தன்னம்பிக்கையுடன் கூறுகிறார் ரகுவரன்.

## இடம் பெயர்வு

மும்பை நாயகிகள் மத்தியில் மொடலிங் உலகில் தூள் கிளப்பியவர்களில் ஒருவர் சோனாலி பந்த்ரே. இந்திப் படங்களில் தன்னை சரியாகப் பயன்படுத்த தவறிவிட்டார்கள் என்பதில் சோனாலிக்கு மகா கவலை.

'இதயம்', 'காதல் தேசம்' படங்களை இயக்கிய கதிர் சோனாலியின் திறமைகளை வெளியே கொண்டுவரப் போகிறார். 'காதலர் தினம்' படம் பிரமாண்டமாகத் தயாராவதால் சோனாலி நம்பிக்கையுடன் மும்பாயில் இருந்து சென்னைக்கு இடம் பெயர்ந்துள்ளார். இங்கும் இடம் பெற்றுள்ளார்.

## அங்கே தேடுகிறார்

முரளியுடன் சுவாதி இணைந்து நடித்த 'கண்டக்டர் மாப்ளே' இன்னமும் வெளிவராமல் இழுத்துக்கொண்டு போகிறது. ராமராஜனுடன் சுவாதி ஜோடி சேர்ந்துள்ள 'அன்னைல்' படமும் தடங்கல் காரணமாக தாமதமாகிறது. கார்த்திக் ஜோடியாக சுந்தரபாண்டியன் படத்தில் நடிக்கிறார் சுவாதி. ஆனாலும் இரண்டாவது நாயகி அந்தஸ்துதான் கொடுத்திருக்கிறார்கள்.

இதனால் ஏனைய நடிகைகள் போலவே தெலுங்குப் பட உலகில் வாய்ப்பு தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் சுவாதி.

## ரவளிக்காக மந்த்ரா

பார்த்திபனுடன் மந்த்ரா, கவுசல்யா இருவரும் ஜோடி சேரும் படம் 'விவரமான ஆளு'. பார்த்திபன் உண்மையாகவே விவரமான ஆளுதான். ரவளிக்கு இப்படத்தில் சான்ஸ் கொடுக்காமல் தவிர்த்திருக்கிறார். ரவளி இல்லாத குறையை மந்த்ரா தீர்த்து வைக்கிறார்.

மந்த்ரா ரசிகர்களை மந்திரம் போட்டு மயக்கக்கூடிய பாடல் ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாம். இசை: வித்யாசாகர்.



**பருவம் என்பதே பாடம் அல்லவா!**
**பார்வை என்பதே பள்ளியல்லவா!**

# புடவையின் கதைச்சுருக்கம்



**நீ**ங்கள் எப்படித்தான் சல்வார் மிடியில் ஜொலித்தாலும், புடவையில்தான் ரொம்ப அழகாக இருப்பீர்கள்.

அப்படிப்பட்ட புடவை பிறந்த கதை தெரியுமா உங்களுக்கு?

பண்டைக்கால சிந்து சமவெளி நாகரிகம்தான் புடவைகளின் தொடக்கம்- என்றாலும் அப்போது அது வெறுமனே இடுப்புக்குக் கீழே மட்டும் மறைக்கும் கீழாடையே தவிர, அதற்குப் புடவை என்ற பெயர் அப்போது இல்லை. மேலே ஜாக்கெட்டும் அப்போது அறிமுகமாகவில்லை.

இதன் பிறகும் பெண்கள் முழு வதுமாக மறைக்கின்ற புடவைகளைப் பல நூற்றாண்டுகளாக பயன்படுத்த வில்லை என்பதை 15ம் நூற்றாண்டு காலத்தையே விஜய நகர ஓவியங்களைப் பார்த்தால் புரிகிறது. இந்த ஓவியங்களில் பெண்கள் புடவை போன்ற ஆடையை அணிந்திருந்தார்கள்.

இதற்கிடையே இலக்கியத்தை உற்றுப் பார்த்தோமானால் சங்க காலத்துப் பத்துப் பாட்டில் 'புடவை' என்ற வார்த்தை இருக்கிறது. ஆனால் இது ஆண்-பெண் இருபாலாரும் அணியும் ஆடையாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (திருவள்ளுவர், புத்தர் அணிந்திருக்கும் ஆடைகள்தான் அவை)

ஆக, முழுமையான புடவை என்பது எப்போது உதயமானது தெரியுமா?

சந்திர குப்த மவுரியரின் கிரேக்க மனைவியான ஹெலன்தான் முதன் முதலாக 'ஃபாஷனாக இருக் கட்டுமே' என்று சொல்லி.. முழங்கால் வரைக்கும் இருந்த ஆடையை கணுக்கால் வரைக்கும் ஆக்கி இருக்கிறார்.

இந்த ஃபாஷன் பெண்களுக்குப் பிடித்து விடவே, வெகு வேகமாகப் பரவி... இன்று உங்கள் மேனிகளில் புரள்கிறது.

# தெருவில் விளையாட விடலாமா?



**து**றுதுறுவென்று வளரும் குழந்தைகளால் வீட்டில் ஏகப்பட்ட தொல்லை. சதாசர்வ நேரமும் ஏதாவது சேட்டை செய்யும் குழந்தைகளுக்கு, 'இது விஷம்', 'இது விபரீதம்' என்று விபரம் தெரியப் போகிறதா? நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.

★ வழக்கமாகத் தின்பண்டங்கள் வைக்கும் பாத்திரத்தில் தின்பண்டங்களையே தொடர்ந்து வையுங்கள். ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு வேறு சாமான்களை வைப்பீர்களேயானால் குழந்தை அதையும் கூட எடுத்துச் சாப்பிட்டு விடும்.

★ மின்சார உபகரணங்கள், மருந்து மாத்திரைகள், கத்தி, பிளேட் போன்றவற்றைக் குழந்தைகளின் கைக்கெட்டாத தூரத்தில் வைத்து விடுங்கள். காலாவதியான மருந்து, மாத்திரைகளை தூர வீசி விடுங்கள்.

★ சமையலைறைப் பக்கம் குழந்தைகளை விடும் பழக்கத்தை அறவே வைத்துக் கொள்ளாதீர்கள்.

★ குழந்தைகளுக்கான சட்டைகளில் ஊக்கு, குண்டூசி ஆகியவற்றை மாட்டி விடாதீர்கள்.

★ புளியுங்கொட்டை, கோலிக்குண்டு மற்றும் இரும்பு, தகரம் இணைக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களையும் விபரம் தெரியாத குழந்தைகளுக்கு விளையாடக் கொடுக்காதீர்கள்.

★ குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு சமையல் செய்யாதீர்கள்.

★ தெருவில் விளையாட அனுமதிக்காதீர்கள்.

★ ரோட்டில் அழைத்துச் செல்லும்போது உங்கள் குழந்தையின் விரல்களை நீங்கள்தான் பிடித்து அழைத்துச் செல்ல வேண்டும்.

★ குழந்தைகள் தவழ்ந்து திரியும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.

★ சுவர் ஓரமாகக் குழந்தைகளைப் படுக்க வைக்காதீர்கள். பூச்சி, பூரான், பல்லி, எறும்பு போன்றவை சுவர் ஓரமாக நடமாடக்கூடும்.

## மூக்கடைப்பா?

**மூ**ச்சுவிட முடியாமல் மூக்கு அடைத்துக்கொண்டதென்றால் மஞ்சளைச் சுட்டு கொஞ்சம் வேகமாக உறிஞ்சுங்கள் சரியாகி விடும்.

## விக்கலா?



**கொ**ஞ்சம் நெய்யை எடுத்து அதில் கடுக்காய் பொடியையும், சீனியையும் கலந்து விழுங்குங்கள். விக்கல் நின்றுவிடும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழ்யுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CR

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-11-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 9

புவனா

**அ**ந்த இளம் நிர்வாகியின் மகனான சிறுவன் டயனாவுடன் வாஞ்சையுடன் ஒட்டிக் கொண்டான்.

அப்போது பதினெட்டு வயதுக்குரிய துள்ளும் இளமையுடன் காட்சியளிப்பார் டயானா. சிறுவனின் தந்தையான நிர்வாகிக்கு டயானா பெரிய குடும்பத்து பெண் என்பதும் தெரியும்.

அதனால் டயானாமீது ஆசைப்படுவது தன் தகுதிக்கு குறைந்த ஆசை என்று அவர் நினைக்கவில்லை.

டயானாவுக்கு அவர்மீது விசேஷமான ஆர்வம் எதுவும் இருந்ததில்லை. ஆனால் கள்ளம் கபடமில்லாமல் டயானா தன்னுடன் சிரித்துப்பேசி மகிழ்வதை வைத்து தவறாக எடைபோட்டுவிட்டார்.



சகோதரி சாராவுடன் டயானா

அவரது மனைவி இறந்துபோனாள். இளம் வயதிலேயே மனைவியை இழந்த துயரம் ஒருபுறம், தனிமைத்துயர் மறுபுறம் என்று தவித்துக் கொண்டிருந்தார்.

இடைக்கிடையே சில பெண் நண்பிகளின் துணையுடன் தனிமையைப் போக்கி இனிமை காணும் பழக்கமும் அவருக்கு இருந்தது.

ஆனாலும் டயானா புதுரோஜாவாக அவர் கண்களுக்குத் தெரிந்தாள். வழவழப்பான நீண்ட கால்களும், எடுப்பான முன், பின் அழகுத் திரட்சிகளும் இளம் நிர்வாகிக்கு டயானாவை அடையும் ஆர்வத்துக்கு தூண்டுகோலாயின.

ஒருநாள் சிறுவன் தூங்கிக் கொண்டிருந்தான். டயானா ஜன்னலின் பக்கத்தில் நின்று வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஜன்னல் ஊடாக காற்று வந்து டயானாவின் தலைமுடியை கலைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

தனக்குப் பின்புறம் வந்து நின்ற இளம் நிர்வாகியை டயானா கவனிக்கவில்லை.

அவரால் அதற்குமேலும் பொறுக்க முடியவில்லை.

பின்புறமாய் நெருங்கி, தன் கைகளை டயானாவின் முன்புறமாய் செலுத்தி தன்னுடன் அணைத்துக்கொண்டார்.

டயானாவின் பூப்போன்ற உடல் தன்மீது பட்டதும் அவரால் தாபத்தை தாங்க முடியவில்லை. அவரது அணைப்பு முரட்டுத்தனமாக, ஒரு கொலைகாரனின் மூர்க்கத்தனம் போல இருந்ததாக டயானா தன் தோழிகளிடம் பின்னர் கூறியிருக்கிறார்.

பின்புறமாய் அணைக்கப்பட்டதும் டயானா முதலில் பயந்துபோனாள்.

நெஞ்சுக்குள் 'திக்' என்றது. உடனே கத்திக் கூச்சலிடவும் நா எழ மறுத்தது. பின்னர் சுதாகரித்துக் கொண்டு கூச்சலிட்டார்.

தன்னை அணைத்திருப்பது யார் என்று பார்க்கக்கூட முற்படாமல் டயானா வீல் என்று கத்திய கத்தில், தூங்கிக் கொண்டிருந்த சிறுவன் எழுந்து அழத் தொடங்கி விட்டான்.

இளம் நிர்வாகிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பலாத்காரமாக முயற்சிப்பது என்பது அவர் நோக்கமும் அல்ல.

டயானா இணக்கமாக நடந்துகொள்வாள் என்றுதான் எதிர்பார்த்தார். இப்படி கூச்சல் போடுவார் என்று நினைத்தும் பார்த்தாரில்லை.

தன்னைக்கட்டி அணைத்தது சிறுவனின் தந்தையான இளம் நிர்வாகி என்பது தெரிந்தவுடன் டயானாவுக்கு தன் கண்களையே முதலில் நம்ப முடியவில்லை.

சிறுவனோ இரண்டுபேரையும் மாறி மாறி பார்த்துக்கொண்டே அழுதபடி இருந்தான்.

"என்னை மன்னித்துக்கொள்." என்று முனகுவதுபோல நிர்வாகி சொன்னது மட்டும் டயானாவுக்கு கேட்டது.

டயானாவின் முகத்தைப் பார்க்கக்கூட திராணியில்லாதவராக அவர் தலை தொங்கிக் கொண்டிருந்தது.

டயானாவும் அவரது முகத்தைப் பார்க்கவே பிடிக்காதவளாய் அந்த வீட்டைவிட்டு உடனடியாகவே வெளியேறிவிட்டாள்.

"பூனை போல அவர் நடந்து கொண்டார். தன் ஆசையை நேரடியாகத் தெரிவிக்கக்கூட அந்த மனிதருக்கு தைரியமில்லை. இப்படியான ஆண்கள் கோழைகள். இவர்கள்மீது அனுதாபப்படத்தான் முடிகிறது. அதனால்தான் நான் அந்த சம்பவத்தை பெரிதுபடுத்தவில்லை" என்று தன் தோழிகளிடம் கூறினாராம் டயானா.

## குறும்பு என்றால் கரும்பு

அதன்பின்னர் வீடுகளுக்கு சென்று வேலை செய்வதை அறவே கைவிட்டார் டயானா.

அதனால் பாலர் பாடசாலைப் பணி தவிர்ந்த ஏனைய நேரங்களை தன் சிநேகிதியான கரோலின் பாத்தோலோமியாவாவுடன்தான் செலவிட்டார் டயானா.

இருவரும் பொல்லாத குறும்பிகள். குறும்பு என்றால் இருவருக்கும் கரும்பு. இரவு நேரங்களில் தெருவில் ஓடித்திரிந்து வீடுகளின் முன்புறம் உள்ள அழைப்பு மணியை அழுத்திவிட்டு ஓடி மறைந்து விடுவார்கள்.

வீடுகளின் முன்புறக் கதவுகளிலும் ஒட்டும் நாடாக்களை ஒட்டி வைத்துவிடுவார்கள். தங்கள் வயதையொத்த இளைஞர்கள் சென்றால் கிண்டல் பண்ணியே வறுத்தெடுத்து விடுவார்கள்.

டயானாவும் அவர் தோழி கரோலினாவும் தங்கள் வீட்டுவாயிலில் நின்றால் சில இளைஞர்கள் அப் பக்கமே செல்லமாட்டார்கள்.

தனியாக செல்லும்போது மிகவும் பவ்வியமான பெண்போல காணப்படுவார் டயானா. அதனால் டயானா கூச்ச சுபாவம் உள்ளவர் என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். டயானாவின் கண்களும் அந்த நினைப்பை உறுதிசெய்யக்கூடியவைதான்.

ஆனால் தோழிகளுடன் சேர்ந்து விட்டார் என்றால் செமர்த்தியான குறும்புக்காரியாகி விடுவார்.

## புது நண்பர்கள்

டயானாவின் 18 வயதில் துடிப்பான இளைஞர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

இசை நிகழ்ச்சிகள், விருந்துகள் என்பவற்றுக்கு ஆண் நண்பர்களுடன் சென்று வருவது இங்கிலாந்துப் பெண்களுக்கு புதுமையான விஷயங்கள் அல்ல.

ஆண் நண்பர்களுடன் நெருங்கிப் பழகினாலும்கூட, ஒரு வரம்போடுதான் அந்த நெருக்கத்தை வைத்திருந்தாள்.

மிஞ்சிப்போனால் முத்தமிட்டுக் கொள்வது, இதமாக அணைத்துக் கொண்டு விடைபெறுவது என்பதற்கு மேல் டயானா இடம் கொடுப்பதில்லை.



டானாவின் தோழிகள் சிலர் தங்கள் ஆண் நண்பர்களுடன் அதற்கு மேலும் சென்று புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அவர்கள் தங்கள் அனுபவங்களை கதை கதையாகக் கூறுவார்கள். அப்படியிருந்தும் டயானா சபலங்களுக்கு இடம்கொடாமல் நடந்துகொண்டார்.

## டயனாவின் சகோதரி

டயானாவின் சகோதரி சாரா ஒரு பிரபலமானவருடன் நெருங்கிப் பழகிவந்தாள். பத்திரிகைகளிலும் அச் செய்தி அடிபட்டது.

## கைது செய்த கண்கள்







டயானா அவ்வாறு பழகியது வேறு யாருடனும் அல்ல, இளவரசர் சாள்ஸ்சுடன் தான்!

பனிச்சறுக்கு விளையாட்டு முதல், மாலை நேர பொழுதுபோக்கு பயணங்கள் வரை இளவரசர் சாள்ஸ் தன்னுடன் சாராவை அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

பிரிட்டன் பத்திரிகைகள் தங்கள் இளவரசருடன் ஒரு இளம் பெண் அடிக்கடி காணப்பட்டதை கண்டு கொண்டன.

யார் அந்தப் பெண் என்று தோண்டித் துருவி விசாரித்து தகவல் வெளியிட்டன.

பிரிட்டனின் எதிர்கால மகாராணி தயார். இளவரசருக்கு மனைவி தயாராகிறார் என்று செய்திகள் கொட்டை எழுத்துக்களில் வெளிவரத் தொடங்கின.

கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் சாராவும், சாள்ஸ்சும் ஒட்டிக்கொண்டு உலா வந்தனர்.

என்ன காரணத்தாலோ சாள்ஸ்சை சாராவுக்குப் பிடிக்கவில்லை. சாள்ஸ் தன் கணவராக இருக்க வேண்டும் என்று சாரா விரும்பவில்லை.

1978ம் ஆண்டு பெப்ரவரியில் சஞ்சிகை ஒன்றில் சாராவின் பேட்டி வெளியானது.

பேட்டியைப் படித்த இளவரசர் சாள்ஸ்கூட துணுக்குற்றாராம்.

அப்படி என்னதான் அந்தப் பேட்டியில் சொல்லியிருந்தார் சாரா.

"எனக்கு ஓர் அண்ணன் இல்லை. இளவரசரை எனது மூத்த அண்ணனாகவே கருதுகிறோம்" என்று பேட்டி கொடுத்திருந்தார் சாரா.

இப்பேட்டியை டயானாவும் பார்த்தார். அதில் உண்மை உண்டா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய டயானா முற்படவில்லை.

1979 ஏப்ரல் மாதம் டயானாவின் மூத்த சகோதரியான ஜேனின் திருமண விழா நடைபெற்றது.

மணப்பெண்ணின் தோழியாக நின்றவர் டயானாதான்.

திருமண விழாவில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரும் கலந்துகொண்டனர்.

இளவரசர் சாள்ஸின் பார்வை மணப்பெண்ணின் அருகில் நின்ற டயானாமீது அம்பெனப் பாய்ந்தது.

டயானாவும் நோக்கினார்.

சாள்ஸ்சும் நோக்கினார்.

கண்களை கண்கள் பரஸ்பரம் கைது செய்து கொண்டன. டயானாவின் காந்தக் கண்கள் சாள்ஸ்ஸை திருடிவிட்டன.

சாள்ஸ்சின் இதயம் வேகமாய் துடித்தது.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? காரைதீவு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | க. திருநிறைச் செல்வி, வீரபத்திரர் கோயில் வீதி, காரைதீவு-03. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# தேன் கிண்ணம்



## உயிர் எரியும் சிதை

நினைவுகளையெல்லாம்
மடித்துச் சுருட்டிக் கொண்டு
அவளால்
வாழ்ந்துவிட முடியாது!
அவளைப் பின் தொடரும்
கண்ணீர் வெள்ளம்
வாழ்வின்
சிதைவுகளையெல்லாம்
சமந்து வருகிறது!
-o-
அவளது இளமை பூராவும்
தொடரும் துயரமிது!
கண்ணீரே வாழ்வாக...
அதுவே வாழ்வின் கதையாகக்
கொண்டவளின் நெஞ்சிலிருந்து
கொதித்தெழும்பும் கவலை இது!
அவளது உயிரை உலுப்பும்
சோகத்தின் வெளி இது!
எப்படி இது அடங்கும்?
-o-
ஒரு தங்க மகனுக்காக-அவள்
மனதுக்குள் உருவமைத்து
கனவுகளால் அழகுபடுத்திய
வாழ்வெனும் மாளிகைக்குள்
நொண்டிக் கழுதையொன்று
அத்து மீறிப் பிரவேசித்தது;
அவளது கனவுக் கோலங்களைக்
கேவலப் படுத்தியது;
வாழ்வின் சுவர்களை
உதைத்துச் சிதைத்தது;
உன்னத உள்ளமொன்றில்
கறை பூசிப் போனது!
-o-
ஆபரணங்கள் சூடும்
தங்க வேடிக்கைக்குள்
அவள் தேடும்
ஆறுதலும் நிம்மதியும்
அடங்கவுமில்லை!
கை விரலில் சூடும்
கணையாழியின் ஆடம்பரத்தில்
காதலைக் கொண்டாடக்
கருதியவளுமில்லை!
-o-
சடப் பொருட்களின்
வடிவங்களுக்குள் மாத்திரமே
அவளுக்குக் கிடைத்த அன்பு
அடைபட்டுக் கிடந்தது!
அது ஆத்மாவின் கீதமாய்
எழுந்து வரவில்லை;
புலன்களின் வழியே போய்
அவள் உயிரோடு கலக்கவில்லை!
-o-
அவள் ஏற்றுக் கொண்டது
கணப்பொழுதுக்கு
நெஞ்சுருக வைத்துக்
கதைகளில் கரைந்துபோகும்
கண்ணீரையல்ல;
இதயத்திலிருந்து
நெருப்பாக எழுந்து
உயிரைச் சுடுகின்ற உணர்வு அது!
-o-
இனி அது தான்
அவள் வாழ்வின் வதை!
இனி அது தான்
அவள் உயிர் எரியும் சிதை!

பஹீமா ஜஹான், மெல்சிரிபுர.

## சாட்சி



தாயின் அணைப்பைப்போல்
நிழல்தந்து தாலாட்டும்
ஆலமரமே...!
அவதரித்த நாள்முதலாய்
சுற்றி நடப்பதெல்லாம்
துளிர்விழியால் பார்ப்பவள் நீ!
வெந்து வெயிலடுப்பில் வெறும்பாதம் துடிதுடிக்க
வந்து இளைப்பாறும் வசந்தங்களை, .
உன் இதத்தில்
குரும்பட்டித் தேரிழுக்கும் குருவிகள்,
பகிடிவிட்டு
பொழுதை அடைவுவைக்கும் பொடியளின்,
தீ குளிரும்
அந்திகளில் உந்தன்
'ஆனைக்கால்' வேர்களிலே
குந்திக் கதை பறையும் கிழடுகளை, சொல்பொருள்போல்
இரவில் 'உயிர்கலந்த' இளசுகளை நீயறிவாய்!

இவைநேற்று!

இன்றோ... இன்னும் நீ பல அறிவாய்...!
சரிந்துன்முன் கிடந்தானே... தவத்தானை ஆர்சுட்டார்?
விடியலில் வழிவந்த விஜயகுமார்....
வீட்டுக்குத்
திரும்பலையாம்; அவனையார் திருடிவிட்டார்?
உன்னருகுக் குழியில் கிடந்தாளே குமுதா...
ஆர் 'குழிபறித்தார்?'

கிழிந்த உடைகளையும், குருதிதோய்ந்த செருப்பினையும்
வெடித்த ரவைகளையும்,
மீதம் விட்டெவர் அகன்றார்?
சொல்தாயே!
ஊருக்குஞ் சொல்தாயே!
நிதம் வந்து...
உன்கிளையில் தங்கி ஆறி ஊர் உலாத்தும் காற்றுக்கும்
சொல் நிசத்தை;
அதுபோயிப் புவிக் 'கெல்லாம்' சொல்லட்டும்....!

அருணன், யாழ்ப்பாணம்.

## ஒரே கூடு ஒரே மக்கள்!

பின்னிரவு 3 மணி
கதவுடைக்கும் சத்தம் கேட்டுத்
திறந்து பார்த்தால்
'கதவைத் தட்டி'யதாய்க்!
காக்கிகள் சொல்லின
★
வீட்டுக்குள் புகுந்து,
நித்திரைக்குள்
விழுந்து கிடந்தவர்களை
வெளியே இழுத்தெடுத்து
விசாரணை என்ற பெயரில்
விசாரிக்காமலே
உடை மாட்டி
பஸ்சில் ஏற்றி
இரவுக்குள் ஊர்வலமாய்
நகர்வலம் கொண்டு சென்று
காவல் நிலையத்தில்
கொட்டினர்!
★
பின்னிரவு இருளில்
குப்பைகளாய் மக்கள்
குவிந்து கிடந்தனர்.
இருந்த இடம்விட்டு
நகரக்கூட முடியாத
சட்டங்கள்!
★
தமிழ்ப் பெயர் வைத்ததும்
வடபுலத்து மண்ணிலே
தமிழனாய்ப் பிறந்ததும்
குற்றங்களா?
★
நியாயங்களைச்
சொல்வதற்கும் வழியில்லை;
கேட்பதற்கும் ஆளில்லை;
பின்பு,
இருவர் இருக்கக்கூடிய
கழிவறைக் கூட்டில்
இருபது பேரை அடைத்தனர்!
★
குற்றம் புரியாமலே
கூட்டுக்குள் இருப்பதும்,
கழிவறை நாற்றத்தைச்
சகித்துக் கொள்வதும்
தமிழர்க்கு மட்டுமே
சாத்தியமாகின்றன!
★
இடைக்கிடை
கூட்டுக்குக் குறுக்கே
இருக்கும்
ஆறு கம்பிகளுக்கூடாக
சோகமாய் வெளியே
பார்த்தால்...
சகோதர மொழிப் பத்திரிகையில்
'சாம தவளமவும்'
பால் பொங்கும்
'பழைய' பானையும்
தெளிவாகத் தெரிகின்றன!
★
உண்மைதான்...
'ஒரே நாடு ஒரே மக்கள்'
வெளியே,
'ஒரே கூடு ஒரே மக்கள்'
உள்ளே!!

எம்.சுரேஷ்

## வரப்பிரகாஷ் சொல்கின்றான்...

'ஷெல்' வீச்சுக்கு பங்கரை நாடி
'புக்காரா' குண்டிற்கு தறிகெட்டு ஓடி
தாண்டிக்குளப் பாதையை
தவழ்ந்தடித்து தேடி
வவுனியாக் 'காம்பில்' வாழ்க்கையை நோக்கி
சாவடிகளைத் தாண்டி மேற்கே வந்து
வந்தடைந்த இடத்தில்
'சந்தேக நபரில்' விலகி
வசந்தம் வீசும் என நினைத்துத் தான்
பேராதனை சென்றேன்....!
இவர்கள் உயிரைக் குடிப்பார்கள் என
தெரிந்திருந்தால் - நான்
'ஷெல்' வீச்சுக்கே அன்று
என்னைக் கொடுத்திருப்பேனே....!

சி.மாதுமை-திருக்கோணமலை.

## இது எதுவரை?

ஆசை அடையும்வரை
பூசை பூஜிக்கும்வரை
தோசை சாப்பிடும்வரை
பசு பால்தரும்வரை
சிசு வளரும்வரை
படிப்பு சாகும்வரை
மறைப்பு வெட்கம்வரை
உறைப்பு சிலநிமிடம்வரை
நடிப்பு இறுதிவரை
துடிப்பு அடங்கும்வரை
திறப்பு பூட்டும்வரை
சிறப்பு வாழும்வரை
அரப்பு முழுகும்வரை
கனவு காணும்வரை
நனவு நடக்கும்வரை
நினைவு மறக்கும்வரை
காதல் திருமணம்வரை
பாடல் மறக்கும்வரை
போதல் போகும்வரை
மது குடிக்கும்வரை
மாது கடைசிவரை
சாது மிரளும்வரை
மதி புத்திவரை
விதி விலக்குவரை
யுத்தம் எதுவரை?


சோழியூர் சிவபரீஸ்வரன்-யாழ்ப்பாணம்.

## கடற்கரைத் தாகம்

உச்சி வெயில்;
உதடுகளும் உலர்ந்து போய்...
என்கால்கள்
தடம்பதிப்பதோ...
ஆர்ப்பரிக்கும் அலைகளால்கூட
தாண்டிவிட முடியாத
சமுத்திரத்தின்
மணற்தரையில்!
★★★
வாலிபத்தை
வருடங்கள் மட்டும்
வேகமாகத் தாண்டிவிடுகின்றன!
இந்த
சமுதாய சமுத்திரத்தில்
சீதன உப்பு
என்றுதான் இல்லாமற் போகுமோ?

மாவை-வரோதயன்.

# அந்தநாள் ஞாபகம்



'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' படப்பிடிப்பின் போது அப்பாவுடன் சூர்யா.

தமிழ்ப்பட உலக 'மார்க்கண்டேயர்' என்று அழைக்கப்படுபவர் சிவகுமார்.



திரைப்பட நடிகர்களில் தப்பான பழக்க வழக்கங்கள் இல்லாதவர் என்ற பெயரைச் சம்பாதித்ததுதான் சிவகுமாரின் சாதனை. சிவகுமாரின் மகன் சூர்யாவும் இப்போது நடிகர். இன்றைய இளம் கதாநாயகர்களில் ஒருவராக மாறிவிட்ட சூர்யாவின் முன்னாள் பெயர் சரவணன். அந்நாளில் சிறுவனாக சிவகுமாருடனும், குடும்பத்தாருடனும், தனியாகவும் சூர்யா எடுத்துக் கொண்ட புகைப் படங்கள்தான் இவை. சின்னச் சூர்யாவும் படு சுட்டியாய்த்தானே இருக்கிறார்.



தங்கை பிருந்தா- தம்பி கார்த்திக்- அப்பா சிவகுமார்- அம்மா லட்சுமி ஆகியோருடன் சூர்யா

# இந்த வாரம் உங்கள் பலன்

(16.11.1997 தொடக்கம் 22.11.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் பிரயாணம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- மனக்கலக்கம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வீண் துயர், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உறவினர் நன்மை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- கடன் சுமை, பிரயாண மிகுதி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், மனச்சுமை அதிகம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் சுமை நீங்கும், காரியக்கேடு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், பொருள் விரயம். | பி.ப. | 1 | மணி |
| சனி- தேகசுக நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி வெற்றி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- பலவித பேறு, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், புதன். |
| தனு | - வெள்ளி, செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

★ சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- உறவினர் கலகம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| புதன்- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உயர்ச்சி தடை, பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், அந்நியர் சகாயம். | பி.ப. | 1 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன் - இனசன மகிழ்ச்சி, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், காரியக்கேடு. | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் சிக்கல். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசன நன்மை, உயர்ந்த எண்ணம். | மு.ப. | 9 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, அந்நியர் உதவி. | மு.ப. | 11 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- இனசனப் பகை, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சுகம், காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், வீண் செலவு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், அந்நியர் பகை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி- வீண் கலக்கம், தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் கேடு, காரியத்தடை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- பெரியோர் சுகம், கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6





மண்ணுக் குள்ளே அமுதைக் கூட்டிக்
கண்ணுக் குள்ளே களியைக் காட்டி
எண்ணுக் குள்ளே இன்பத் தெளிவாய்
வாராய், நிலவே, வா.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## ஏமாந்தவர் யார்?



அந்நிய நாட்டிலிருந்து உயர்ந்த ஜாதிக் குதிரைகளை விற்பனைக்காக சக்கரவர்த்தி அக்பர் முன்னிலையில் நிறுத்தினான் ஒரு வியாபாரி.

வியாபாரி கொண்டு வந்திருந்த குதிரைகள் எல்லாவற்றையும் அக்பர் தகுந்த விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். மேலும் குதிரைகள் இருந்தால் கொண்டு வரும்படி கூறினார். அதற்கு அந்த வியாபாரி,

"சக்கரவர்த்தி அவர்களே! தங்கள் கட்டளைப்படியே மேற்கொண்டு பல குதிரைகளைக் கொண்டு வருகிறேன். ஆனால் பல நாடுகளுக்குச் சென்று உயர்ந்த ரக குதிரைகளை வாங்குவதற்காக எனக்கு ஒரு இலட்சம் பொற்காசுகள் முற்பணமாகத் தரவேண்டும்," என்று கேட்டான்.

அக்பரும் அந்தத் தொகையைக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். தொகையைப் பெற்றுக்கொண்ட குதிரை வியாபாரி, அக்பரிடம் விடைபெற்றுக் கொண்டு தன் நாட்டுக்குப் புறப்பட்டான்.

சில மாதங்கள் சென்றன.

அக்பர் பீர்பாலிடம், "நம்நாட்டில் யார் யார் எந்தெந்த வகையில் ஏமாந்தவர்கள் என்று பட்டியலிட்டு எனக்குத் தாரும்!" என்று கேட்டுக்கொண்டார்.

சில தினங்களில் பட்டியல் தயாரித்து அக்பரிடம் சமர்ப்பித்தான் பீர்பால்.

அக்பர் பட்டியலை வாங்கிப் பார்த்ததும் சிறிது அதிர்ச்சி அடைந்தார். ஏனென்றால் ஏமாந்தவர்கள் பட்டியலில் முதல் வரிசையில் முதல் பெயர் 'அக்பர் சக்கரவர்த்தி' என்று எழுதப்பட்டிருந்தது.

பீர்பால் ஏதாவது காரணத்தோடுதான் செய்திருப்பான் என்று எண்ணிய அக்பர் பீர்பாலிடம் பட்டியலைக் காண்பித்து,

"பட்டியலில் முதல் பெயராக என் பெயர் வந்திருக்கிறதே! ஏன்?" என்று கேட்டார்.

"அரசே! சில மாதங்களுக்கு முன், வேற்று நாட்டில் இருந்து வந்த குதிரை வியாபாரி ஒருவனுக்கு ஒரு இலட்சம் பொற்காசுகளை முற்பணமாகக் கொடுக்கும்படி உத்தரவிட்டீர்கள்; ஞாபகம் இருக்கிறதா? அவன் இதுவரையிலும் குதிரைகளைக் கொண்டு வந்தானா?

குதிரைகள்மீது சக்கரவர்த்திக்குப் பிரியம். அரசாங்கத்திற்குக் குதிரைகள் தேவை என்பதையும் நான் அறிவேன். ஆயினும் அந்நிய நாட்டினன் ஒருவனை நம்பி, இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்தது எந்த வகையில் புத்திசாலித்தனம்? இப்போது நீங்கள் ஏமாந்து விட்டீர்கள் அல்லவா?" என்று சொன்னான் பீர்பால்.

"அவ்வியாபாரி குதிரைகளைக் கொண்டு வந்து விட்டால் என்ன செய்வீர்?" என்று பீர்பாலிடம் எதிர்க்கேள்வி கேட்டார் அக்பர்.

"அவன் அப்படிக் கொண்டு வந்து விட்டால், அந்தப் பட்டியலில் உங்களின் பெயரை நீக்கிவிட்டு, அந்த வியாபாரியின் பெயரை அதில் எழுதிவிடுவேன்," என்று பதிலளித்தான் பீர்பால்.

பீர்பாலின் பதிலைக் கேட்ட அக்பர், அவனது கணிப்பு எப்போதும் காரண காரியத்தோடுதான் இருக்கும் என மனதிற்குள் மெச்சிக் கொண்டார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!

### உயரமான செடி

உலகிலேயே 'ஸ்டெல்லேரியா டிகம்பன்ஸ்' என்ற செடி உயரமான இடத்தில் வளருகிறது. இது இமயமலை மீது 20,130 அடி உயரத்தில் வளருகிறது.



### நீளமான மத்தளம்

இந்தியாவில் உள்ள அஸாம் மாநிலத்தில்தான் உலகிலேயே நீளமான மத்தளம் உள்ளது. நீண்ட மரத்தைத் துளையிட்டு தோலால் மூடியிருக்கும் இந்த மத்தளத்தை ஒலிக்க வைக்க ஒரே சமயத்தில் 50 பேர் தேவை.



### புச்சர்ஸ் புரும் செடி

இந்தச் செடியில் இலையே தோன்றாது. ஆனால் இதன் கிளைகள் இலைகளைப் போல்தோற்றமளிக்கும். கிளைகளுக்கு நடுவே பூக்கள் பூக்கும்.



### உருண்டைச் செங்கல்

பெரு நாட்டின் 'இன்காஸ்' என்ற பழங்குடி மக்கள் தம் புனித ஆலயங்களைக் கட்ட உருண்டைச் செங்கற்களை உபயோகித்தனர்.



## வாரம் ஒரு நாடு

### பியூர்டோ ரிகோ

தலைநகர் - சான் ஜீவான்
பரப்பு - 8,891 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 37 இலட்சம்.
மொழி - ஸ்பானிஷ், ஆங்கிலம்
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - டோல்லோ
தனிநபர் வருமானம் - 4300 டொலர்

**அமைவிடம்:**

கரீபியனின் ஓரத்தில் ஹைடி, டொமினிகன் குடியரசுக்கு 50 மைல்கள் கிழக்கே அமைந்துள்ளது பியூர்டோ ரிகோ தீவு.

**வரலாறு:**

1952ல் சுதந்திரமடைந்தது. அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புடையது. மக்கள் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற போதிலும், வாக்களிக்கும் உரிமை பெறவில்லை. 1993 நவம்பரில் அமெரிக்காவுடன் முழுமையாக இணைவதில்லை என்னும் மசோதா நிறைவேற்றப்பட்டது.



**பொருளாதாரம்:**

மிக ஏழை நாடாக இருந்த பியூர்டோ ரிகோ தற்போது இலத்தீன் அமெரிக்காவிலேயே சொகுசு வாழ்க்கை உடையது என்னும் தகுதியைப் பெற்றுள்ளது. இதற்குரிய முக்கிய காரணி 1940களில் நடைமுறைப் படுத்தப்பட்ட 'ஒபரேஷன் பூட்ஸ்டாப்' நடவடிக்கை ஆகும். சுற்றுலா முக்சிய வருமான மூலம். துணி, சிகரெட், மது வகைகள் போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.11.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 219
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 217

பரிசுக்குரியவர்:
பா. ஹரிசுதன்,
இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வர இந்துகல்லூரி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். சிவசங்கர்,<br>தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. | எம். ஆர். எ.ஃப், றிஸ்னா றசீத்,<br>கே/மா/அல்-அஸ்ஹர் ம.வி., ஹெம்மாதகம. |
| ரி. சுகந்தன்,<br>பரி. தோமஸ் கனிஷ்ட பாடசாலை, கொள்ளுப்பிட்டி. | செல்வி எஸ். கோகில ஹர்ஷனி,<br>பெண்கள் உயர்தரப் பாடசாலை, கண்டி. |
| எ.ஃப். சதீனா,<br>சாஹிரா தேசிய பாடசாலை, மாவனெல்லை. | கே. ஷ.ஃப்ராஸ் மொஹமட்,<br>மஹவெலமுல்ல முஸ்லிம் வித்., வெள்ளவாய. |
| ஆர். சுரதிஸ்,<br>க/கலாபொக்க த. வித்தியாலயம், மடுல்கெல. | ப. ஜோன் டில்சன்,<br>அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,மட்/கோரகல்லிமடு. |
| ஜுட் பிரகாஷ்,<br>புனித சவேரியார் கல்லூரி, நுவர-எளிய. | ஏ. ஜெருன்னிஹா,<br>அல்/ப.ஃரியா மத்திய கல்லூரி, பாணந்துறை. |

## சுற்றுலாப் பயணிகள்



உலகிலேயே அதிகமான வெளிநாட்டுப் பயணிகள் சுற்றுலா போகும் நாடு எது தெரியுமா? ஸ்பெயின். இங்கு வருடத்திற்கு 4 கோடியே 20 இலட்சம் பேர் சுற்றுலா போகிறார்கள்.

இதற்கு அடுத்தபடியாகத்தான் ஃபிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி, ஒஸ்ரியா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளுக்குச் செல்கிறார்கள்.

ஸ்பெயின் நாட்டுக்குச் செல்கிறவர்கள் மத்தியதரைக் கடலின் கடற்கரையோரங்களுக்குப் போய் அங்குள்ள உல்லாச வாசஸ்தலங்களில் பொழுது போக்குகின்றனர்.

ஃபிரான்ஸ் நாட்டுக்குச் செல்பவர்கள் பெரும்பாலும் ஈபிள் கோபுரத்தைப் பார்க்காமல் திரும்பமாட்டார்கள். இங்கு வருடத்திற்கு 3 கோடிப்பேர் செல்கிறார்கள்.

அமெரிக்காவிற்கு வருடத்தில் 2 கோடியே 50 இலட்சம் பேர் செல்கின்றனர். இங்கு நியூயோர்க் நகரில் உள்ள சுதந்திரதேவி சிலை மற்றும் வோல்ட் டிஸ்னியின் அதிசய உலகத்திற்குப் போகிறவர்களுமே அதிகம்.


இத்தாலி நாட்டுக்கு 2 கோடிக்கும் கூடுதலான உல்லாசப் பயணிகள் போகின்றனர். ரோம் நகரில் உள்ள கொலோசியம் கேளிக்கை விடுதி மற்றும் பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் போன்றவை உலகின் முக்கியமான சுற்றுலாத் தலங்களாகும்.

ஒஸ்ரியா நாட்டுக்கு குளிர் காலத்தில் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் செல்கின்றனர்.

## வெள்ளி

- வெள்ளியானது தலை சிறந்த கிருமி நாசினி ஆகும். பத்துமில்லியன் பங்கு தண்ணீரில் ஒரு பங்கு வெள்ளியைக் கலந்தால், அந்தத் தண்ணீரில் உள்ள அத்தனை கிருமிகளும் அழிந்து விடும். வெள்ளியால் மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ தீங்கு ஏற்படுவதில்லை.
- இதன் காரணமாக வெள்ளி குளோரினை விட பத்து மடங்கு மேலானது.

## சீனப் பெருஞ் சுவரின் நிலை




உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரின் நீளம் மிகப் பிரபலமானது. விண்ணில் பறந்தபடி பூமியைப் பார்க்கும் போது, பூமியில் இருக்கும் சீனப் பெருஞ்சுவர் மட்டுமே தெரியுமாம்.



இந்தச் சீனப் பெருஞ்சுவரின் நிலை பற்றி சீன அரசு மிகவும் கவலையுடன் இருக்கிறது. காரணம்- அங்குள்ள மக்கள், தங்கள் வீட்டு உபயோகத்திற்காக சீனப் பெருஞ்சுவரில் உள்ள செங்கற்களை 120 கிலோ மீட்டர் நீளம் வரை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சென்று விட்டார்கள்.

## வேட்டை மனிதர்கள்

அம்பு, வில், ஈட்டி போன்ற ஆயுதங்களைக் கொண்டு வேட்டையாடும் பழக்கம் இன்று எல்லா நாடுகளிலுமே பெரும்பாலும் மறைந்துவிட்டது. ஆனால் இவற்றையே இன்னும் முக்கிய ஆயுதமாக வைத்து உணவை வேட்டையாடி உண்ணும் பழங்குடி மக்கள் இன்னும் சில நாடுகளில் உள்ளனர்.



அவுஸ்திரேலியாக் கண்டத்தில் ஆதிவாசி இனத்தவரும், அமெசன் நதிக்கரையில் வாழும் செவ்விந்திய அமெரிக்கப் பழங்குடி இனத்தவரும், மத்திய ஆபிரிக்காவில் வாழும் பிக்மி மற்றும் சூலு இனத்தவர்களும் தெற்கு ஆபிரிக்காவில் கலஹாரி பாலைவனத்தில் கும்பலாக வசிக் கும் புதர் மனிதர்களும் அம்பு, வில், ஈட்டி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி வேட்டையாடி தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள்.

இங்குள்ள ஆதிவாசியினர் பெரிய அளவில் வேட்டையாடி அதை அத்தனை குடும்பத்தவர்களும் பகிர்ந்து உண்ணுகிறார்கள்.

## அதிக நாடுகள்

உலகிலேயே அதிகமான நாடுகளைச் சுற்றுப்புறத்தில் கொண்ட நாடு சீனா. இதைச் சுற்றி 16 நாடுகள் உள்ளன. அவை வருமாறு:

ஆப்கானிஸ்தான், பூட்டான், ஹொங்கொங், இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், லாவோஸ், மக்காவ், மங்கோலியா, மியான்மர் (பர்மா), நேபாளம், வடகொரியா, பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், வியட்னாம்.

## முதல் இருதய மாற்றுச் சிகிச்சை

உலகின் முதல் இருதயமாற்று அறுவைச் சிகிச்சை 1967ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி நடத்தப்பட்டது. தென் ஆபிரிக்காவில் உள்ள கேப்டவுன் நகர ஆஸ்பத்திரியில் டாக்டர் பேர்னாட்ஸ் தலைமையில் 30 பேர் கொண்ட மருத்துவக் குழுவினர் இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தனர்.

ஒரு வாகன விபத்தில் உயிரிழந்த 25 வயதுப் பெண் ஒருவரின் ஆரோக்கியமான இருதயத்தை அகற்றி எடுத்து, 55வயது லூயிஸ் வாஸ்கான்ஸ்கீ என்பவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தினார்கள். 18 நாட்களுக்குப் பின்னர் நுரையீரலில் நோய்க் கிருமி தாக்கியதன் காரணமாக லூயிஸ் வாஸ்கான்ஸ்கீ இறந்து போனார்.

எனினும் இந்த இருதயமாற்று அறுவைச் சிகிச்சை தற்போது உலக நாடுகள் பலவற்றில் மிக வெற்றிகரமாக நடத்தப்படுகிறது.

# கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்




**சென்றவாரம்** காலேஜ்ரோடு பார்க்கிலிருந்து சயனோ-கார்பனுடன் புறப்பட்டு ஹாஸ்பிடல் வரும் மைத்ரேயி நங்கநல்லூர் அனுமார் கோயிலுக்குப் போய் விட்டு வருவதாக வையாபுரி மாமாவிடமும், அத்தையிடமும் பொய் சொல்கிறாள்.

இஞ்செக்ஷன் போட்டுக்கொண்டு ஆழ்ந்த தூக்கத்திலிருக்கும் தினேஷை தானிருந்து பார்த்துவிட்டு வருவதாகக் கூறி மாமாவையும், அத்தையையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டு இருக்க; இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் வருகிறார். அவர் கொண்டுவந்த 'ஸ்டேட் மெண்ட்ஸ்' இல் கையெழுத்துப் போட்டுவிட்டு அவர் சென்றவுடன் திட்டத்தை ஆரம்பிக்கிறாள்.

சரியாக ஒன்பதே முக்கால் மணிக்கு சயனோ-கார்பனை எடுத்து கட்டிலின் குறுக்குக் கம்பியில் கட்டிவிட்டு வீட்டுக்குச் செல்கிறாள்.

அங்கே உணவு எதுவும் சாப்பிடாமல், வையாபுரி மாமாவிடம் கதைத்து விட்டுப் படுக்கைக்குச் செல்கிறாள்.

மைத்ரேயிக்கு தூக்கம் பிடிக்கவில்லை. கொட்டக் கொட்ட விழித்தபடி படுக்கையில் சாய்ந்திருந்தாள். ஹால் கடிகாரம் அரைமணிக்கொரு தடவை பெண்டுலத்தை அடித்து ஒலி எழுப்பியது.

மணி ஒன்று அடித்தபோது ஹாலில் இருந்த டெலிஃபோன் அலறிக் கூப்பிட்டது.

திடும்மென்று எழுந்து உட்கார்ந்தாள்.

'போன் யாரிடமிருந்து...?'

'ஹாஸ்பிடலிலிருந்தா...?'

'இல்லை பாஸ்கரிடமிருந்தா...?'

அறைக்கதவைத் திறந்து கொண்டு போய் வேகவேகமாக டெலிஃபோனை நெருங்கி ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ...."

ஹாஸ்பிடலிலிருந்துதான். ஒரு நர்ஸ் பேசினாள்.

"மேடம்! நீங்க உடனே ஹாஸ்பிடலுக்குப் புறப்பட்டு வர முடியுமா..?"

"ஏன்... என்ன விஷயம்...?"

"வந்து... வந்து..."

"என்ன... அவருக்கு உடம்புக்கு ஏதாவது முடியலையா?"

"ஆமா... மூச்சுத் திணறல்... மைல்ட் ஹார்ட் அட்டாக் வேறு... டாக்டர் உங்களுக்கு உடனடியாக இன் ஃபார்ம் பண்ணச் சொன்னார்... புறப்பட்டு வர்றீங்களா?"

"இதோ..."

மைத்ரேயி ரிஸீவரை வைத்தாள். மனசுக்குள் சந்தோஷம் பட்டாம்பூச்சியாய்




மாறி பறந்தது. சயனோ-கார்பன் தன் வேலையைக் காட்டி விட்டது.

"ஃபோன் யார்கிட்டேயிருந்தும்மா...?" மாடிப் படிகளில் தூக்கக் கலக்கத்தோடு இறங்கி வந்த வையாபுரி கேட்டார்.

"ஹாஸ்பிடலிலிருந்து நர்ஸ் ஃபோன் பண்ணினா... அவருக்கு ஏதோ ஹார்ட் அட்டாக்காம்..."

வையாபுரி பதறிக்கொண்டு கீழே வந்தார்.

"சீரியஸா எதுவும் இல்லையே...?"

"அந்த நர்ஸ் சரியா பதில் சொல்லலை மாமா. ஹாஸ்பிடலுக்குப் போய்ப் பார்த்தாத்தான் உண்மை நிலவரம் தெரியும்."

"நீ போய் காரை எடு... நான் அத்தையை எழுப்பிட்டு வர்றேன்!"

மறுபடியும் மாடிக்கு ஓடினார் வையாபுரி.

★★★

அந்த நள்ளிரவு நேரத்தில் காரை விரட்டிக் கொண்டு ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்தபோது ஒன்று முப்பது மணி. காரிலிருந்து இறங்கி-வராந்தாவில் மூன்று பேரும் ஓடினார்கள். நர்ஸ் எதிர்ப் பட்டாள்.

"ஐ.ஸி.யூனிட்டுக்குப் போங்க..."

"அவருக்கு இப்போ எப்படியிருக்கு?"

"வெரி சீரியஸ்.... டாக்டர்ஸ் உள்ளே ட்ரீட்மெண்ட் குடுத்துட்டு இருக்காங்க..."

பதற்றமாய் ஐ.ஸி.யூனிட்டுக்குப் போனார்கள். யூனிட்டுக்குள் டாக்டர்கள் இருப்பதற்கு அறிகுறியாய் கதவின் நெற்றியில் பொருத்தப்பட்டிருந்த சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மைத்ரேயி செயற்கை கவலையோடு அங்கேயிருந்த பெஞ்சில் உட்கார, வையாபுரியின் மனைவி அழ ஆரம்பித்து விட்டாள்.

"என்னங்க இது அநியாயம்.. ராத்திரி போகும் போது தினேஷ் நல்லாயிருந்தானே...?"

"தைரியமாயிரு... தினேஷ்க்கு ஒண்ணும் ஆகாது!" வையாபுரி மனைவிக்கு ஆறுதல் சொன்னாலும் அவரும் கலங்கித்தான் போயிருந்தார்.

அரைமணி நேர காத்திருப்புக்குப் பின், ஐ.ஸி.யூனிட் கதவு மெல்லத் திறந்தது. டாக்டரின் முகம் கொஞ்சமாய் எட்டிப்பார்த்து மைத்ரேயியை மட்டும் கூப்பிட்டது.

"மிஸஸ்- மைத்ரேயி! நீங்க மட்டும் உள்ளே வாங்க!" போனாள்.

கதவு அவளை மட்டும் உள்ளே வாங்கிக் கொண்டு மூடிக்கொண்டது. டாக்டர்கள் இரண்டு பேர் மரக்கட்டையாய் படுத்துக் கிடந்த தினேஷ்க்கு தீவிர சிகிச்சை கொடுத்துக் கொண்டிருக்க,

சீஃப் டாக்டர் மைத்ரேயியை ஏறிட்டார்.

"ஸாரி டு ஸேதிஸ் மிஸஸ்- மைத்ரேயி. உங்க கணவர் இறந்துட்டார். செயற்கை முறையில இப்போ சுவாசம் கொடுத்துட்டிருக்கோம். இதையும் ரொம்ப நேரத்துக்கு கொடுத்துட்டிருக்க முடியாது."

மனசுக்குள் ஒரு தீபாவளி சந்தோஷம் இருந்தாலும்,அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் கண்களில் போலி அதிர்ச்சியை வெளிப்படுத்தி சுவருக்கு சாய்ந்து முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

டாக்டர் புன்னகையோடு அவளுடைய தோளைத் தொட்டார்.

"மிஸஸ். மைத்ரேயி...!"

அவள் நிமிர்ந்தாள்.

"உங்க கணவருக்கு திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்ததுக்கு காரணம் அவரோட அறைக்குள்ள வைக்கப்பட்டிருந்த ஒரு ரசாயனப் பொருள்தான்!"

மைத்ரேயி திடுக்கிட்டாள்.

"இரசாயனப் பொருளா?"

"எஸ்.. அது ஒருவகை இன்விஸிபில் ஸ்மோக்கி பாய்ஸன். அதை யாரோ அவர் ரூம்ல வெச்சுட்டுப் போயிருக்காங்க."

"யா... யார்...?"

"அதை நீங்கதான் சொல்லணும்..."

"நானா...?"

"எஸ்... நீங்க தான்...!"

அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு போலிக் கோபம் காட்டினாள் மைத்ரேயி.

"எ... எனக்கெப்படி தெரியும்...?"

டாக்டர் இப்போது பெரிதாய் புன்னகைத்தார்.

"இனிமே நேரிடையாகவே நான் விஷயத்துக்கு வந்துடறேன். நேத்து ராத்திரிக் கட்டிலோட குறுக்குக் கம்பியில் இந்த இரசாயனப் பொருளைக் கட்டிவிட்டது நீங்க தானே...?" கையில் வைத்திருந்த ஒரு சின்ன பாட்டிலை உயர்த்திக் காட்டினார் டாக்டர்.

பாட்டிலுக்கு உள்ளே பாஸ்கர் கொடுத்து விட்ட சயனோ-கார்பன் கரையாமல் முழுதாய் அப்படியே இருந்தது.

மைத்ரேயின் முகம் வியர்த்து பிசுபிசுத்தது.

"இ... இது.. இது?"

டாக்டர் சிரித்தார். "காத்துல கரைஞ்சு உங்க கணவரோட உயிரைப் பறிக்கறதுக்கு முந்தியே இது எங்க பார்வைக்கு கிடைச்சுடுச்சு..."

மைத்ரேயி உறைந்து போய் நின்றிருக்க- இப்போது ஐ.ஸி.யூனிட்டின் பக்கவாட்டு கதவு மெல்லத் திறந்தது.

இன்ஸ்பெக்டர் ஒருவர் வெளிப்பட்டார். பார்த்த பார்வையில் விஷமச்சிரிப்பு ஒட்டியிருந்தது.

"மேடம்..! என்னை உங்களுக்குத் தெரியாது. நேத்து சாயந்தரம் உங்க ஃபாக்டரிக்கு... காணாமல் போன பட்டாபியைப் பத்தி விசாரிக்கறதுக்காக வந்தேன்... உங்க ஃபாக்டரி மனேஜரை மட்டும் பார்த்தேன். சரி இப்போ விஷயத்துக்கு வருவோம்.... நேத்து ராத்திரி உங்க கார்ல விஷம் குடிச்ச சீரியஸான நிலைமையில இருந்த ஒரு பெண்ணை ஜி.ஹெச்சுக்கு கொண்டு போனீங்க... இல்லையா...?"

மைத்ரேயி அதிர்ந்தாள். தலை தன்னிச்சையாய் ஆடியது.

"ஆ... ஆமா..."

"அந்த சமயத்துல கார்ல உங்ககூட இருந்தவர் யார்ன்னு சொல்ல முடியுமா?"

"அது... வந்து...."

"ம்... சொல்லுங்க..."

"தெ... தெரிஞ்சவர்"

"தெரிஞ்சவர்னா.... யாரு...?"

மைத்ரேயி வியர்த்துக் கொண்டு மௌனமாய் இருக்க ஐ.ஸி.யூனிட்டின் பக்கவாட்டுக் கதவு மறுபடியும் ஒருதடவை திறந்தது.

பெரிய அதிர்ச்சிக்கு உட்பட்டாள் மைத்ரேயி.

ஒரு கான்ஸ்டபிளோடு தலை குனிந்தபடி பாஸ்கர் வெளிப்பட்டான். கான்ஸ்டபிள் மைத்ரேயியை நெருங்கினார்.

"அம்மா! என்னை உங்களுக்குத் தெரியுதா?" மைத்ரேயி விழிக்க கான்ஸ்டபிள் தொடர்ந்தார்.

"அம்மா! விஷம் குடிச்சுச் சீரியஸான நிலைமையில் இருந்த ஒரு பெண்ணை ஹஸ்பிடலுக்கு கூட்டிக்கொண்டு வந்தீங்க. அப்போ வேறு ஒரு தற்கொலை கேஸ் விஷயமா நான் ஹாஸ்பிடல் வாசல்ல இருந்தேன். உங்களை அந்த சமயத்துல விசாரணை பண்ணினது நான்தான்."

கான்ஸ்டபிள் பேச்சை நிறுத்த இன்ஸ்பெக்டர் இப்போது குறுக்கிட்டுப் பேசினார்.

"பட்டாபி காணாமே போனது சம்பந்தமா என்கொய்ரி பண்ண என்கூட உங்க ஃபாக்டரிக்கு இந்த கான்ஸ்டபிளும் வந்தார். வந்தவர் அங்கே இருந்த உங்க காரைப் பார்த்துட்டு அந்தக் கார் நேத்து ராத்திரி ஜி.ஹெச். வந்ததாகவும் காரில் இருந்த இளைஞன் பேர் பாஸ்கர்ன்னும் காரை ஓட்டிட்டு வந்த பெண் மைத்ரேயின்னும் சொன்னார். எனக்கு லேசா பொறி தட்டிச்சு.

இங்கே வேலை செய்யற லேபர் பட்டாபியைக் காணோம்னு புகார் வந்திருக்கற நேரத்தில் மைத்ரேயியும், பாஸ்கர் என்கிற ஒரு நபரும் நள்ளிரவு நேரத்துல கார் பயணத்தை எதுக்காக மேற் கொண்டாங்கன்னு யோசிச்சேன். ஏதோ தப்புக் காரியம் நடந்திருக்கும்ங்கிற எண்ணத்துல கான்ஸ்டபிளை மஃபிடியில் ஒரு பைக் மூலமா உங்களை ஃபாலோ மண்ண வெச்சேன்.

காலேஜ் ரோடு சாலையோர பூங்காவில் நீங்க பாஸ்கரை சந்திச்சுப் பேசியதும், ஒரு சின்ன பாட்டிலை பாஸ்கர் கிட்டேயிருந்து வாங்கினதும், அப்பப்ப செல்லுலார் ஃபோன் மூலமா எனக்கு தகவல் வந்தது. நான் உடனே ஹாஸ்பிடலுக்கு வந்தா க்ளோஸா பாலோ பண்ணச் சொல்லியிருந்தேன். அவங்களும் உங்க மேலே சந்தேகப் படாதபடி நடவடிக்கையை ஆரம்பிச்சாங்க.

அதே சமயத்துல கான்ஸ்டபிள் பாஸ்கரை ஃபாலோ பண்ணி மடக்கி ஸ்டேஷனுக்கு கொண்டு வந்தார். பாஸ்கரை லாக்கப்பல வெச்சு விசாரிச்சோம். மொதல்ல எதுவுமே சொல்ல மறுத்தார். அதுக்கப்புறம் பொலிஸ் சிகிச்சையை ஆரம்பிச்சோம். உண்மை வெளியே வந்தது. ஹாஸ்பிடலிலும் நீங்க வெச்சுட்டுப் போன சயனோ-கார்பனை டாக்டர்ஸ் ரிமூவ் பண்ணி தினேஷை ஐ.ஸி.யூனிட்டுக்குக் கொண்டு வந்துட்டாங்க. உண்மையில் தினேஷ்க்கு உடம்பில் எந்தப் பிரச்சனையும் இல்லை. இப்போதும் அவர் நல்லாத் தூங்கிக்கிட்டிருக்கார். நீங்க அவருக்குப் பண்ணின துரோகமோ, நாங்க உங்களை மடக்கினதோ அவருக்குத் தெரியாது. நாளைக்கு அவர் கண் விழிக்கும் போது தான் உண்மைகள் தெரியும்..."

மைத்ரேயின் பார்வை கண்ணீர் நனைந்த கண்களோடு தினேஷ் படுத்திருந்த கட்டிலை நோக்கி தயக்கமாய் போயிற்று.

தினேஷ் ஒரு குழந்தையைப் போல தூங்கிக் கொண்டிருந்தான்.

'நாளைக்குக் காலை விஷயம் தெரியும் போது- நான் அவர் பார்வைக்குக் குப்பைக் காகிதமாய் தெரிவேன்.'

மைத்ரேயின் மனம் கனத்தது. இன்ஸ்பெக்டர் அவளுடைய காதருகே குனிந்தார்.

"மற்றதை பொலிஸ் ஸ்டேஷனில் போய் பேசிக்கலாமா மேடம்...?"

—முற்றும்—


## வரும் வாரக் கலக்கல் என்ன?

வாரா வாரம்
சஸ்பென்ஸ் தந்து
பரபரப்பூட்டியது
**உடைந்த இரவு!**

**அடுத்த தொடர் என்ன?**

அதுதானே உங்கள் கேள்வி!

முரசு தரும் தொடர்கள்
கலக்காமல் போகுமா?!

அடுத்த வாரம் அட்டகாசமான தொடர் ஆரம்பம்!

ஒரு வாரம் பொறுத்திருங்கள்



அதுவரை சஸ்பென்ஸ்... சஸ்பென்ஸ்... சஸ்பென்ஸ்...


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஆர். ஜீவன்,
வயது: 27
முகவரி: 274, பி/2, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஏ. யோகராணி,
வயது: 21
முகவரி: புதுக்குடியிருப்பு, தம்பலகாமம்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எல். செந்தூர் செல்வன்,
வயது: 24
முகவரி: FURTHER STR-57, 28215 BREMEN, GERMANY.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா.



பெயர்: எம். நவாஸ்,
வயது: 21
முகவரி: மத்திய முகாம், அம்பாறை.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: என். நஸீமா,
வயது: 23
முகவரி: 103/2, ஆமர் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். நிஸார்,
வயது: 24
முகவரி: YOON JI YANG HENG 31-1, MANGPO-DONG PALDAL-GU-SUWON-SI KYUNKI-DO, SOUTH KOREA.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். முகமது ஹிஸாம்,
வயது: 20
முகவரி: ஜவுசன் பள்ளி வீதி, 23/1, 5ம் குறுக்கு, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: பதுர்தீன் பாரூக்,
வயது: 19
முகவரி: கம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: பத்தரிகை, பேனா நட்பு.

பெயர்: எஸ். பத்திநாதன்,
வயது: 24
முகவரி: 9, டாம் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். ரமீஸ்,
வயது: 21
முகவரி: 25, ஹனீபா ஹாஜியார் லேன், காத்தான்குடி-4.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஜி. டேவிட்,
வயது: 27
முகவரி: BLOCK-3 MEIHWAN VIEW, GOLD HILL ROAD, 04-04.SINGAPORE-568290.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஆர். பத்மசீலன்,
வயது: 29
முகவரி: ரமேஸ்புரம், செங்கலடி.
பொழுது போக்கு: பாடல்கள், பத்திரிகை.

# மேக்கப் புன்னகை



(4)

பட்டுக்கோட்டை பிரபாகர்

"கீழே கேழ்வியக் கேட்டு காழைழேந்து பழிழைந்து ஃபோன் வந்துட்ச்சா" என்றார் ஈஸ்வர்.

"ஒரு எழவும் புரியலை. முதல்ல துப்பிட்டு வந்து பேசுங்க" என்றாள் துர்க்கா சோபாவில் அமர்ந்தபடி.

ஈஸ்வர் அந்த உத்தரவைச் செயற்படுத்த மூலை வாஷ் பேசினுக்குப் போய்த் திரும்பினார்.

மறுபடி ஒலித்த ஃபோனைக் காட்டி, "இது பதினாறாவது ஃபோன். மதுமிதா கல்யாணம் பண்ணிக்கப் போறாங்களாமே, அப்படியா? எல்லா ஃபோன்லேயும் இதே கேள்விதான். நான் பேசட்டுமா, நீ பேசறியா?" ரிசீவரை எடுக்கப் போன அவரைக் கையமர்த்தி துர்காக எடுத்தாள்.

"ஹலோ" என்றாள்.

"வாட் மம்மி? நான்சென்ஸ் இஸ் கோயின் ஆன்....?"

"என்ன இனியா, சொல்லு?"

"என்னாச்சு அக்காவுக்கு? ஷூட்டிங்ல நாய் எதுவும் கடிச்சிடுச்சா? டாக்டர் கிட்டே அழைச்சுக்கிட்டுப் போயி தொப்புளைச் சுத்தி ஊசி போடு மம்மி... கிடந்து இப்படி குரைக்கிறாளே!"

"என்ன சொன்னா?"

"என் படிப்பை நிறுத்தப் போறாளாம். சுவிட்சு போட்டா எரியறத்துக்கும், அணைஞ்சுக் கறத்துக்கும் என்னை என்ன டியூப்லைட்னு நினைச்சாளா? மனுஷிம்மா நானு! ரெண்டு கையி, ரெண்டு காலோட சேர்த்து ஒரு மூளையும் கொடுத்திருக்கான் யோசிக்கிறத்துக்கு. தெரியும் இல்லை?"

"இப்ப எதுக்கு திடீர்னு உன் படிப்பை நிறுத்தணும்?"

"உனக்கு காரணம் தெரிஞ்சிருக்குமோன்னுதான் உன்னைக் கூப்பிட்டேன். உனக்கு விஷயமே தெரியாதா?"

"இப்பல்லாம் எந்த விஷயத்துக்கும் என்னைக் கலந்து ஆலோசிக்கிறதே இல்லைன்னு வெச்சிருக்கா உங்கக்கா."

"அதுக்கெல்லாம் கொஞ்சம் நன்றி விசுவாசம் இருக்கணும் மம்மி. நீ ஃபோன் பண்ணி, எத்தனை படக்கம்பனி ஏறி இறங்கி, அவளை இண்டஸ்ட்ரில நுழைச்சி விட்டேன்னு எனக்கு இருக்கிற அளவுக்கு அவளுக்கு ஞாபகம் இல்லாமல் போச்சே. நைட் என்னை வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கா"

"எதுக்கு?"

"ஃபோன்ல சொன்ன ஒரு வரித் தீர்ப்புக்கு ஒரு மணி நேரம் விளக்கம் சொல்வா. கோர்ட் சீன் மாதிரி பாய்ண்ட் பாய்ண்ட்டா சொல்வா... நான் குற்றவாளிக் கூண்டுல நிக்கிற விசாரணைக் கைதி மாதிரி கைகட்டி நிக்கணும். ஏதாச்சும் விளக்கம் சொல்ல வாயெடுத்தாலும் 'உஷ்! கேட்ட கேள்விக்கு பதில்!' அப்படின்னு மிரட்டுவா! உதவிக்கு நீயும் வரமாட்டே! ஈஸ்வர் சித்தப்பாவும் வரமாட்டாரு! ரெண்ணு பேரும் டவாலி மாதிரி நிப்பீங்க."

"எங்கிட்ட இவ்வளவு பேசற நீ, அவ சொன்னப்ப ஏன் வாயை மூடிக்கிட்டு இருந்த? எதுக்காக நான் படிப்பை நிறுத்தணும்னு கேக்க வேண்டியதுதானே? வாயில் என்ன பபிள்கம் இருந்திச்சா?"

"என்னை எங்க பேச விட்டா? ஜஸ்ட் எ டெலிகிராஃபிக் கன்வர்சேஷன். மம்மி, சொல்லிட்டேன். அவ இஷ்டத்துக்கு நீங்க ரெண்டு பேரும் வேணும்னா தலையை ஆட்டிக்கிட்டு இருங்க. நான் இனிமே அவ பேச்சை கேட்டுக்கிறதா இல்லை. என்ன, வீட்டை விட்டு வெளில போகச் சொல்லுவாளா? போய்க்கிறேன்."

"ஏன் இனியா இப்படியெல்லாம் பேசறே! நீ உன் சொந்தக்கால்ல நிக்கற வரைக்கும் அவளை அனுசரிச்சுத்தான் போயாகணும்."

"டேம் இட்! தெரு முனையில் கம்பி கட்டி நடந்து வித்தை காட்டி பொழைப்பேன்னு நினைச்சியா? விஷ்வா நூறு தடவை கெஞ்சிக் கெஞ்சிக் கூப்பிட்டான் தெரியுமா? நான்தான் பிடிவாதமா மறுத்துக்கிட்டு இருக்கேன்!"

"யாரு விஷ்வா? எதுக்குக் கூப்புடுறான்?"

"எல்லாரையும் மறந்துடுவியே! என் பர்த்-டே அன்னிக்கு அட்வர்டைஸ்மெண்ட் ஏஜென்சி நடத்தறான்னு ஒரு ஃபிரண்டை இண்ட்ரட்யூஸ் பண்ணினேன். விரல்ல கூட 'வி' இன்ஷியல்ல வைர மோதிரம் போட்டிருந்தானே?"

"கெச்சலா, ஃபிரன்ச் தாடி வெச்சிட்டிருந்தானே, அவனா?"

"அய்யோ! அது ப்ரேம் சந்த்! சரி விடு! அந்த விஷ்வா என்னை மாடலிங் பண்ணு பேபின்னு ஒரே தொந்தரவு! கூப்பிட்டு யெஸ்னு ஒரு வார்த்தை சொன்னாப் போதும்.... ஈபிள் டவர் உயரத்துக்கு என்னை எங்கேயோ கொண்டு போய்டுவான். மாடலிங் பண்ணட்டுமா? சொல்லு!"

"எங்கிட்ட ஏண்டி பாய்றே? நானா உன்னைப் படிப்பை நிறுத்தச் சொன்னேன். ராத்திரி வரச் சொல்லியிருக்கா இல்லே, வந்து அவகிட்டே பேசு!"

"வர்றேன் பேசறேன். அப்ப நான் சொன்ன இந்த பாய்ண்ட்ஸ் எல்லாம் மறந்து போச்சுன்னா நீ எடுத்துக்கொடு! எட்டு மணிக்கு வர்றேன். என்ன டின்னர் இன்னைக்கு வீட்ல?"

"நீ அங்கேயே சாப்டுட்டு ஒம்போது மணிக்கு வா... நாங்க எல்லோரும் ஒரு ஆர்ட்டிஸ்ட்டோட கல்யாண ரிசப்ஷனுக்குப் போறோம்."

"அக்காவுமா?"

"ஆமாம்."

"சரி, இதென்ன புதுசா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு பேட்டி கொடுத்திருக்கா? பப்ளிசிடி டல்லடிக்குதா என்ன?"

"எனக்கும் ஒண்ணும் புரியலைம்மா. பத்திரிகைக்காரங்க ஃபோனுக்கு மேல ஃபோனா கேட்டுத் துளைக்கிறாங்க. பதில் சொல்லி மாளலை. அதைப் பத்தியும் இன்னைக்கு அவகிட்ட பேசியாகணும். நேர்ல பேசிக்கலாம், வெச்சிடவா?"

"ஒண்ணே ஒண்ணு சொல்லிடறேன். கேட்டுட்டு வையி"

"என்ன?"

"எனக்கு வயசு பதினெட்டு தாண்டியாச்சு...?"

"அதுக்கென்ன?"

"சட்டப்படியும் நான் மேஜர்."

"எதுக்கு இப்போ சட்டம், கிட்டம்னு பேசிக்கிட்டு?"

"அவசியப்பட்டா ராத்திரி இதுக்கு மேலயும் பேசுவேன். அப்ப உனக்கு திக்குன்னு இருக்கக்கூடாதேன்னுதான் இப்பவே தயார்ப்படுத்தறேன், வெச்சிடு."

பெருமூச்சுடன் வைத்தாள் துர்க்கா.

"என்னவாம்?" என்றார் ஈஸ்வர். வெள்ளி டம்ளர்கள் இரண்டை மெல்லிசான காகிதத்தில் சுற்றி அட்டைப் பெட்டியில் வைத்து, அதை பூக்காகிதம் போட்டுச் சுற்றி சலஃபன் கட் செய்து ஒட்டியபடி...

"திடீர்னு சின்னவ படிப்பை நிறுத்தப் பேறேன்னு குதிச்சாளாம்."

"இங்கிலீஷ்ல ஒரு பழமொழி இருக்கு."

"பரவாயில்லை, தமிழ்லே சொல்லுங்க."

"நமக்கு ரொம்ப பிடிச்ச ஒரு விஷயமே, ஒரு எல்லையில வெறுப்பா மாற ஆரம்பிச்சுடுமாம்."

"அந்த மாதிரி?"

"மதுவுக்கு மூஞ்சில பான்கேக் பூசிப்பூசி அலுத்துப் போயி, மஞ்சள் பூசிக்கலாம்னு ஆசை வந்துடுச்சோ?"

"முட்டாள்தனமா மாத்திச் சொல்றீங்க. மஞ்சள் பூசிக்கணும்னு ஆசை வந்ததால பான்கேக் மேல வெறுப்பு வந்திருக்குங்க!"

"சரி செட்டில் ஆயிட்டுப் போறா, விட்டுடுவமே!"

"பேத்தாதிங்க! படம் பாதில நிக்கிது. அடுத்த வாரம் காரைக்குடில எடுக்கப்போற சாங்குக்கு மட்டும் எழுநூறு ஜுனியர் ஆர்ட்டிஸ்ட்ஸ் கேட்ருக்காரு டைரக்டர். உரலுக்குத் தலையைக் கொடுத்துட்டு இடி வாங்கிட்டு இருக்கேன். ஏழு படம் ஹிட் கொடுத்தவனாச்சேன்னு கதையும் கேக்காம, ஒண்ணும் கேக்காம புக் பண்ணித் தொலைச்சுட்டேன். ஹீரோ ஒரு தும்மல் போடறதுக்குக் கூட அத சிவகெங்கைக்கு நாற்பது கிலோ மீட்டர் தள்ளி லொக்கேஷன் பிடிக்கிறாரு. இந்தப் பாட்டுக்கு மட்டும் பட்ஜெட் பதினாலு லட்சம் ஆகுது தெரியுமில்லே? இவ பாட்டுக்கு கல்யாணம் கச்சேரின்னு செட்டில் ஆய்ட்டான்னா சிமன்லாலுக்கு யாரு செட்டில் பண்றது? பெட்டியைத் தூக்கிட்டு பிளாட்பாரத்துக்குப் போய் போஸ்டர் ஒட்டிப் பிழைச்சுக்கலாமா? அப்படி எதுவும் அபிப்பிராயம் இருக்கா?"

ஈஸ்வர் பேக் செய்து முடித்த பரிசுப் பார்சலின் மேல் அமைதியாகத் தாளம் போட்டார்.

"என்ன பேச்சையே காணோம்?"

"நான் எதுவும் சொல்லலை. எங்கிட்டே எகிறுவே நீ."

"சும்மா சொல்லுங்க. தொண்டை வரைக்கும் வெச்சிருக்கிறதைத் துப்பிடுங்க!"

"படம் தயாரிக்கிற வேலை எல்லாம் நமக்கு வேணாம்மான்னு மதுமிதா நூறு தடவையாவது சொல்லிச்சு. நாம கேட்டமா?"

"படம் முடியட்டும். அவுட்ரைட்ல வித்து ஒரே சமயத்தில ரெண்டு கோடி ரூபாயை அவ முன்னாடி கொண்டாந்து அடுக்கறேன். அப்ப தெரியும் என் சாமர்த்தியம். பணம் சம்பாரிக்கிறதுன்னா சும்மாவா? சிரமப்பட்டுத்தான் ஆகணும். விதை போடாமலே செடி முளைக்க வைக்க முடியுமா என்ன?"

"அப்புறம் ஏன் அலுத்துக்கறே?"

"அநாவசியமா செலவாகுதேன்னு கோபம் வருது. கோபப்பட வேண்டிய விஷயத்துக்கு கோபப்படலேன்னா உப்பு போட்டு சோறு திங்கிறதுக்கு அர்த்தமே இல்லைங்க."

"நான் எதுக்குச் சொல்றேன்னா?"

"கார்ச் சத்தம் கேக்குது, வாயை மூடுங்க முதல்ல!"

சுமதி தொடர மதுமிதா வந்ததும் உஷ்ண அலை மாறி, தென்றலாக துர்க்கா சிரித்தாள்.

"என்ன மதுமிதா இப்படி வேர்த்திருக்கு? ஏண்டி சுமதி, வண்டியில ஏ.சி. போடச் சொல்லலையா?"

"நான் குளிச்சிட்டு டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன். ரிசப்ஷனுக்கு டயமாச்சாம்மா?"

மாடிப்படி ஏறிக்கொண்டே, துள்ளி வந்த புசுபுசு நாயைத் தூக்கித் தடவிக் கொண்டே கேட்டாள் மதுமிதா.

"நீ மெதுவா வாம்மா கண்ணு. நாம போறதே அவளுக்குக் கௌரவம்தான்," என்றாள் துர்க்கா.

★★

ரிசப்ஷனில் கார்கள் வழிந்தன. பார்க் செய்ய பதினைந்து நிமிடங்களாயின.

"ஐ மதுமதா! மதுமிதாடா!" என்று உற்சாக, இரகசிய குரல்கள் ஆங்காங்கே. ஊடுருவி தலைகள் இவள் திசையில்



திரும்பின. விடியோ கிராஃபர்கள் ஓடி வந்தார்கள். ஒரு மாமா... பரபரப்பில் நாற்காலியில் தடுக்கி விழுந்தார். ஆங்காங்கே டி.வி.க்களில் மதுமிதா கூந்தல் கற்றையை ஒதுக்கிபடி மேடை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

மணப்பெண் கையில் பார்சலைத் திணித்து ஃபோட்டோவுக்கு நின்ற போது, இருபது ஃபிளாஷ்கள் மின்னின.

"சாப்டுட்டுத்தான் போகணும் மது."

"கண்டிப்பா"

"சுபாஷ் வந்திருக்கார்."

"எங்க?"

மணப்பெண் சுட்டிக்காட்டிய திசையில் சுபாஷ் தன்னைச் சுற்றி நீட்டப்பட்ட ஆட்டோகிராஃப் நோட்டுக்கள், திருமண வாழ்த்து அட்டைகள், ரூபாய் நோட்டுக்கள் பஸ் டிக்கெட்டுக்களில் பொறுமையாக கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்க, மதுமிதா புன்னகையுடன் அவன் திசையில் நடந்தாள்.

(தொடரும்)

---

# வெறுமைகள்

கனகசபை தேவகடாட்சம்

முன்சென்று கொண்டிருந்த தங்கலெட்சுமியைக் காணவில்லை. சன நெரிசலில் மறைந்த இடம் தோன்றவில்லை.

வழக்கம் போல விடியலுக்கு முன்னதாகவே விழித்துக்கொண்டாலும், முன் தினம் செய்த அந்த 'கொங்கிறீற்' வேலையின் தாக்கம் சிற்றம்பலத்தை படுக்கையை விட்டு எழும்பவிடாது அயர்த்திக் கொண்டு இருந்தது. மெதுவாக தலையணைக்குக் கீழ் கையை விட்டு தீப் பெட்டியை எடுத்து, தலைமாட்டில் இருந்த குப்பி விளக்கை ஏற்றி, 'யாமிருக்குப் பயமேன்' என்று வேலுடன் அபயமளிக்கும் முருகன் படக் கலண்டரை முன்னோக்கி, கண்மூடி, வணங்கிவிட்டு நிமிர்ந்தான் சிற்றம்பலம்.

'ஆவணி பதினெட்டு' என விளக்கு வெளிச்சத்தில் துல்லியமாய் தெரிந்தது! அதாவது! இளமை இன்னும் அவரில் வாழ்கிறது! 'ஆவணி உத்திரம் இன்று. வெருகல் கோயில் கொடியேற்ற நாள்' என மனதிற்குள் எண்ணிய எண்ணங்களின் சுமை நீண்ட பெருமூச்சாக வெளிவந்தது.

"என்னத்தை நெனச்சி பெருமூச்சு விடுறீங்க?" என்றவாறு அவர் மனைவி தங்கலட்சுமி தண்ணீர் செம்பையும், தேனீர் கோப்பையையும் தலையணை ஓரமாக வைத்துவிட்டு நிமிர முற்படும் போது அவளது வலக்கரத்தைப் பற்றி, மெதுவாக இழுத்தார் சிற்றம்பலம்.

"சீ... வயசுப் புள்ளையள் எல்லாம் உள்ளுக்க கிடக்குதுகள். உங்களுக்கு வயசு போயும்..." என்ற இயல்பான நாணத்தோடு, விருப்பின்றி விடுபட்டுச் சென்றாள் அவர் மனைவி.

'அட மண்டே! உன்ர கையை பிடிச்சதை... அப்பிடி நெனச்சிட்டியே?' என மனதிற்குள் எண்ணிக் கொண்ட சிற்றம்பலத்தின் சிந்தனைகள் இறக்கை கட்டிப் பறந்தன. வெருகல் கோயில் கொடியேறி திருவிழா ஆரம்பித்துவிட்டது. அப்பகுதி 'விடலை'களின் காதலும், கல்யாணமும் நிச்சயமாவது அப்போதுதான்.

"இனியும் தாமதிக்கக்கூடாது. 'வண்டில் பூட்டிற' காளை வயசு வந்திட்டு! இந்த முறை திருவிழாவில ஒரு முடி வெடுத்துப் போடு." பவ்வியமாக சிற்றம்பலத்திற்கு ஊதினான் உயிர் நண்பன் மூர்த்தி.

திருவிழா சனவெள்ளத்தால் களை கட்டிக் கொண்டிருந்தது. கடை வியாபாரிகளின் ஓசையும், கோவில் ஒலி பெருக்கியின் ஓசையும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன.

சிற்றம்பலமும், மூர்த்தியும், ஆலய வீதியில் தங்கலெட்சுமி போகும் பாதையை பின் தொடர்ந்தவண்ணம் இருந்தனர். 'இன்று எப்படியாவது காதலை தங்கலெட்சுமியிடம் வெளிப்படுத்தியாக வேண்டும்' என்று சிற்றம்பலத்தின் உறுதியான எண்ணத்திற்கு துணை சென்று கொண்டிருந்தான் மூர்த்தி.

முன் சென்று கொண்டிருந்த தங்கலெட்சுமியைக் காணவில்லை. சன நெரிசலில் மறைந்தவிடம் தோன்றவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தார்கள் சிற்றம்பலமும் மூர்த்தியும்.

"இந்தா நிக்குது" சுட்டிக்காட்டினான் மூர்த்தி. வீதி ஓரமாக... தங்கலெட்சுமியின் கையை ஒருவன் பிடித்துக் கொண்டு "மெதுவாக... மெதுவாக... எப்படியிருக்கிறது?" என்று கேட்க கொடுப்புப் புன்னகையை உதிர்த்தவாறு நின்று கொண்டிருந்தாள் அவள். போதாக் குறைக்கு மறுகரத்தையும் தொட்டு விளையாடினான் அவன். இப்போது தங்கலெட்சுமிக்குப் பரம திருப்தி.



வேகமாகச் சென்ற சிற்றம்பலம் நூறு ரூபாய் தாளை நீட்டினான். "அந்த காப்புக் காசை இதில எடுங்க"- முந்திக்கொண்டான். நாணத்தை போர்வையாக்கி, சிற்றம்பலத்தை நோக்கிய தங்கலெட்சுமியின் அந்த சிங்காரச் சிரிப்பின் அர்த்தம் 'காப்புக் கடைக்காரனுக்குக்கூட விளங்கிவிட்டது.

இன்னும் என்ன தேத்தண்ணி குடிக்கல்லையா?" என்ற தங்கலெட்சுமியின் குரல், சிற்றம்பலத்தின் சிந்தனைச் சிறகுகளை ஒடித்தது. மடை திறந்த வெள்ளம் போல் அவர் கண்களால் கண்ணீர் வழிந்தது.

"இஞ்சேர்! ஒண்ட கைக்கு இப்ப ஒரு ரப்பர் காப்புத்தானும் வாங்கிப் போட வழியத்தவனாகிட்டன். இந்த யுத்தமும் அகதி வாழ்வும் நம்மள விட்டு தொலையப் போறதே இல்ல!"

தன் கணவர் கண்களை சேலைத் தலைப்பால் துடைத்துவிட்ட தங்கலெட்சுமி, அந்த முருகன் படத்தையும் ஆவணி உத்திரத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். அதில் ஆயிரம் எதிர்பார்ப்புகள் அடைந்து கிடந்தன. ■

மார்கழிப்பனி போர்வை விரித்திருந்தது. பேராதனைப் பூங்கா குளிர் சுமந்து எழில் சிந்திக் கொண்டிருந்தது.

பூக்களை மேயும் விழிகள்.

மனிதப்பூக்களை மேயும் விழிகள் இயற்கையின் மடியில் இதயத்தைக் கிடத்தும் உள்ளங்கள்... இப்படி..... இப்படி... எத்தனை... எத்தனை...!

# தன்வினை

## ஒரு பூவுக்கு தீ வைத்தவனுக்கு— ஒரு நிலவுக்கு வெடி வைத்தவனுக்கு எப்படி உறக்கம் வரும்?

நிரோசா!

இந்தமலர், மலர்வனத்தில் காத்திருந்தது.

அவளின் இதயத்தின் மீதிக்காக விழிகளை விலக்கி வைத்திருந்தாள்.

நினைவுகளால் உதிர்ந்த நிகழ்வுகளைத் தைத்துக் கொண்டிருந்தாள்.

'ஜெஸ்மின் கொலேஜ்' தனியார் கல்லூரி. அங்குதான் நிரோ மலர் அடிக்கடி பூக்கும். அவள் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியை. தமிழ் போல் நிரோ அழகு.

அகலமான விழிகள்; ஆழமான பார்வை; ஒல்லியும் அல்ல; கொழுப்பும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட உருவம்.

கார்முகில் கடன்கேட்கும் படர்ந்த கூந்தல். சிமிழ்போல் மூக்கு. மொத்தத்தில் தங்கத் தேகம்.

தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று ஏற்பாடாகி இருந்தது.

பக்கத்து ஊரிலுள்ள ஒரு தேசியப் பாடசாலையில் நடைபெற்றது. நிரோசாவும் அதில் கலந்து கொண்டாள்.

குழுக்களாக எல்லோரும் பிரிக்கப்பட்டு சில விடயங்களை ஆராயப் பணிக்கப்பட்டனர். 'டீ' பிரிவில் நிரோசாவுடன் நான்கு பேர்கள். அதில் திவாகரனும் இணைந்திருந்தான்.

அவனின் பேச்சு அவளுக்கு இனித்தது.

புன்னகை வாசமானது.

அவனின் அறிவுகண்டு அவளின் மனது வசமானது. இருந்தாலும் நிரோசா தன் மனதுக்கு குடை பிடித்தாள், மழை பெய்யாமல்.

கருத்தரங்கு முடிவடைந்ததும் திவாகரனும் அந்த மலரைப் பற்றி விசாரித்தான்.

அவளின் அழகில் அவனின் இதயம் கழன்று விழுந்தது. அவனின் வார்த்தைகள் பழுதானது. விழிகளால் அவளை ஆசையுடன் உழுதான்.

"நி..ரோ.....சா..... உங்கள எனக்கு மிச்சம் புடிச்சிருக்கு.....!"

அவன் வெளிப்படையாக இதயத்தைத் திறந்து காட்டினான்.

"ஒரு நாள் பழக்கத்தில ஒருத்தர ஒருத்தருக்குப் புடிச்சிருக்குன்னா அறியாமை எண்டுதான் அர்த்தம்..."

"..........."

அவன் தொடர்ந்து பேசவில்லை. அவனின் இதயத்தில் முள்குத்தியது போலிருந்தது.

"உங்களப் பார்த்தா....!"

அவன் வார்த்தைகளை நிறைவு செய்யவில்லை. இருவரும் விடைபெற்றார்கள்.

அன்றைய இரவு நிலவில்லாமல் மலர்ந்தது. நிரோசா தூக்கத்தின் தன்மையை நுகரமுடியாமல் தவித்தாள்.

அவளின் இதயம் பலமுறை திவாகரனை உச்சரித்தது.

அவனின் புன்னகையில் கற்பனை உள்ளதாக, அவனின் வார்த்தைகளில் உண்மை நிறைந்துள்ளதாக, அறிவு அமர்ந்துள்ளதாகத் தீர்மானித்தாள் நிரோசா.

'மீண்டும் ஒருமுறை அவனைச் சந்தித்தால்...' என்றுகூட நினைத்தாள்.

அடுத்த விடியலில் அவளின் இதயம் கனவுகள் சுமந்துகொண்டு பாடசாலையில் தஞ்சமானது. திவாகரன் அந்தப் பாடசாலைக்கு வந்திருந்தான். அவளின் இதயம் மின்னல் போலானது.

'ம்...ம்...என்....னத்தான்... பார்க்க... வந்திருக்கிறா...ரு...'

தனக்குள் பேசிக் கொண்டாள்.



"குட் மோனிங்..."

அவளிடம் வந்தவாறே சொன்னான் திவாகரன்.

"குட் மோனிங்... என்ன இந்தப் பக்கம்....?"

"உங்கட பிரின்ஸ்பெல்ல சந்திக்கணும்... அதான்...."

பொய் ஒன்றை அவளுக்காக முதன் முதலாகத் திவாகரன் அமுல் படுத்தினான்.

"எனக்குப் பாடமிருக்கு...நான் வாறன்..."

அவள் நகர்வது போல் போலியாக முயற்சித்தாள்...

"நிரோ....சா..."

"..........."

'அவள் விழியால் பேசினாள். முகத்தால் எழுதினாள்.'

"நா...ன்....வந்து...."

"...."

அவள் மௌனத்தை அமுல் படுத்தினாள்.

"நான் உங்கள... விரும்...புறன்...."

திவாகரன் துணிந்து சொன்னான். அவனின் துணிவை நிரோசா பாராட்டினாள். மனதால் பூ வீசினாள்.

நிரோசா உணர்ச்சி வசப்படவில்லை என்றாலும் அவளின் இதயத்தில் வசந்தம் புகுந்தது. ஆனந்தம் மிகுந்தது.

"நீங்க எத வெச்சி... இப்படி ஒரு முடிவுக்கு வந்தீங்க...?"

**கரீமா றாஹில்**

"..........."

"ம்... சொல்லுங்க...?"

"உங்கட அறிவு, அழகு, குணம் எல்லாமே எனக்குப் பிடிச்சிருக்கு....."

"கண்டதும் காதலா...? ஒருநாள் பழக்கத்தில எப்படி எல்லாம் தெரியும்...?"

"அகத்தின்ர அழகு முகத்தில தெரியுமே...!"

"என்ன மன்னிச்சிருங்க.... எனக்கு விருப்பமில்ல..."

"............."

'அவன் தலை குனிந்து நின்றான்.'

நிரோசா சென்றுவிட்டாள். அவளுக்குள் எழுந்த காதலுக்குத் தடை போட்டாள்.

திவாகரன் பலகடிதங்கள் எழுதினான். அவற்றில் அவனின் இதயத்தை வரைந்தான்.

பலமுறை அந்த நிலாவை திவாகரன் சந்தித்தான். அவனின் சிந்தனையை அவளிடம் சமர்ப்பித்தான்.

அந்தப்பூவில் தேன் கசிந்தது.

அந்த மேகம் மழை பெய்தது.

காதல் நிலா கவிதை எழுதியது. அவர்களின் காதல் கனவுகளையும் கற்பனைகளையும் சுமந்து கொண்டு உலா வந்தது.

"திவா... நம்மட காதலப்பத்தி உங்கட பேரன்ஸ்க்கிட்ட சொன்னீங்களா...?"

அவள் ஒருமுறை அவனிடம் கேட்டாள்.

"நிரோ! என்ர தங்கச்சி உமாக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறம்... அதுக்கு முதல்ல முடியட்டுமே.... எண்டுதான்...."

"அதுவும் சரிதான்..."

அவளே ஆமோதித்தாள்.

'ஹெலிக் கொப்டர்' ஒன்று வந்து தரை இறங்கிய சத்தம் நிரோசாவை நிஜத்திற்கு அழைத்து வந்தது.

திவாகரன் அப்போதுதான் வந்து கொண்டிருந்தான். அவளின் பக்கத்தில் அந்த வண்டு அமர்ந்துகொண்டது....

"............."

"............."

"என்...ன... லேட்டு..?"

"............."

"சொல்லு...ங்க....?"

"............."

"என்ன பேசாம இருக்கீங்க....?"

"............."

"உடம்புக்கு ஏதாவது....?"

"............."

"............."

"நி....ரோ..என்ன மன்னிச்சிடு நிரோ...."

"ஏ...ன்...? ஏ....?"

"நம்மட காதல் சரிவராது.... எனக்கு ஏற்கனவே...."

"ஏற்....க....ன....ன....வே...?"

"அப்பா....பேசி வாக்கும் கொடுத்திட்டாராம்.... என்ன.....மன்னிச்சிடு.... மறந்திடு நிரோ...."

அவன் அவளின் பதிலை எதிர்பார்க்கவில்லை, சென்று கொண்டிருந்தான்.

அந்தக் குளிரில் அவளுக்கு வியர்த்தது. அவளின் விழிகள் ஈரமாயின. அவளால் வார்த்தைகளை உமிழ முடியவில்லை. அந்த நிலா உடைந்து சிதறியது. அந்தப்பூங்கா பாலைவனம் போல் காட்சியளித்தது.

இந்த இரவு அவனுக்கு உறக்கத்தைக் கொடுக்கவில்லை.

ஒரு பூவுக்கு தீவைத்தவனுக்கு,

ஒரு நிலாவுக்கு வெடி வைத்தவனுக்கு எப்படி உறக்கம் வரும்?

எழுந்தான். தன்னுடைய தங்கையின் அறையில் வெளிச்சம் தெரிந்தது. மின்சார விளக்கை அணைக்க அறையின் உள்ளே சென்றான். தங்கை உமா அமைதியாகக் கிடந்தாள். மேசையில் ஒரு கடிதம் அடையாளப்படுத்தியது.

எடுத்தான்

வாசித்தான்.

*'அன்பு அண்ணா! நான் ஒருவனைக் காதலித்து ஏமாந்துவிட்டேன். இனி எனக்கு வாழ்க்கை இல்லை. அதனால் நான் 'சிலீப்பிங் டெப்பிலட்'ஸ்களை சாப்பிட்டுள்ளேன். எனது மரணத்திற்கு நானே பொறுப்பு.'*

இப்படிக்கு,
அன்புத் தங்கை,
உமா.

"உ....உ....மா...!"

அவள் சுவாசம் இழந்து பல மணிநேரம். பெற்றோருக்குத் தெரியப்படுத்திவிட்டு அவன் விரைவாகச் சென்றான் நிரோசாவின் வீட்டுக்கு- இன்றுமொரு சுவாசம் நின்றுவிடக் கூடாதே என்பதற்காக.

# தேடல்



**யாழ். ஞானகணேசன்**

சோமுவின் உடலில் இருந்து வியர்வை வாய்க்காலமைத்து ஓடிக்கொண்டிருந்தது. இடுப்பிலிருந்த பழைய துண்டினால் துடைத்துக் கொண்டவன், மீண்டும் பரபரப்புடன் உசாரானான்.

"இன்றைக்கு இரண்டு பிரேதம் வருகுது. கையிலை கொஞ்சம் சேரும்!" என்று உதடுகளில் முணுமுணுத்துக் கொண்டவன், மனதுக்குள் மகிழ்ச்சியுடன் விறகுகளை அடுக்கத் தொடங்கினான்.

சோமு, எங்கள் ஊர் சுடலையில் எடுபிடி வேலை செய்பவன். பிரேதம் சுடலை வளவுக்குள் புகுந்ததில் இருந்து சாம்பல் அள்ளும்வரை சோமு சுழன்று கொண்டு திரிவான்.

பிரேதத்தை மயானத்திற்கு கொண்டு வந்து, உரிய விறகு மேடையில் வைத்தார்கள்.

"சோமு, அந்த விறகை எடுத்து வா!"

"சோமு, கடைசியாய் ஒருக்காப் பெட்டியைத் துற. பார்க்க விரும்புகிறவை பாக்கட்டும்!"

"சோமு, அந்த பெரிய குத்தி விறவை எடுத்துவா."

"அதை மேலை வை."

சோமு கட்டளைகளுக்கு அடிபணிந்து அங்கும் இங்கும் ஓடித்திரிந்தான்.

கொள்ளி வைத்துவிட்டு எல்லோரும் வெளியேறும் சமயத்தில், வாய்க்கரிசி இட்ட மீதி அரிசியுடன் பெட்டி சோமுவின் கைக்கு மாறியது.

சோமுவின் ஐந்து விரல்களும் பெட்டிக்குள் சில்லறை நாணயங்களுக்காக துளாவிக் கொண்டிருந்தன.

தோற்றுப் போனவன், பெட்டியை வீசி எறிந்தான்.

"ஐந்து சதம் சில்லைறை போடாத இவங்களுக்கெல்லாம் செத்தவீடு ஒரு கேடா? எங்களுக்கும் ஐஞ்சு காசு தந்தால்தானே இந்த உயிர்களும் சாந்தியடையும்." என்றவன், அடுத்த பிரேதம் சுடலை வளவுக்குள் புகுவதை அவதானித்துவிட்டு புறப்பட்டான், அடுத்த தேடலுக்காக.

*(யாவும் கற்பனை அல்ல.)*

# ஞானோதயம்



**ரூபராணி**

காஞ்சனா தனக்கு வந்த கடிதத்தைப் பலமுறை படித்து முடித்துவிட்டாள். அதை மடித்துத் தலையணைக்கடியில் வைத்துவிட்டு எதிரே இருந்த சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தாள். இருளின் பிடியில் கடிகாரமுள் ஒன்றை ஒன்று கட்டிக்கொண்டு மணி பன்னிரண்டைக் காட்டியது. தூக்கம் காஞ்சனாவின் கண்களைத் தழுவ மறுக்கிறது. மறுபடியும் தலையணைக்கடியில் இருந்த கடிதத்தில் கண்களை மேயவிட்டாள்.

அவளுடைய தாய்; பேரன் ரவியின் பிறந்தநாளை நினைவூட்டி எழுதியிருந்தாள். அவன் பண்ணும் குறும்புகளைக் கோடிட்டுக் காட்டியிருந்தாள்.

"எனக்கு அம்மா இருக்கா பாட்டி? அப்பா இருக்கா பாட்டி? ஏன் அவங்க ரெண்டு பேரும் என்னவிட்டுப் போனாங்க பாட்டி? அவங்களுக்கு என்னப் பிடிக்கலியா? என்று கேள்வி மேல் கேள்வி போட்டு உன் மகன் என்னைத் துளைக்கிறாண்டி..." இந்த வரிகள் காஞ்சனாவின் இதயத்தைக் கிழித்து மூளையைக் குழப்பியது.

காஞ்சனாவின் அறை விசாலமாய் இருந்தது. தரையில் விலை உயர்ந்த காப்பற் விரிப்பு, கட்டில் மெத்தை, ரெலிவிஷன், டெக், வாசனைத் திரவியங்கள்-இவை எல்லாமே அவளைக் கேலிசெய்வது போலிருந்தன. கல்பன் பாயில் கால் நீட்டிப் படுத்த சுகம் அவள் நெஞ்சை வருடியபோது கண்ணீர் கழுக்கென்று வெளியேறி இலங்கை மண்ணில் சங்கமித்தது.

"காஞ்சனா உனக்குக் கலியாணமாகிப் பிள்ளையும் பிறந்தாச்சி, உன் புருஷனும் வெளியில. நீ வீட்டுப் பொறுப்பெடுத்து நல்லபடியா பிள்ளையை வளக்க வேணாமா? எல்லாத்தயும் என் தலயில கட்டிற்று சவூதிக்குப் போறன் எண்றியே- என்னடிது? புருஷன் அனுப்பிற காசு காணாதா?"

அம்மாவின் குரல் காஞ்சனாவின் காதில் அலை மோதியது.

> "ரெண்டு வருசம் பேரனைப் பாரும்மா நான் போய் உளச்சி மொத வேலையா ரீ.வி., டெக் வாங்கணும்"

"சும்மா கெடம்மா உனக்கு அறிவிருக்கா? புருஷன்ர காசு செலவுக்குச் சரி. ரெண்டு வருசம் பல்லக் கடிச்சிட்டு உன் பேரனப் பாரும்மா! நான் போய் உளச்சி மொத வேலயா ரீ.வி.யும் டெக்கும் வாங்கணும், எந்த நாளும் பக்கத்து வீட்லபோய்ப் பாக்கிறதா? நாலுபேர் மதிக்க நல்ல பேணிச்சர் செற் வாங்கிப் போடணும். யன்னல் கதவுகளப்பாரன்! நல்ல நாள், பெரு நாள்ளயும் அம்மணமாய் நிக்குதுகள். காசு மிஞ்சினா வீட்டயும் றிப்பேர் பாக்கவேணும்"

"சே- என்ன பொண்ணுடி நீ. உனக்குப் புள்ள பெரிசா? சாமானுகள் பெரிசா? தேவ இல்லாதது்க்காக பெத்த பிள்ளய விட்டிட்டுப் போறன் என்றியே!"

"நீ என்ன சொன்னாலும் சவூதி போயே ஆகுவன்!"

பிறந்த மண்ணைவிட்டு வெளியேறுமுன் காஞ்சனாவுக்கும் அவள் அம்மாவுக்கும் நடந்த வாக்குவாதம் இது.

ஏ.சி. றூமில் காஞ்சனா படுத்திருந்தாலும் அவள் உடல் பூராவும் வியர்வைத்துளிகள் மணிகளாய் உருண்டன. சொந்த வீட்டில் பாத்திர பண்டம் கழுவவும், துணிமணி தோய்க்கவும் நாணியவள் வேற்று நாட்டார் போட்டவற்றைச் சலவை செய்து இஸ்திரி போடுவதும் கைவலிக்க நிலம் தேய்த்துப் பொளிஷ் பண்ணுவதும் இப்போது காஞ்சனாவுக்கு அவமானமாகப்பட்டது.

வயசான அம்மாவுக்கு ஒத்தாசை பண்ணாமல்,பெற்ற பிள்ளையையும் கவனிக்காமல் அற்ப ஆசைகளுக்காக நாட்டைப் பிரிந்து வீட்டைப் பிரிந்து பந்த பாசங்களை மறந்து வந்ததை எண்ணியபோது ஓவென்று சத்தமாய் அழலாம் போலிருந்தது காஞ்சனாவுக்கு.

தான் பெற்ற ஒரே பிள்ளையை அம்போ என்று விட்டுவிட்டு அரபுப் பொலீசின் மூன்று பிள்ளைகளுக்கு ஊழியம் செய்வதை எண்ணியபோது ஏக்கங்கள் காஞ்சனாவுக்குள் குண்டுகளாய் வெடித்து வேதனையைச் சிதறியது.

வயல் சூழ்ந்த தன் சொந்த ஊரின் பெருமை தெரிந்ததும் அவளுக்குப் பாசம் பொங்கி வழிந்தது. ஜில் என்ற காற்றும் அவள் அம்மா காய்ச்சும் சள்ளல் மீன் சொதியும் எந்தவிலை கொடுத்தும் இங்கு வாங்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தபோது காஞ்சனாவின் கண்கள் குளமாகின. அந்த நிமிஷமே பறந்து போய் தன் மகனை அள்ளி அளைய வேண்டும்; நீராட்டிப் புத்தாடை புனைந்து பார்க்க வேண்டுமென்று பரபரத்தாள்.

தன் தாயை உட்கார வைத்துப் பணிவிடைசெய்ய வேண்டுமென்ற ஆவலில் அவசரப்பட்டாள். பிறந்த நாள் கேக், பலகாரம் எல்லாம் பண்ணித் தன் அம்மாவைத்திகைப்பில் ஆழ்த்த வேணும் என்று துடியாய்த் துடித்தாள். ஐயோ பாவம் காஞ்சனா போய் இன்னும் ஆறு மாதங்கள்கூட ஆகவில்லையே.

# 18 மணி நேரம்



**அருள்மொழி**

சுனந்தா- படுத்தபடியே விளக்கைப் போட்டு மணி பார்த்தாள். மணி- ஐந்து.

'இன்னும் சிறிது நேரம் படுத்திருக்கலாமா?' வேண்டியது உடம்பு.

'ஐயோ எவ்வளவு வேலை கிடக்கு....'

எழுந்து முகம் கழுவி வந்தாள். பால்காரன் கதவைத் தட்டினான். பாலை வாங்கி வந்து அடுப்பில் வைத்தாள். சாம்பார் வைக்க வேண்டும்... காய்கறிகள் நறுக்கினாள்.

பால்குக்கர் சத்தமிட்டது. இறக்கி வைத்தாள்.

மணி-ஆறு.

இன்றைக்குச் சீக்கிரம் போக வேண்டும். ஆறு மணிக்கே எழுப்பி விடும்மா... என்று நேற்றே சொல்லியிருந்தான் பெரியவன். அவனை தட்டியெழுப்பினாள்.

எழும்போதே "கோப்பிம்மா" என்றான் அவன்.

"பல் விளக்கிட்டுவா" என்றாள்.

வந்தவனுக்கு கோப்பி தந்துவிட்டு.... காலை உணவாக இட்லி ஊற்றினாள்.

"சுனந்தா....!" கணவன் குரல் கொடுத்தான்... பெட்கோப்பி வேண்டும் என்று அர்த்தம்.

"இதோ வந்திட்டேன்," என்று கோப்பி எடுத்துக்கொண்டு போனாள்.

மணி ஏழு. அரிசி களைந்து குக்கரில் வைத்தாள். பிள்ளைகள் யூனிஃபோர்ம்களை அயர்ண் பண்ணினாள். குக்கர் சத்தமிட்டது. சோறு ஆகிவிட்டது. இறக்கி வைத்தாள்.

குழந்தைகளை எழுப்பினாள். "குழந்தைகளுக்குக் கொஞ்சம் குளிப்பாட்டி விடுங்களேன்..." கணவனிடம் கூறினாள்.... "வேற வேலை இல்லை...." அவன் முணுமுணுத்துக் கொண்டே பாத்ரூம் போனான்.

மணி 8. குழந்தைகளும்... கணவனும் ரெடியாகிவிட்டார்கள். "அம்மா.. காலைச் சாப்பாடு...,"சுனந்தா நேரமாகுதே..." சாப்பாட்டுப் பைகளை கொண்டு வந்து தந்தாள். அவர்கள் டாடா சொன்னார்கள்.

அப்பாடா என்று சோபாவில் சாய்ந்தாள். மணி 9. வீட்டைக் கூட்டி சுத்தப்படுத்தினாள்.

வோஷிங் மிசினில் துணிகளைப் போட்டாள்....

துவைத்த துணிகளைக் காயப்போட்டு, குளித்துவந்தாள். காலைச்சாப்பாடு சாப்பிட உட்கார்ந்தாள். மணி 11.

கதவை யாரோ தட்டினார்கள். எலக்ட்ரிக் ரீடிங் பார்க்க வந்திருந்தான்... கார்ட்டை எடுத்துத் தந்தாள்.

பழக்காரன் வந்தான், பழம் வாங்கினாள். மணி 12.

கதவைப் பூட்டிவிட்டு கடைக்குப் போய் தேங்காய், காய் கறி வாங்கினாள். பிள்ளைகளுக்கு டொக்டர் முட்டை கொடுக்கச் சொல்லி உள்ளார்.

மணி 2. வீட்டிற்கு வந்து எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள். கோலிங்பெல் சத்தமிட்டது. பால்காரன்- பால் வாங்கினாள்.

மணி 3. வெளியே வேன் சத்தம் கேட்டது. பிள்ளைகள் வந்துவிட்டார்கள். யூனிஃபார்மை கழட்டி முகம், கை, கால் கழுவி விட்டாள். வேறு ஆடை போட்டுவிட்டாள்.

சாப்பிடக் கொடுத்தாள். மணி 5. கோப்பி போட்டு சாப்பிடலாம் என்று தோன்றியது. கோப்பி போடணுமே... அலுப்பாக இருந்தது. பிள்ளைகளின் புத்தகங்களை எடுத்து வைத்துவிட்டு கூட்டினாள்.

தண்ணீர் பிடித்து வைத்தாள். மணி 6. பிள்ளைகளை பாடங்களைப் படிக்க வைத்தாள். அம்மா இந்த ஹோம்வேர்க் எப்படிம்மா...?

"அம்மா... இந்தப் பாடம் புரியவேயில்லை..." சொல்லித் தந்தாள். மணி 8.

கணவன் வந்துவிட்டான்.

"சுனந்தா ரொம்ப டயர்டா இருக்கு; சாப்பாடு ரெடியா?"

"இதோ இந்தக் கோப்பிய குடிங்க. ரெடி பண்ணிடறேன்."

சாப்பாடு ரெடி பண்ணி பரிமாறினாள். மணி 9.

சின்னவள்.... சாப்பிடவில்லை. "ஊட்டி விடும்மா" என்று சிணுங்கினாள்.

ஊட்டிவிட்டுக் கொண்டே தானும் கொஞ்சம் சாப்பிட்டாள்.

படுக்கை விரித்துப் போட்டாள்.

எல்லாரும் உறங்கப் போனார்கள்.

மணி 10.

பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்துவிட்டு தெருக்கதவைத் தாழ்போட்டாள். மணியைப் பார்த்தாள்.

மணி 11. உடல் மிகவும் அசதியாக இருந்தது. அப்படியே படுக்கையில் சாய வேண்டும்.... படுக்கை அறை வந்தாள். கணவன் அவளைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்தான். பகீர் என்றது "இல்லைங்க.. உடம்பு ரொம்ப..." அவள் முடிக்கவில்லை. கையைப் பிடித்து படுக்கையில் தள்ளினான். 'காலையில் சீக்கிரம் எழுந்திருக்கணும்...' அவள் மறுநாளைப் பற்றி எண்ணினாள்!

# இலக்கிய நயம்

# பல்லியின் குறி

தருவது ரசிகன்

“மலரினிலே வந்து தேன் எடுத்தவன்
மாயமாய் மறைந்தானடி.
கனிகளிலே அமர்ந்து சுவையறிந்தவன்
காணாமல் போனானடி”

தோழிக்கு சொன்னாள்
நீலவேணி.

“கட்டழகு விருந்தை
தொட்டு அள்ளி சுவைத்த
கட்டழகன் தள்ளிப் போவானா?”

ஆறுதல் வார்த்தையால்
வருடினாள் தோழி.

“நெருப்புக்குள் விழுந்த
பஞ்சானேன் தோழி!
நீருக்குள் விழுந்த
உப்பானேன் தோழி!” என்றாள்.

“தீப்பற்றி எரிகிறதோ
தேகம்?
பூப்பற்றி ஆடியதோ
அந்தத் தேனீ?”

ஆறுதல் சொன்னவள்
மெல்ல கேலிக்குத் தாவினாள்.

கேலியால் நீலவேணிக்கு
உடல் சிலிர்த்தது!

“வலை விரித்தவன்
ஆடிய வேட்டையில்
மான் மயங்கியதோ?
கதை படித்தவன்
தேடிய புதிர்களில்
நூல் மயங்கியதோ?
கலை தெரிந்தவன்
மீட்டிய சுரங்களில்
வீணை மயங்கியதோ?”

கேள்விகள் தொடுத்தாள்
தோழி!
வெட்கம் தலையில் கனக்க
குனிந்திருந்தாள் நீலவேணி.

“அச்சத்தில் கால்கள் பின்ன
ஆசையில் தோள்கள் விம்ம
வெட்கத்தில் முகமோ சிவக்க
விரகத்தில் நெஞ்சம் விம்ம
பக்கத்தில் போனாயோ தோழி?”

தோழியின் குறும்புக் கணைகள்
வேணியின் நெஞ்சை துளைத்தன.

நினைத்துப் பார்த்தாள்
நேருக்கு நேராக
அரங்கேறிய நாடகத்தை
நினைத்துப் பார்த்தாள்!

கண்ணுக்குள் கண் ஆட
நெஞ்சுக்குள் நெஞ்சு தாவ-அவன்
கைதாவி கொடி தழுவி
கனிதேடி மலையேறி
குறும்பு செய்து எறும்பான
நினைவு எட்டிப் பார்த்தது.
நெஞ்சு மூச்சு விட்டது!



“கூந்தல் பாயாய் விரிந்திருக்க
காந்தம் என கட்டழகு விரிந்திருக்க
கண்கள் விரித்து அவன் பார்த்திருக்க
கள்ளா என இவள் இழுத்தாளாம்”

நீலவேணியின் பெருமூச்சுக்கு
தோழி செய்தாள் கேலி.

“கன்னம் என்பது
தங்கக் கிண்ணம் என்பாரோ?
இதழ் ரசம் தா எனக் கேட்பாரோ?
பழரசம் தான் பருகத் துடிப்பாரோ?”

கேலியை மேலும்
தாங்க முடியவில்லை வேணிக்கு!

“நிறுத்தடி, நிறுத்து
நிறுத்து நிறுத்து
கதை விற்காதே!”

“கதையா, கற்பனையா
பூப்போல உன்னை அள்ளி
பூவிதழில் தேன் கிள்ளி
போனாரே ஒரு கள்வன்
கதையா? கற்பனையா?”

தோழி கேள்வியால்
தொடுத்தாள் தாக்குதல்!

“எப் பனையில் ஏறினாலும்
ஏற முடியாத பனை
உன் கற்பனை!”

நீலவேணி
தோழியை இடித்தாள்!

“ஏறாத பனையிலும்
கட்டித்தான் ஏறவேண்டும்
கற்பனை ஆசையிலும்
கட்டித்தான் ஏறவேண்டும்!
கட்டழகு மேனியிலும்
கட்டித்தான் கால் சேர வேண்டும்!”

எங்கோ படித்த
இலக்கிய கற்பனை!
தோழி எடுத்துவிட்டாள்.
வேணி ஒரு குட்டு வைத்தாள்!

“என்னடி
பெண் நீ?” என்றாள்.

“ஓஹோ
சொன்னால் கூசும்!
கண்ணால் கண்டால்
மனதுக்குள் கூவும்!
கள்ளியடி நீ
கள்ளெடுக்கும் வண்டை
கண்ணெடுத்துத் தேடும்
கள்ளியடி நீ!”

பொய் சொன்னால்
தோழி நம்பாள்
பணிந்து வந்தாள்
நீலவேணி.

“உண்மையைச் சொல்கிறேனடி
உறங்கி ஒரு யுகமாச்சு!
கண்மை கரைவது போல
வாய்மை கரையுதல் முறையோ?”

“வாய்மை
எப்படிக் கரையும்?”

“வருவேன் என்றவர் போனார்
வாரம் பல உதிர்ந்து போச்சு
வருவதை மட்டும் காணோம்
வதைபடும் தினம் என் மனமே!
வாக்குத் தவறிவிட்டார்
உடைபடும் பாக்காய் ஆனான் நானே!”

நீலவேணி சோகத்தில் துவள
தோழி குறும்பைத் தொடுத்தாள்.
சோகத்தை உடைக்கும் முயற்சி!

“வாரம் சிலதான் போச்சு
உனக்கு யுகம்போல் ஆச்சு!
தந்ததை நினைத்து உருகி
தந்தனத்தோம் போடுதோ மனது?”

தோழி சொல்ல
நாணம் அணிந்தாள் வேணி.

அந்த நாணத்திலும்
சோகத்தின் நிழல் தெரிந்தது.

ஆறுதல் சொல்ல
தோழி இதழ் திறந்தாள்.

“நெஞ்சு வருந்தாதே
கொஞ்சும் குமரன் வருவாரடி
மிஞ்சும் வரை தருவாரடி”

தோழி சொல்ல
சுவரில் பல்லியும் ஒலித்தது.

விடுவாளா தோழி
கதை சொன்னாள் வேணிக்கு!

“காட்டு வழி போன கள்வன்
நாட்டு வழி திரும்பினாரடி
பசு ஒலிக்கும் மலை அருகில்
பாலை நில பாதையிலே
விரைந்தோடி வந்து நிற்பாரடி.
குறி கூறும் பல்லிய அதைக்
கூறுவதை கேட்பாயடி!
இடை வழியில் வருதல் சொல்ல
பல்லி இடப்புறமாய் நகருவதை
ஏறெடுத்துப் பாரடி கள்ளி!”

பல்லி சொற் பலனாக
தோழி சொல்லும் குறி
பதினென் கீழ்க்கணக்கு நூலில்
புல்லங்காடனாரின்
பாட்டில் வருகிறது பாரீர்.

*“ஆமா சிலைக்கும் மணிவரை ஆரிடை*
*ஏமாண் சிலையார்க்கு இனமா இரிந்து*
*–ஓடும்*
*தாமாண்பில் வெஞ்சுரம் சென்றார்*
*–வரக் கண்டு*
*வாய்மாண்ட பல்லி படும்”*

★ பட்ஜெட்டைப் பார்த்தால் தேர்தல் வரும்போல் தெரிகிறது என்கிறார்களே?

இ. ராகவன், திருமலை.

அப்படி ஒன்றும் சாதாரண மக்கள் வாழ்க்கையில் தோரணம் கட்டவில்லையே பட்ஜெட்! பாண் விலை, மாவிலை என்று எல்லாம்தான் ஏற்கனவே ஏறியாச்சே! அந்தச் சூத்திரம் தெரியாதவர்கள் சொல்லும் சாத்திரத்தை நம்பவேண்டாம்! சமீபத்தில் தேர்தல் வரவே வராது. நம்புக!

–♥♥●●–

★ அடுத்த ஆண்டின் இறுதியில்தான் தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்துக்கு முன் வைக்கப்படும் என்று ஜனாதிபதி கூறி விட்டாரே?

வே. பாலசுந்தரம், வவுனியா.

தெரிவுக்குழு அறிக்கையை வைத்து, அரசியல் தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் வந்துவிட்டது என்று மாயத்தோற்றம் காண்பிக்க முயன்றவர்களின் முகங்களில் இத்தனை விரைவாக கரிபூசிவிட்டாரே ஜனாதிபதி!

–♥♥●●–

★ புலிகள் விட்ட தவறுதான் இன்றைய பின்னடைவுகளுக்குக் காரணம் என்கிறார்களே சில தமிழ்க்கட்சிக்காரர்கள்?

உ. புவனேஸ்வரன்–திருமலை.

முன்னேற்றத்திற்கு இவர்கள் முயலலாமே! புலிகள் ஒரே ஒரு இயக்கம். வெளியே கூட்டணி உட்பட ஆறு தமிழ்க் கட்சிகள் உள்ளன அல்லவா? ஒன்றால் ஏற்பட்ட பின்னடைவை ஆறால் நேராக்க முடியவில்லை என்பது சிரிப்பாக இல்லை?!

–♥♥●●–

★ பெண் புத்தி பின்புத்தி என்றால் உங்களுக்கு கோபம் வருமா?

எஸ். சாந்தகுமார், பொத்துவில்.

வராது! ‘பின்’ எத்தனை கூர்மையானது தெரியுமா?! சட்டையிலும் குத்தலாம். பஸ்சில் ‘பின்’புத்தியோடு உரசும் ஆண்களையும் சட்டென்று குத்தலாம். நிற்க, ஒரு குட்டிக்கதை:

பெரும் புயல் அடித்தது. மரங்கள் சாய்ந்தன. கூரைகள் பறந்தன. வீடுகள் ஆட்டமெடுத்தன.

புயல் ஓய்ந்ததும், ஜனங்கள் வெளியே வந்து, சிறு சிறு கூட்டங்களாக அங்கும் இங்கும் நின்றுகொண்டு சேதாரங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதன் எல்லோரிடமும் ஓடி ஓடி, “வேண்டாம், பரபரப்பு வேண்டாம். அமைதியாக இருங்கள். சேதத்தின் அளவைக் கணக்கிடுங்கள். பின்னர் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானியுங்கள். தயவு செய்து பதற்றப்படாதீர்கள்!” என்று உபதேசித்தான்.

இதைக் கேட்ட ஒரு பெண் சொன்னாள்: “பேஷ்! இது நல்ல யோசனைதான்! ஆனால் உன் ஸ்தானத்தில் நான் இருந்தால் இப்படி நிர்வாணமாக வெளியே திரியமாட்டேன். முதலில் வீட்டுக்குள்ளே ஓடி உடை அணிந்து கொண்டுதான் வெளியே வருவேன்!”

–♥♥●●–

★ ‘இருவர்’ ஐஸ்வர்யா ராய், இப்போது ‘ரட்சகன்’ சுஷ்மிதா சென். உலக அழகிகள் இருவரில் வெள்ளித்திரையில் வெற்றி யாருக்கு?

இ. குகன், கொழும்பு-09.

ஐஸ்வர்யா ராய்க்கு! சுஷ்மிதாவிடம் தாராளம் தெரியுமளவுக்கு திரைக்கு ஏற்ற தரம் தெரியவில்லை!

–♥♥●●–

★ அவசரக்குடுக்கைகளை திருத்தவே முடியாதா?

செல்வி கி. தேவிகா, மட்டக்களப்பு.

முதல் உலக யுத்த காலத்தில் ஃபிரான்சில் அமெரிக்க தளபதி ஒருவர், தனக்கு முன்பாக இரண்டு சிப்பாய்கள் பெரிய பாத்திரம் ஒன்றைத் தூக்கிக்கொண்டு சமையல் கூடத்தில் இருந்து வருவதைக் கண்டார்.

“எங்கே, இதில் என்ன இருக்கிறது? சுவைத்துப் பார்க்கிறேன்!” என்றார் தளபதி.

“இல்லை எஜமானே! அது....” என்று சொல்லத் தொடங்கினான் சிப்பாய்.

“என்ன அது இது! சாக்குப்போக்கெல்லாம் வேண்டாம். கொண்டுவா ஒரு ஸ்பூன்!” என்றார் தளபதி.

ஸ்பூன் வந்தது. பாத்திரத்தில் இருந்த திரவத்தில் இருந்து ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் விட்டுக்கொண்டார் தளபதி.

உடனே ‘தூ தூ’ என்று துப்பிவிட்டு, “இதுவும் ஒரு சூப்பா, என்னடா செய்கிறீர்கள்?” என்று கத்தினார்.

“இல்லை எஜமானே! இது சூப் அல்ல. சமையல் பாத்திரங்களை கழுவிய நீர். இதைச் சொல்லத்தான் வந்தேன். நீங்கள் இடம்கொடுக்கவில்லை!” என்றான் சிப்பாய்.

–♥♥●●–

## சிந்தியா பதில்கள்

★ தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியிடம் இலங்கை அணி தோல்வி கண்டுவிட்டதே சிந்தியா?

என். சு. பைர்கான், கந்தளாய்.

தொடர் வெற்றிகளால் எதிரியை குறைத்து மதிப்பிட்டுவிட்டது இலங்கை அணி. தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சும் அபாரம்!

–♥♥●●–

★ அரசியல்வாதிகள் ஆடம்பரமாகவும், பந்தாவாகவும் திரிந்தால் நாடு உருப்படுமா சொல்லுங்கள்?

ஜி. சீமோன், ஹெந்தளை.

வெளிநாட்டுத் தூதுக்குழு ஒன்றுக்கு தலைநகரைச் சுற்றிக் காண்பிக்கப்பட்டது.

அலுவலகம் முடியும் நேரம். ஆயிரக் கணக்கானவர்கள் வெளியே வந்து சைக்கிள்களிலும், கால் நடையாகவும் வீடு திரும்பப் புறப்பட்டார்கள்.

“இவர்கள் எல்லாம் யார்?” வெளிநாட்டுத் தூதுக்குழுவினர் கேட்டார்கள்.

“இந்த நாட்டு மக்கள். உண்மையில் இந்த நாட்டை ஆள்பவர்கள்!” என்று பெருமையாகப் பதிலளித்தார் அவர்களை அழைத்து வந்த அமைச்சர்.

சில நிமிடங்களுக்குப் பிறகு கொடிகளை பறக்கவிட்டபடி பல சொகுசு வாகனங்கள் வந்தன. முன்னால் மோட்டார் சைக்கிள்களில் பொலிசாரும், பின்னால் வாகனங்களில் ஆயுதமேந்திய காவலர்களும் வந்தனர்.

“இவர்கள் யார்?” என்று கேட்டனர் தூதுக்குழுவினர்.

“இவர்கள்தான் மக்களின் சேவகர்கள். அமைச்சர்கள்!” என்று பெருமையுடன் பதிலளித்தார் அமைச்சர்.

–♥♥●●–

★ இலங்கை வானொலியில், ‘வாரம் ஒரு வலம்’, ரூபவாகினியில் ‘நேருக்கு நேர்!’ இந்த இரண்டு நிகழ்ச்சிகள் பற்றியும் உங்கள் அபிப்பிராயம்?

ஏ. விக்னேஸ்வரன், சிலாபம்.

அரச வெகுஜன தொடர்பு சாதனங்களில் சுதந்திரமான நிகழ்ச்சிகள் தயாரிக்க இருக்கக் கூடிய அதிகபட்ச வரம்புவரை சென்று சிறப்பாகச் செய்கிறார் தயானந்தா. திறமையுள்ள இளைஞர். பாராட்டுக்கள்! ஆனால் பேட்டி கொடுக்கும் அரசியல்வாதிகள் தங்களை தற்காத்துக் கொள்வதில் உள்ள அக்கறையை, மக்களின் நலன்களுக்கு எதிரான நாட்டு நடப்புகளை அம்பலமாக்குவதில் காண்பிப்பதில்லை. சலிப்பான பேட்டிகள்! சமாளிப்பான பதில்கள்! தவிர, கேள்வி கேட்போர் வரிசையில் ஒரே முகங்களை அடிக்கடி காணமுடிகிறதே! கேள்வி கேட்க என்றே ஒரு கோஷ்டி இருக்கிறதா என்ன!?

–♥♥●●–

★ ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பட்டம் சூட்டி அழைக்கிறார்களே, இது சரியா?

என். காண்டீபன், கந்தப்பளை.

பிழைதான், ஆனால் யார்தான் சூட்டாமல் இருக்கிறார்கள்? இன்றைய ஆசிரியர்களே கூட நேற்று தங்கள் ஆசிரியர்களுக்கு பட்டம் சூட்டி மகிழ்ந்திருக்கலாம். சகல தரப்புக்குள்ளும் உள்ள பழக்கம்தான். மாணவர்களை மட்டும் மட்டம் தட்டாதீர்கள்.

படை வீரர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்கு செல்லப் பெயரிடுவது உண்டு. இதனை அறிந்த ஓர் உயரதிகாரி, தனக்கு என்ன பெயர் இட்டுள்ளனர் என்பதை அறிய விரும்பி, ஒரு சிப்பாயைக் கூப்பிட்டுக் கேட்டார்.

அவன் மிகுந்த தயக்கத்துடன் சொன்னான்: “கன்னிப் பெண்!”

அதிகாரி மகிழ்ந்து போனார். “கன்னிப் பெண் என்றா பெயர் வைத்துள்ளீர்கள்? நான் படையில் புகுத்தியுள்ள சிறந்த முறைகளுக்காகத்தானே இந்தப் பெயர் சூட்டியிருக்கிறீர்கள்?” என்று பெருமையாகக் கேட்டார்.

“இல்லை சேர், உங்களுக்கு எந்தவிதமான அனுபவமும் கிடையாது என்பதனால் தான் அந்தப் பெயர்!” என்றான் சிப்பாய்.

–♥♥●●–



கமல்–சௌந்தர்யா–பிரபுதேவா–ரம்பா (காதலா காதலா)

★ ‘காதலா காதலா’ தடைப்படுமா?

பி.எம். முஹமட், மருதானை.

யார் சொன்னது? வளர்கிறது. வளரும்!

–♥♥●●–

★ பாகிஸ்தான் சுதந்திரக் கிண்ணப் போட்டியில் எந்த அணியின் ஆட்டம் உங்களைக் கவர்ந்தது?

தி. மகிந்தன், கொழும்பு-13.

அணிகளின் ஆட்டத்தைவிட, இறுதிநாள் அன்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன்களை கௌரவித்த விதமும், மைதானத்தை சுற்றி குதிரை வண்டிகளில் அவர்களை ஏற்றி நடத்திய பவனியும் சிலிர்ப்பான விஷயம். இந்தியா இப்படி ஏன் செய்யவில்லை என்றும் யோசித்தேன்!

ஸ்போர்ட்ஸ்

## இந்தியாவில் இலங்கை அணி

பாகிஸ்தானின் சுதந்திரப் பொன் விழாவையொட்டி நடைபெற்ற நான்கு நாடுகள் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு நாடு திரும்பியுள்ளது இலங்கை அணி. அடுத்து இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது.

இந்தியாவுக்கு இம்மாதம் 14ம் திகதி செல்லும் இலங்கை அணி, அங்கு இந்திய அணியுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

முதலாவது டெஸ்ட் நவம்பர் 19–23 வரை மொஹாலியிலும், இரண்டாவது டெஸ்ட் நவம்பர் 26–30 வரை நாக்பூரிலும், மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் டிசம்பர் 03–07 வரை மும்பையிலும் நடைபெற இருக்கிறது.

டெஸ்ட் போட்டிகள் முடிந்த பின்னர் இந்திய அணி ஷார்ஜாவுக்குச் செல்கிறது. ஷார்ஜாவில் நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் ‘சம்பியன்’ கிண்ணப்போட்டிகள் டிசம்பர் 11–19 வரை நடைபெறுகின்றன. இந்தப் போட்டிகளில் இந்தியாவும் கலந்துகொள்கிறது.

இந்த இடைவெளியில் இலங்கை அணி தாயகம் திரும்புகிறது. ஷார்ஜாவில் இருந்து இந்திய அணி, இந்தியாவுக்குச் சென்றவுடன், மீண்டும் இலங்கை அணி இந்தியாவுக்குச் சென்று 3 ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுடன் விளையாடவுள்ளது.

இலங்கை-இந்திய டெஸ்ட் தொடருக்கான போட்டி நடுவராக அவுஸ்திரேலியாவின் பொப் சிம்ஸன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணியில் பிரமோதய விக்கிரமசிங்க சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஏனைய வீரர்கள் விபரம் வருமாறு:

அர்ஜுன ரணதுங்க(கப்டன்), அரவிந்த டி சில்வா, றொஷான் மகாநாம, ஹஷான் திலகரட்ன, மார்வன் அத்துபத்து, சனத் ஜயசூரிய, மகேல ஜயவர்த்தன, லங்கா டீ சில்வா, முத்தையா முரளீதரன், சமிந்த வாஸ், பிரமோதய விக்கிரமசிங்க, ரவீந்திர புஷ்பகுமார, சஜீவ டீ சில்வா, குமார தர்மசேன, ஜயந்த சில்வா மற்றும் ரஸல் அர்னோல்ட்.

## ஷார்ஜா போட்டிகள்

நான்கு நாடுகள் பங்குகொள்ளும் ‘சம்பியன்’ கிண்ணத்திற்கான போட்டிகள் டிசம்பர் 11ம் திகதி முதல் 19ம் திகதி வரை ஷார்ஜாவில் நடைபெறுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவு ஆகிய 4 நாடுகள் ‘சம்பியன்’ கிண்ணத்தை வெல்ல களம் இறங்குகின்றன.

புதுப்பிக்கப்பட்டுள்ள ஷார்ஜா ஸ்டேடியத்தில் நடைபெறும் போட்டிகள் யாவும் பகல்-இரவு போட்டியாகவே நடைபெறுகின்றன. ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளுடன் தலா ஒரு போட்டியில் விளையாடும். ரவுண்ட்- றொபின் எனப்படும் முறையில் போட்டிகள் நடைபெறும். முதலிடத்தைப் பெறும் இரு அணிகள் டிசம்பர் 19ம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் மோதும்.

<u>போட்டி விபரங்கள் பின்வருமாறு:</u>

டிசம்பர்–11 – இந்தியா எதிர் இங்கிலாந்து.
டிசம்பர்–12 – பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியத்தீவுகள்
டிசம்பர்–13 – இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியத்தீவு
டிசம்பர்–14 – இந்தியா எதிர் பாகிஸ்தான்.
டிசம்பர்–15 – பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து
டிசம்பர்–16 – இந்தியா எதிர் மேற்கிந்தியத்தீவு
டிசம்பர்–19 – இறுதிப் போட்டி.

## மூன்று அணிகள் மோதல்

இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி ‘பொன்விழா’ கிரிக்கெட் போட்டிகள் நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து பங்களாதேஷும் தாம் சுதந்திரமடைந்து 25 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி ‘சுதந்திர வெள்ளி விழா’ கோப்பைக்கான 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியை நடத்தவுள்ளது.

பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் பங்குபற்றும் இப்போட்டிகள் 1998ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் தொடங்குகின்றன.

ஒவ்வொரு அணியும், ஏனைய அணிகளுடன் ஒவ்வொரு போட்டிகளில் மோதும். அதிகப்புள்ளிகளை எடுக்கும் முதல் இரண்டு அணிகள் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும். மூன்று இறுதிப் போட்டிகள் நடைபெறும். இதில் இரண்டு போட்டிகளில் வெல்லும் அணி ‘வெள்ளிவிழா’ கிண்ணத்தைக் கைப்பற்றும்.

**இப்போட்டி விபரங்கள் இதோ:**

ஜனவரி 10– இந்தியா எதிர் பங்களாதேஷ்
ஜனவரி 11– இந்தியா எதிர் பாகிஸ்தான்
ஜனவரி 12– பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்
ஜனவரி 14– முதல் இறுதிப்போட்டி
ஜனவரி 16– இரண்டாவது இறுதிப்போட்டி
ஜனவரி 18– மூன்றாவது இறுதிப்போட்டி.

# இராமாயணம் அங்கம் 108

இராமபிரானை எப்போதும் நிழல்போல் தொடர்பவர் இலக்குமணன். சிறுவயது முதற் கொண்டே இவர்கள் இருவருக்குமிடையில் மிக நெருங்கிய பந்தம். இலக்குவனை இந்திரஜித்துவுடன் பொருது வதற்கு அனுப்பிவைத்தபோது, ' தம்பியை இறுக அணைத்து தனது வாஞ்சையினை வெளிப்படுத்தினார். இருவரும் இவ்வாறு அலிங்கனம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்த விபீடணர்- இருவருக்குமிடையிலிருந்த பாசத்தை வியந்தார். தனக்கும் தன் தமயனான இராவணனுக்குமிடையிலுள்ள வேறுபாடுகளைச் சற்று எண்ணிப் பார்த்தார். தந்தை ஒருவராக இருந்தபோதிலும் இராமபிரானுக்கும் இளையபெருமாளுக்கும் தாய்மார்கள் இருவர்.

தசரத மாமன்னரின் முதல் மனைவியான

## இந்திரஜித்து வதை



கோசலை தேவியாரின் வயிற்றில் இராமச்சந்திரன் உதித்தார். கைகேயி பரதனைப் பெற்றெடுத்தார். சுமத்திரை இலக்குமணன், சத்துருக்கன் ஆகிய இரட்டையர்களைப் பெற்றெடுத்தார். ஆனால் இராமருக்கும் இலக்குவனுக்குமிடையிலிருந்த பந்தபாசம் ஏனையோருடைய உறவை விடப் பன்மடங்கு அதிகரித்தே காணப்பட்டது.

போர்முனையில் இந்திரஜித்துவை எதிர்கொள்ள ஆஞ்சநேயரின் தோளில் ஏறிக் கொண்டதும் இராமபிரான் நின்றிருந்த திசையை நோக்கி ஆஞ்சநேயர் திரும்பினார். அப்போது இராமபிரானை இருவருமே ஒரே வேளையில் மானசீகமாக நினைத்து அன்னாருடைய ஆசியைப் பெற்றுக் கொண்டனர். ஆஞ்சநேயர், இராமபிரானின் ஆசியைப் பெற்றவிட்டதாக உணர்ந்ததும் புதுப்பலம் பெற்றவரானார். அதுமட்டுமல்லாமல் இளைய பெருமாளைத் தன் தோள்மீது தூக்கிக் கொண்டமையினாலும் அவருடைய உற்சாகம் மேலும் அதிகரித்தது.

### இந்திரஜித்து பூரிப்பு

இந்திரஜித்து பல வசதிகள் கொண்ட தேரில் ஏறி நின்று, இலக்குவன் ஆஞ்சநேயரின் தோள்மீதேறி வருவதைக் கண்டு, தன்னுடன் போரிடுவதற்குப் பொருத்தமான வீரன் மீண்டும் வருகிறான் என்று பூரிப் படைந்தான். முதல் பரணத்தை இந்திரஜித்து ஆஞ்சநேயர் மீது செலுத்தினான். அதற்கு எதிர்க்கணையினை இலக்குவன் தொடுக்க முற்பட்டபோது ஆஞ்சநேயர் தடுத்தார். தன்னை நோக்கி விரைந்து வந்த பாணம் தன்னில் படாதவாறு ஒருபுறம் பாய்ந்தார். அம்பானது உரிய இலக்கினைத் தீண்ட முடியாமல், வந்த வேகத்தில் திரும்பியது. தன்பாதையில் நின்றிருந்த பல வானரவீரர்களையும், அரக்க வீரர்களையும் தாக்கிச் சரித்து விட்டு, இந்திரஜித்துவின் காலடியில் போய் விழுந்தது.

சரமாரியாக இலக்குவன் இந்திரஜித்தை நோக்கிக் கணைகளைத் தொடுத்தார். அவற்றுக்கு எதிர்க்கணைகளைத் தொடுத்து இந்திரஜித்து அழித்தான். இவ்வாறு பல நாளிகைகள் விற்போர் தொடர்ந்தது. இதனால் இடையில் அகப்பட்ட இரு தரப்பு வீரர்களும் மாண்டனர். அரக்கர் படையைச் சேர்ந்த யானை, குதிரைகளும் அழிந்தன. இருவரும் ஒருவரை ஒருவர் மிஞ்சிவிடாமல் சமமான வலிமையுடன் போரிட்டனர்.

இந்திரஜித்துவிடம் பல தெய்வீக சக்தி வாய்ந்த அஸ்திரங்கள் இருக்கின்றன என்பதை ஏற்கனவே அறிந்திருந்தோம். அதே போன்று இலக்குவனிடமும் சிறப்பான கணைகள் குவிந்து கிடந்தன. எனவே தேவர்களே வியக்கும் வண்ணம் உக்கிரமான போர் நடந்து கொண்டிருந்தது.

**இராஜகுமாரன்**

அசையாமல் நின்றார். வேகமாக வந்த அந்தக் கணை இலக்குவனையும் ஆஞ்சநேயரையும் எதுவும் செய்யாமல் இருவரையும் வலம் வந்துவிட்டு விண்நோக்கி விரைந்து சென்று விட்டது.

தன்னை நோக்கி வந்த நாராயணாஸ்திரம், மகாவிஷ்ணுவின் கரத்தில் சுழலும் சக்கரப் படையின் அம்சமாகும். இலக்குவனே அந்த நாராயணமூர்த்தியின் அம்சமாக இருப்பதனால் அவரை அச்சக்கரப்படை எதுவும் செய்யாமல் சுற்றி வந்து வணங்கிவிட்டு அகன்றது.

இக்காட்சியைக் கண்ட இந்திரஜித்து துணுக்குற்றான். தான் இதுவரை நினைத்திருந்ததைப் போல் இராமரோ இலக்குமணனோ சாதாரண மனிதர்களாக இருக்க முடியாது என்று கருதினான். இருப்பினும் 'முன்வைத்த காலைப் பின்வைத்தலாகாது' என்ற துணிவுடன் மீண்டும் கணைகளை ஒன்றன் பின் ஒன்றாக ஏவினான்.

### 'குலத்துரோகி!'

இக்காலகட்டத்தில் தனது சிறிய தந்தையாரான விபீடணர் இலக்குவனுடன்- அருகில் வந்து நின்று சில ஆலோசனைகளை வழங்கியதனையும் அவதானித்தான். இதனால் விபீடணரின் மீது தன் ஆத்திரத்தைத் திருப்பினான். பல வகை வார்த்தைகளால் விபீடணரை வைதான். "குலத்துரோகி- சொந்தச் சகோதரனையே காட்டிக் கொடுத்த கோடரி," என்றெல்லாம் வசைபாடினான். இறுதியில் விபீடணரையும் ஒழித்துக் கட்டப்போவதாகக் கூறி ஒரு கணையினை அவரை நோக்கி வீசினான். இக்கணை விபீடணரை வந்து தாக்குவதற்கு முன்னர் இலக்குவன் எதிர்க் கணை ஒன்றை வீசி அதனை அழித்தான். உடனடியாக ஒரு வேற்படையினையும் விபீடணர் மீது இந்திரஜித்து வீச அதனையும் இலக்குமணன் துண்டித்தார்.

தன்மீது வேற்படையை வீசியதால் வெகுண்டெழுந்த விபீடணர் இந்திரஜித்தை நாடி ஓடினார். தன்னுடைய கையிலிருந்த தண்டாயுதத்தினால் இந்திரஜித்தின் தேர்ப்பாகனையும் தேரில் பூட்டியிருந்த குதிரைகளையும் அடித்துக் கொன்றார். தேரினையும் அடித்துச் சிதைத்தார். இதனால் மற்றுமொரு தேரினை எடுத்துக்கொண்டு வரும் நோக்குடன் வான்மீது தாவி மறைந்து, கோட்டைக்குள் புகுந்தான். நேராக தந்தை இராவணன் முன்போய் நின்றான். தன் முன்வந்து நின்ற தன் மகன் இந்திரஜித்துவின் நிலை கண்டு இராவணனே கலக்கமடைந்தான்.

"நிகும்பலை யாகம் செய்யச் சென்ற உன்கோலம் இவ்வாறு இருப்பதனால் அந்த யாகம் பூர்த்தி அடையவில்லை என்று கண்டு கொண்டேன். என்ன நடந்தது என்று விளக்கமாகக் கூறுவாயாக!"

இவ்வாறு இராவணன் கூறியதும் இந்திரஜித்து கூறியதாவது:

**நிலம் செய்து விசும்பும் செய்து**
**நெடியமால் படை நின்றானை**
**வலம் செய்து போயிற்று**
**என்றால்**
**மற்று இனி வலியது உண்டோ?**
**குலம் செய்த பாவத்தாலே**
**கொடும் பகை தேடிக்**
**கொண்டாய்.**
**சலம் செயின் உலகம் மூன்றும்**
**இலக்குவன் முடிப்பன் தானே!**

(யுத்த காண்டம்-3060)

பொருள்:

*"பூவுலகத்தையும் வானுலகத்தையும் படைத்தவனான திருமாலின் சக்கரப்படையை ஏவினேன். அந்த அஸ்திரம் இலக்குவனை வலம் வந்துவிட்டு மறைந்தது. இவ்வாறானால் இதைவிட வேறு வலிவுள்ள ஆயுதம் ஏதும் இருக்கிறதா? எமது அரக்கர் குலம் செய்த பாவத்தால் கொடிய பகையைத் தேடிக் கொண்டாய். இந்நிலையில் இலக்குவன் மூன்று உலகங்களையுமே அழித்தொழித்து விடுவானே!"*

### இராவணனின் சீற்றம்

இந்திரஜித்து முழுவதையும் கூறுவதற்கு முன்னரே சிங்கம்போலச் சீறி எழுந்தான் இராவணன். தன் மகனின் மேனியில் குருதி கொட்டும் எண்ணற்ற காயங்களைக் கண்டு வேதனைப்பட்ட தந்தை, மகன் கூறிய வார்த்தைகளால் சினம் கொண்டு கொடும் வார்த்தைகளால் மகனைச் சுட்டெரித்தான். "ஒரு சுத்த வீரன் என் மகன் என்று பெருமையோடிருந்தேன். ஆனால் நீயோ கோழைபோல் புறமுதுகு காட்டித் தப்பி வந்து விட்டாய்!" என்று ஏளனமாகப் பேசினான்.

தானே நேரடியாகப் போர் முனைக்குச் செல்லத் துணிந்தவனாக, "எனது இரதம் ஆயத்தமாகட்டும்!" என்று கர்ஜித்தான். இந்திரஜித்து தன் தந்தையின் தாளினைக் கெட்டியாகப் பிடித்தவண்ணம் தன்னை மன்னித்து விடுமாறு தேம்பித் தேம்பி அழுதான்.

தான் மீண்டும் போர்க்களம் சென்று இலக்குவனை வெற்றிகண்டு வருவதாகக் கூறிப்புறப்பட்டான். இறுதியில் தன் தந்தையைப் பார்த்து "தந்தையே! இலக்குவன் வீழ்ந்தான் என்ற செய்தியுடன் நானே வருவேன்; இல்லையேல் இந்திரஜித்து வீர சொர்க்கமடைந்தான் என்ற செய்தி வரும்!" என்று கூறியவண்ணம் மிகப் பிரமாண்டமான தேரில் ஏறிப் போர்க்களம் புறப்பட்டான்.

மீண்டும் போர் மும்முரமடைந்தது. இந்திரஜித்து வில்லில் அம்புகளைத் தொடுப்பதை நிறுத்திவிட்டு வேல், கதாயுதம் போன்றவற்றாலும் போரிடத் தலைப்பட்டான்.

இலக்குவன், தன்னிடமிருந்த மிக வலிமை பொருந்திய கணை ஒன்றினை எடுத்து நாணிலேற்றி எய்தான். பிறை போன்று வளைந்த கூரான நுனியினை உடைய அந்த அம்பு நேராக இந்திரஜித்துவின் கழுத்தைத் தாக்கியது.

தலை உடம்பிலிருந்து தனியாகப் பிரிந்து மேலே எழுந்து பின் பூமியில் விழுந்தது. தலையற்ற அவனுடலும் தரையில் சாய்ந்தது.

(தொடர்ந்து வரும்)

---

**இராமாயணப் போட்டி: 106**

**சரியானவிடை:- ஜாம்பவன்**

1. செல்வன் கோகுலதீபன், 262/15, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15.
2. தினகரனிஸ்மாயில், E90/6புளக்-J அல்அர்சத் வித்தியாலய வீதி, சம்மாந்துறை.
3. எஸ். மர்ஜீனா, கடியன்லேன பஜார், கெட்டபுலா.
4. செல்வி நிரஞ்சனா திருநாவுக்கரசு, வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
5. இ. உஷாநந்தினி, சரஸ்வதி வித்தியாலய வீதி, பெரிய நீலாவணை-01, கல்முனை.

**போட்டி இல. 108** கேள்வி:- **இலக்குவன் மீது இந்திரஜித்து வீசிய கணையின் பெயர் என்ன?**


நவம்பர் 22 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.108, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

# காதிலை பூ கந்தசாமி

## பிறந்த நாள் வாழ்த்து



மிஸ்டர் பொதியின் பிறந்தநாள் அவரது தெரிவுக்குழு இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, சீலன்மாமா, சிதம்பரம் தாத்தா, பம்மந்தர் அங்கிள், அமெரிக்கா பெரியப்பா (சர்வதேச பொலிசுக்காரர்), அவுஸ்திரேலிய சித்தப்பா, ஆகியோர் உட்பட பலர் "பொதி பல்லாண்டுகளை இழுத்தடித்து வாழ்க வாழ்க?" என்று வாழ்த்துகின்றனர்.

தமிழ்க்கட்சி உறவினர்கள், முஸ்லிம் காங்கிரஸ் சகாக்கள், மற்றும் புத்திசீவிகள், பொதி ஆயுள் நீடிக்க ஊட்டச்சத்து தந்த விமர்சகர்கள் உட்பட பலரும் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு சலுகை பெற்று மகிழ்ந்தனர்.

பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கலகலவென்று களைகட்ட உதவிய உற்றார், உறவினர், அயலார் மற்றும் சுற்றத்தார் அனைவருக்கும் நன்றி நவிலுகிறோம்.

இங்ஙனம், விழாக்குழுவினர்.

## விழாக் காட்சிகள்

நேற்று மாலை நடைபெற்ற பொதி பிறந்தநாள் விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் இனிக்க, இனிக்க அல்வா வழங்கப்பட்டது.

அல்வா சாப்பிட்ட அனைவருக்கும் கண்களை சுழற்றிக்கொண்டு வருகிறதா, அல்லது தலை சுற்றுகிறதா? என்று தெரியாதளவுக்கு தெளிவான நிலை காணப்பட்டதாக கூறினார்கள்.

**பிறந்தநாள் இன்று**
**பிறந்த நாள்.**
**பொதியைப் போன்ற**
**பொறிகளுக்கெல்லாம்**
**இன்று பிறந்தநாள்!**

என்ற இனிய பாடலை சீலன் மாமா உரத்துப் பாடினார்.

உடனே அரசியல் வல்லுநரான பம்மந்தர் அங்கிள் பாடி ஆடினார்.

**"ட்டுவிங்கிள் ட்டுவிங்கிள்**
**சூப்பர் ஸ்டார்.**
**தீர்வுப்பொதிதான்**
**சூப்பர் ஸ்டார்,**
**எனக்கு கிடைத்ததும்**
**சூப்பர்தான்.**
**தங்கா போனதால்**
**சூப்பர் சான்ஸ்."**

என்ற பாடலை சுத்தமான ஆங்கில உச்சரிப்புடன் பாடி ஆடினார். இடைக்கிடையே உச்சரிப்பு வேகத்தில் எச்சில் பறந்தது.

சபா-சிதம்பரம் தாத்தா தன்னைப் பாராட்டி தொலைக்காட்சியில் விளம்பரம் செய்ததை நினைவு கூர்ந்த பொதி, அவர் கையைப் பற்றிக்கொண்டு ஆடியது.

**ஐம்பதிலும் ஆசைவரும்.**
**ஆசை வந்தால் பதவி வரும்**
**இதில் அந்தரங்கம் கிடையாதய்யா**
**நாட் செல்ல நாட் செல்ல**
**நாற்காலி சுகம்தானய்யா!**

பாடல் முடிந்ததும் சிதம்பரம் தாத்தா வெட்கப்பட்டார்.

உடனே அவர் அருகில் சென்ற பம்மந்தர் அங்கிள் காதோடு பாடினார் ஒரு பாட்டு.

**அந்த நாள் ஞாபகம்**
**நெஞ்சிலே வந்ததே**
**நண்பரே! நண்பரே!**
**இந்தநாள் அன்றுபோல்**
**இல்லையே அது ஏன்?**
**நண்பரே! நண்பரே!**

பம்மந்தர் சுற்றும் முற்றும் பார்க்கிறார். யாராவது தங்களைக் கவனிக்கிறார்களா என்று பார்த்து விட்டு பாடத் தொடங்குகிறார்.

**பொடியள் களத்திலே**
**ஆயுதம் கையிலே!**
**எவ்வளவோ சொல்லியும்**
**எறிகிறார் இல்லையே!**
**விவேகம் என்றும்**
**அடக்கம் என்றும்**
**நூறுநூறு கதைகள் சொல்லியும்**
**நோ யூஸ்! நோ யூஸ்!**
**ஓ... மை காட்!**

பாடலை கேட்டுக்கொண்டே அமெரிக்கா பெரியப்பா வந்து முதுகில் தட்டிக் கொடுக்கிறார்.

**ஓஹோ அமெரிக்கா**
**ஆஹா அமெரிக்கா**
**உன்னைக் கண்தேடுதே**
**உறவாடவே மனம் நாடுதே**

என்ற பாடலை பாடிக்கொண்டு தமிழ்க்கட்சிகள் பல சுற்றிநின்று கும்மியடித்தன.

அமெரிக்காப் பெரியப்பாவின் காதில் சீலன் மாமா ஏதோ கிசுகிசுத்ததை அவதானிக்க முடிந்தது.

உடனே பெரியப்பாவின் கழுகுக் கண்களில் சந்தேகப் பார்வையை காண முடிந்தது.

**"அந்தநாளில் கண்டனம்**
**இந்த நாளில் கரிசனமா?**
**இதை நான் நம்பணுமா?"** என்று காட்டமாகக் கேட்டார்.

தமழ்க்கட்சிகள், உடனே தயவாக பவ்வியமாக முன்னாள் வளைந்து,தலை வணங்கிக்கொண்டு பின்வருமாறு உரைத்தன:

**ஐயா! அமெரிக்கா!**
**அது நாமல்ல அது நாமல்ல**
**நாம் அது அல்ல.**
**நமக்குள் இருந்த**
**சிவப்பு ஆடுகள்!**
**அந்த ஆடுகளையெல்லாம்**
**மந்தையைவிட்டு விரட்டி விட்டோம்.**
**இப்போது இருப்பவை எல்லாம்**
**கறுப்பு ஆடுகள்!**

தமிழ்க் கட்சிகளின் விளக்கத்தால் அமெரிக்க பெரியப்பாவின் முகத்தில் மகிழ்ச்சி. நுரைததும்பும் மதுக் கோப்பைகளை தன்பரிசாக பரிமாற உத்தரவிட்டார்.

**"ஹூ இஸ்த ரெட் ஷிப்**
**அது யார் யார் யார்?**
**இந்த கறுப்பாட்டு மந்தையில்**
**சிவப்பாடு அது யார் யார்?"**

என்று பாடிக்கொண்டே போகிறார் அமெரிக்கப் பெரியப்பா.

தமிழ்க் கட்சிகள் தன்னைப் பற்றித்தான் தவறாக கூறிவிட்டனவோ என்று சிதம்பரம் தாத்தா சந்தேகப்படுகிறார். அதனால் உணர்ச்சிவசப்பட்டு- அதாவது- டென்ஷனாகி ஏதோ பேசுகிறார்.

அதேநேரம் தமிழ்க் கட்சிகளுக்குள்ளும் பொதியோடு ஆடுவது யார் என்பதில் பிரச்சனை வெடிக்கிறது.

**வாராய் நீ வாராய்**
**போகுமிடம் வெகுதூரமில்லை**
**வாராய் நீ வாராய்**

ஒவ்வொரு கட்சியாக இழுத்துப்போய் அல்வா கொடுக்கிறது பொதி.

அல்வா ருசியில் கண்கள் சொருக தமிழ்க் கட்சிகள் தள்ளாட, சீலன்மாமா கைதட்டுகிறார்.



பொதி பாடுகிறது

**ஆண்டொன்டு போனால்**
**வயதொன்று போகும்;**
**தீர்வென்று சொல்வார்**
**காலங்கள் போகும்**
**காலங்கள் போனால்**
**கோலங்கள் மாறும்**
**மாறிய பின்னால்**
**என் குணமும் தெரியும்.**
**ஹா.ஹா.ஹா...!**

இறுதியாக சிதம்பரம் தாத்தா நிறைவுப் பாடல் பாடினார். தொலைக்காட்சிகள் நேரடி ஒளிபரப்புச் செய்தன.

**கோடிப் பொதிகளிலே**
**கொடுக்கும் பொதி எந்தப் பொதி**
**கொங்கு லங்கா நாட்டினிலே**
**குளிர்ந்த பொதி எந்தப் பொதி**
**தேடிவந்தோர் இல்லமெல்லாம்**
**ஷெல் வம் தருவது எந்தப் பொதி**
**ஜெக ஜெகத்தார் எல்லாம்**
**சப்போர்ட் தரும் இந்தப்பொதி!**

(கண்மூடி மெய்யுருகி நிற்கிறார்)

